بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 7 - 8

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1446 ஷஃபான் 14 - 21★ ஹிஜ்ரி ஷம்ஸி 1404 தப்லீஃக் 13 - 20
★13 - 20 பிப்ரவரி 2024

## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِیۡنَ اسۡتَجَابُوۡا لِرَبِّہِمۡ
وَاَقَامُوا الصَّلٰوۃَ ۪ وَاَمۡرُہُمۡ شُوۡرٰی
بَیۡنَہُمۡ ۪ وَمِمَّا رَزَقۡنٰہُمۡ یُنۡفِقُوۡنَ

**பொருள்**

மேலும் அவர்கள் தங்கள் இறைவனுக்குச் செவி சாய்த்துத் தொழுகையை நிலைநாட்டுகின்றனர். அவர்களது பிரச்சனைகள் அவர்களுக்கிடையே கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படுகின்றன. மேலும் நாம் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து அவர்கள் செலவழிக்கின்றனர்.
(அஷ்ஷூரா: 39)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியைக் குறித்த முன்னறிவிப்பு

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

بِاِلۡہَامِ اللّٰہِ تَعَالٰی وَاِعۡلَامِہٖ عَزَّوَجَلَّ

(அடையாளங்களும், கம்பீரமும் மிக்க அல்லாஹ்வின் முன்னறிவிப்பு)

அந்த மேன்மேலும் கருணை காட்டுபவனும், சிறப்பு மிக்கவனும், சான்றான்மையும், மேன்மையும் கொண்டவனும் ஒவ்வொரு பொருளின் மீது ஆற்றல் படைத்தவனுமாகிய அந்த இறைவன் ( جَلَّ شَانُہٗ وَعَزَّ اِسۡمُہٗ (கம்பீரம் பொருந்திய பெயர் கொண்ட அந்த கண்ணிய மிக்க வல்லமையுள்ள இறைவன்) தனது இல்ஹாம் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான்:

நீ என்னிடம் கேட்டதற்கிணங்க ஒரு கருணையின் அடையாளத்தை நான் உனக்கு தருகின்றேன். நான் உன்னுடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் எனது கருணையினால் அவை ஒப்புக் கொள்ளப்படுவதற்கான தகுதியை வழங்கினேன். ஹோஷியோர்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கொண்ட உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கிவிட்டேன். எனவே உமக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் வழங்கப்படுகின்றது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளமும் உமக்கு வழங்கப்படுகின்றது. மேலும், வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றியாளரே! உம் மீது சாந்தியும், சமாதானமும் உண்டாகட்டுமாக!

இறைவன் இதை கூறினான்: ஏனெனில், வாழ்வை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்புப் பெற வேண்டும். கல்லறையில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வரவேண்டும்; இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பும், இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் மக்கள் மீது வெளிப்பட வேண்டும்; உண்மை அதன் அனைத்து அருட்களுடன் வரவேண்டும். மேலும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் ஓடி விடவேண்டும். மேலும், நான் வல்லமையுள்ளவன்; எதனை விரும்புகின்றேனோ அதனை நான் செய்பவன் ஆவேன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் நான் உம்முடன் இருக்கின்றேன் என்று அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும், எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை இல்லையோ, மேலும் எவர்கள் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைத் தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் நிராகரிப்பு மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு தெளிவான அடையாளம் கிடைக்க வேண்டும். மேலும், குற்றவாளிகளின் வழி வெளிப்பட்டு விட வேண்டும்.

ஆக, உமக்கு நற்செய்தி வழங்கப்படுகின்றது. ஓர் அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமக்கு கிடைப்பார். அந்தப் புதல்வன் உமது வித்திலிருந்தே தோன்றியவராகவும், உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சேர்ந்தவராகவுமே இருப்பார். அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்பட்டுள்ளது. அவர் உட்புற அசுத்தத்திலிருந்தும் தூய்மை அடைந்தவராவார். அவர் அல்லாஹ்வின் ஒளி ஆவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் உள்ளது. அந்த அருள் அவருடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உடையவராகவும், மகத்துவ மிக்கவராகவும் செல்வம் படைத்தவராகவும் இருப்பார்.

அவர் உலகத்திற்கு வருவார். தமது குணப்படுத்தும் தன்மையாலும் உண்மையான ஆன்மாவின் அருட்களாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனெனில், இறைவனின் கருணையும், அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவ மிக்க வார்த்தைகளுடன் அனுப்பி இருக்கின்றது. அவர் மிகுந்த புத்திக் கூர்மை உள்ளவராகவும், சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். பௌதீக மற்றும் ஆன்மிக ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குபவர் ஆவார். (இதன் பொருள் புரியவில்லை) திங்கட்கிழமை ; அருளுக்குரிய திங்கட்கிழமை. உமது நேசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவர் நற்பேறு கொண்டவர். مَظۡہَرُ الۡاَوَّلِ وَالۡاٰخِرِ مَظۡہَرُ الۡحَقِّ وَالۡعَلَاءِ کَاَنَّ اللّٰہَ نَزَلَ مِنَ السَّمَآءِ

(அவரிடமிருந்து முதலும், இறுதியும் வெளிப்படும்.அவரிடமிருந்து உண்மையும், உயர்வும் வெளிப்படும். இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்ததைப் போன்று இருக்கும்)

அவரது வருகை மிகவும் அருளுக்குரியதாகவும், இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்கு காரணியாகவும் இருக்கும். ஒளி வருகின்றது; ஒளி. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணம் கமழும்படி செய்வான். நாம் எமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும். அவர் விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருட்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். وَکَانَ اَمۡرًا مَّقۡضِیًّا (இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.)

(மஜ்முஆஃ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 100, இஷ்திஹார்.பிப்ரவரி 20, 1886)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**வக்ஃபே ஜதீதுடைய 67-வது ஆண்டில் ஜமாஅத் உறுப்பினர்கள் புறமிருந்து முன்வைக்கப்பட்ட பொருள் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்புகள் மற்றும் 68-ம் ஆண்டின் துவக்கத்திற்கான அறிவிப்பு**

ஆதமின் மகனே! நீ உனது கருவூலத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டு மன நிம்மதி அடைந்து விடு! தீப்பிடித்து விடுவதற்கான ஆபத்தும் இல்லை ; நீரில் மூழ்கிவிடுவதற்கான அச்சமும் இல்லை. மேலும் எந்தத் திருடனும் திருடி விடுவதற்கான பயமும் இல்லை. என்னிடம் வைக்கப்பட்டுள்ள கருவூலத்தை நீ அதற்கு மிக அதிகம் தேவை உடையவனாக இருக்கும் அந்நாளில் உனக்கு முழுமையாகத் தருவேன் (ஹதீஸே குத்ஸீ)

கருமித்தனமும், ஈமானும் ஓர் உள்ளத்தில் ஒன்றிணைய முடியாது என்று நான் உறுதியாகப் புரிகிறேன். எவர் உண்மையான உள்ளத்துடன் இறைவன் மீது ஈமான் கொள்கிறாரோ அவர் அவரது இரும்புப் பெட்டியில் அடைப்பட்டிருக்கும் பணத்தை மட்டும் தனது பொருளாகக் கருதுவதில்லை ; மாறாக, அவர் இறைவனின் எல்லாக் கருவூலங்களையும் தன்னுடைய கருவூலங்களாகக் கருகிறார் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)

அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் 67-வது ஆண்டு டிசம்பர் 31-ல் நிறைவடைந்தது. உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு 1,36.81,000 பவுண்ட் பொருள் தியாகத்தை சமர்ப்பிப்பதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. இந்த வசூல் கடந்த ஆண்டை விட 7,36,000 (ஏழு லட்சத்து முப்பத்தி ஆறாயிரம்) பவுண்ட் அதிகமாகும். அல்ஹம்துலில்லாஹ்!

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 ஜனவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **03ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ
وَمَا تُنْفِقُوْا مِنْ شَيْءٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ

இந்த வசனத்தின் பொருள்:

நீங்கள் விரும்புகின்றவற்றிலிருந்து இறைவழியில் செலவு செய்யாத வரை உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையைப் பெறமுடியாது. மேலும், நீங்கள் எதை செலவு செய்தாலும் அல்லாஹ் அதை நிச்சயமாக நன்கு அறிகின்றான். (ஆலி இம்ரான்: 93)

உயர் வகையான நன்மை, முழுமையான நன்மை பிர் என்று கூறப்படுகிறது. அல்லாஹ் திருக்குர்ஆனில் இது குறித்து இவ்வாறு கூறுகின்றான்: நீங்கள் உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செலவு செய்யாத வரை, அவற்றை அல்லாஹ்வின் விருப்பத்திற்காக செலவு செய்யாத வரை உங்களால் முழுமையான நன்மையைப் பெற முடியாது.

எனவே அல்லாஹ்வின் விருப்பத்தைத் தேடிக் கொண்டிருக்கும் உண்மையான நம்பிக்கையாளர் ஒருவர் தன்னை இறைவனுக்கு அருகில் கொண்டு வரக் கூடிய நன்மைகளின் அந்த தரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்; செய்யவும் வேண்டும். திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்குப் பல இடங்களில் பலவிதமாக வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. பல்வேறு நன்மைகள் பற்றி கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் வழியில் பொருளை செலவு செய்வதையும் ஒரு நன்மையாகக் கூறப்பட்டுள்ளது.

இறைவழியில் செலவு செய்வதை மிகப் பெரும் நன்மையாகக் இந்த வசனத்திலும் கூறப்பட்டுள்ளது. மேலும் கூறுகின்றான்: எந்த செல்வத்தை அல்லது எந்தப் பொருளை நீங்கள் நேசிக்கின்றீர்களோ அதை நீங்கள் இறைவழியில் செலவு செய்வீர்களாயின் இது பெரிய நன்மையாக ஆகும். ஐயமின்றி, அவனது விருப்பத்தைப் பெறுவதற்காக செய்யப்பட்ட எல்லா நன்மைகளுக்கும் அல்லாஹ் வெகுமதி வழங்குகின்றான்தான். ஆனால், மனிதனுக்கு செல்வத்தின் மீது அன்பு இருப்பதனால் அதன் பக்கமும் சிறப்பு கவனமூட்டப்பட்டுள்ளது.

எனவே ஈமான், உண்மையான நன்மை மற்றும் தியாகத்தின் உயர்தரத்துக்கான ஒரு தரமாக அல்லாஹ் நீங்கள் விரும்புவதைத் தியாகம் செய்வதை நிர்ணயித்துள்ளான். இது குறித்து அவன் இவ்வாறு கூறியுள்ளான்: (அதன் மீதான) அந்த அன்பு இல்லாமல், நீங்கள் விரும்புவதை அல்லாஹ்வின் வழியில் செலவிடுவதுதான்: அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக அதைத் தியாகம் செய்து விடுவதுதான் உண்மையான நன்மையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது குறித்து பல இடங்களில் விளக்கிக் கூறியுள்ளார்கள். எனவே அன்னார் (அலை) ஓரிடத்தில் கூறுகிறார்கள்: செல்வத்தின் மீது அன்பு இருக்கக் கூடாது.

இன்றைய காலத்திலோ இது மிகவும் சிரமமான பணியாகும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: செல்வத்தின் மீது அன்பு இருக்கக் கூடாது.

இறைவன் கூறுகிறான்:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

அதாவது, நீங்கள் விரும்புகின்றவற்றிலிருந்து அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாத வரை உங்களால் ஒருபோதும் நன்மையைப் பெற முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தோடு இன்றைய நாள்களின் நிலைமைகளை ஒப்பிட்டால், இந்தக் காலத்தின் நிலைமைகள் மீது பரிதாபம் ஏற்படுகிறது. ஏனெனில், உயிரை விடப் பிடித்தமானது எதுவுமில்லை. மேலும் அந்தக் காலத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில், அல்லாஹ்வின் வழியில் உயிரைத்தான் கொடுக்க வேண்டி வந்தது. அன்னார்(அலை) கூறுகிறார்கள்: உங்களைப் போன்று அவர்களுக்கும் மனைவி, மக்கள் இருந்தார்கள். உயிர் அனைவருக்கும் பிடித்தமானதாக உள்ளது. ஆனால், அவர்கள் எப்போது வாய்ப்பு கிடைத்தால் அல்லாஹ்வின் வழியில் (உயிரை) அர்ப்பணித்து விட வேண்டும் என்ற ஆவலில் இருந்து வந்தார்கள். பிறகு அன்னார் கூறினார்கள்: பயனற்ற, வீணான பொருட்களை செலவு செய்வதால் ஒரு மனிதன் நன்மை செய்வதாக வாதிக்க முடியாது. நன்மையின் வாசல் குறுகலானதாக உள்ளது. நன்றாக நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள். வீணான பொருட்களை செலவு செய்தால் எவரும் அதில் நுழைய முடியாது. ஏனெனில், திருக்குர்ஆனில் தெளிவாக இவ்வாறு உள்ளது:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

விருப்பத்திலும், விருப்பமான, நேசத்திலும் நேசமான பொருளை செலவு செய்யாத வரை இறைவனுக்கு விருப்பமானவர், பிடித்தமானவர் என்ற தரத்தைப் பெற முடியாது.

துன்பத்தை சகித்துக் கொள்ள விரும்பவில்லை என்றால், உண்மையான நன்மையினை மேற்கொள்ள விரும்பவில்லை என்றால் எவ்வாறு வெற்றி பெற முடியும்? நோக்கத்தை அடைய முடியும்? ஸஹாபா பெருமக்களுக்குக் கிடைத்த அந்தத் தரத்தை

அவர்கள் இலவசமாக அடைந்து விட்டார்களா? உலகப் பட்டங்களைப் பெறுவதற்காக எவ்வளவு செலவுகளையும், துன்பங்களையும் சகித்துக் கொள்ள வேண்டி வருகிறது. பிறகுதான் ஒரு சாதாரண பட்டம் கிடைக்கிறது. அதன் மூலம் மனநிறைவும், மனநிம்மதியும் கிடைக்க முடியாது. பிறகு சிந்தித்துப் பாருங்கள். உள்ளத்துக்குத் திருப்தியளிக்கக் கூடிய, இதயத்துக்கு நிம்மதியளிக்கக் கூடிய மற்றும் கருணையின் எஜமானனின் திருப்திக்கு அடையாளமான ரலியல்லாஹு அன்ஹும் என்ற பட்டம் வெறுமனே எளிமையாகக் கிடைத்து விட்டதா?

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: விஷயம் என்னவென்றால், தற்காலிக சிரமங்கள் பொறுத்துக் கொள்ளப்படாத வரை உண்மையான மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற இறை திருப்தி கிடைக்க முடியாது. இறைவனை ஏமாற்ற முடியாது. இறைவிருப்பத்தைப் பெறுவதற்காக சிரமங்களைப் பற்றி கவலைப்படாதவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். ஏனெனில், நிரந்தர மகிழ்ச்சியும், நிரந்தர நிம்மதியின் ஒளியும் இந்தத் தற்காலிக சிரமத்திற்குப் பிறகுதான் நம்பிக்கையாளருக்குக் கிடைக்கிறது. பிறகு அன்னார் (அலை) கூறுகிறார்கள்: உலகத்தில் மனிதன் செல்வத்தை மிக அதிகமாக நேசிக்கிறான். இதனாலயே கனவுகளுக்கு விளக்கம் அளிக்கும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஒருவர் கனவில் கல்லீரலை எடுத்து யாருக்காவது கொடுப்பது போன்று பார்த்தால் அதன் பொருள் செல்வமாகும். இதன் காரணமாகவே, உண்மையான இறையச்சம் மற்றும் ஈமானைப் பெறுவதற்கு இவ்வாறு கூறியுள்ளான்:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

நீங்கள் மிகவும் விருப்பமான பொருளை செலவு செய்யாத வரை உங்களால் உண்மையான நன்மையைப் பெற முடியாது.

ஏனெனில், இறைவனின் படைப்பினத்தின் மீதான அனுதாபம் மற்றும் நன்னடத்தை என்பது ஒரு பெரும் பங்கு செல்வத்தை செலவு செய்வதற்கான தேவையை எடுத்துரைக்கிறது. இனத்தின் மக்கள் அதாவது உங்களது சமுதாயத்து மக்கள் மற்றும் இறைவனின் படைப்பினங்கள் மீது அனுதாபம் காட்டுவது எத்தகைய விஷயம் என்றால், அது ஈமானின் இரண்டாவது அங்கமாகும். அதுவன்றி ஈமான் முழுமையடைவதுமில்லை ;உறுதியாவதுமில்லை.

மனிதன் அர்ப்பணித்திடாத வரை மற்றவர்களுக்கு எப்படி பலன் சேர்க்க முடியும்? பலனை எட்ட வைப்பதற்கோ தியாகம் செய்ய வேண்டி வருகிறது. மற்றவர்களுக்குப் பலன் சேர்ப்பதற்கும், அனுதாபம் காட்டுவதற்கும் அர்ப்பணம் அவசியமான விஷயம் ஆகும்.

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

என்ற இந்த வசனத்தில் அர்ப்பணத்திற்கான போதனை மற்றும் நேர்வழி வழங்கப்பட்டுள்ளது. எனவே பொருளை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதும் மனிதனின் நற்பேறு, இறையச்சத்தின் தரம் மற்றும் அளவுகோல் ஆகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்வில் இறைவனுக்காகவே அர்ப்பணிப்பதற்கான தரமும், அளவுகோலும் என்னவாக இருந்தது என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு தேவையை எடுத்துரைத்தார்கள். அவர்கள் வீட்டின் மொத்த மூலதனத்தையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள். வீட்டின் பொருள்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

அடுத்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்.

செல்வத்தை நேசிக்காதீர்கள்!

அல்லாஹ் கூறுகின்றான்:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

அதாவது, நீங்கள் உங்களுக்கு மிகவும் பிடித்தமான பொருளை செலவு செய்யாதவரை உங்களால் பிர் எனும் நன்மை வரை சென்றடைய முடியாது. அதாவது பிர் எனும் அந்த உண்மையான நன்மை வரை, முழுமையான நன்மை வரை சென்றடைய முடியாது.

(தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) தொகுதி 3, பக்கம் 180)

நான் முதலில் கூறியது போன்று, உயர் வகையான நன்மை, முழுமையான நன்மை பிர் என்றழைக்கப்படுகிறது. எனவே இதுதான் அந்த ரகசியம் ஆகும். இதை இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் மக்கள் சரியான முறையில் புரிந்துள்ளார்கள். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தர்பிய்யத்தின் தாக்கத்தினாலயே இன்று வரை இந்தத் தியாகங்களுக்கான தரத்தை நாம் பார்த்துக் கொண்டே செல்கிறோம். ஸஹாபா பெருமக்கள் நிலைநாட்டிய அந்தத் தரம், பிறகு அவற்றை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் அன்னாருக்கு அருகில் இருந்தவர்கள், அன்னாருடைய ஸஹாபா பெருமக்கள் நிலைநாட்டினார்கள். அதற்குப் பிறகு கிலாஃபத்தின் காலகட்டத்தில் ஒவ்வொரு காலத்திலும் நாம் இந்த தியாகங்களைப் பார்த்து வருகிறோம்.

இன்று வரை இதே தியாகங்கள் நமக்குத் தென்படுகின்றன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பொருள் தியாகத்தை மிகவும் அதிகமாக வலியுறுத்தியுள்ளார்கள். மேலும் இந்த விஷயத்தை அன்னாருடைய ஸஹாபா பெருமக்கள் புரிந்தார்கள். மேலும் இதன்படி நன்றாக அமல் செய்தார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் இப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இருவரைத் தவிர வேறு யார் மீதும் பொறாமைப்படக் கூடாது.ஒருவர், அல்லாஹ் தனக்கு செல்வத்தை வழங்கியிருக்க, அதை அவன் வழியில் செலவு செய்து விடும் மனிதர் ஆவார். இரண்டாமவர் அல்லாஹ் தனக்குப் புரிதலையும், அறிவுடைமையையும், மதிநுட்பத்தையும் வழங்கியிருக்க, அதை வைத்து மக்களுக்கு தீர்ப்பு வழங்கக் கூடிய அவர்களுக்குக் கற்பிக்கக் கூடிய மனிதர் ஆவார்.

எனவே இந்தத் தரத்தைதான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் ஸஹாபிகளிடம் உருவாக்குவதற்காக அறிவுரை கூறினார்கள். மேலும் இது உருவானது. ஓர் அறிவிப்பில் வருகிறது. அதை ஹஸ்ரத் அபூ மஸ்ஊத் அன்ஸாரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸதக்கா வழங்குமாறு வழிகாட்டும்போது, எங்களில் ஒருவர் சந்தைக்கு செல்வார். அங்கு கடுமையாக உழைத்து ஊழியம் செய்வார்.

அதில் ஊழியமாக ஒரு முத் அளவு தானியங்கள் ஏதும் கிடைக்கும் - இந்த முத் என்பதும் சில கிலோவிற்கு நிகரான ஓர் அளவுகோல் ஆகும். எது கிடைத்தாலும் அவர் அதை சதகாவாக வழங்கிவிடுவார். நாம் அதில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அறிவித்த அந்தத் திட்டத்தில் பங்கு பெற வேண்டும்; அதுவும் சம்பாதித்துப் பங்கு பெற வேண்டும் என்ற முயற்சி இருக்கும். யாரிடமிருந்தாவது கேட்டு வாங்கி பங்கு பெற வேண்டும் என்றல்ல ; மாறாக கடினமாக உழைத்து சம்பாதித்துப் பெற வேண்டும்.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: இப்பொழுது அவர்களில் சிலருடைய நிலை எப்படி இருக்கின்றது? என்றால், அந்தத் தியாகங்களுக்கு அல்லாஹ் அவர்களுக்கு எவ்வளவு அதிகமாக நற்கூலி வழங்குகின்றான் என்றால், இப்பொழுது அவர்களிடம் ஒரு லட்சம் திர்ஹம்கள் இருக்கின்றன. எவர்கள் கூலி வேலை செய்து சந்தா கொடுத்து வந்தார்களோ அவர்கள் இப்போது லட்சங்களுக்கு அதிபதிகளாக உள்ளனர். ஆக, இதுதான் தியாகத்துக்கான அந்த பரக்கத் ஆகும்.

ஆக, இந்த ரகசியத்தைத்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நம்மையும் மேற்கொள்ளுமாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இந்த விஷயத்தைத்தான் அல்லாஹ் நமக்குத் திருக்குர்ஆனில் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளான்: நீங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள். மேலும், உங்களுக்குப் பிடித்தமானவற்றிலிருந்து செலவு செய்யுங்கள். அறிவிப்புகளில் இதுவும் வருகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிலவேளை சந்தா வழங்குமாறு திட்டம் அறிவிப்பார்கள். அப்பொழுது ஸஹாபா பெருமக்கள் வீட்டில் என்ன இருக்கிறதோ அதைக் கொண்டு வருவார்கள். அங்கு பல்வேறு பொருட்கள் குவிந்து விடும்.

ஆக, ஜமாஅத்தின் தேவைக்கு சந்தா தேவைப்படுகிறது; செல்வம் தேவைப்படுகிறது. பொருள்கள் தேவைப்படுகின்றன. நபிமார்களின் ஜமாஅத் எப்பொழுதும் இதைப் புரிந்தது. மேலும் தத்தமது அளவில் அவர்களால் எந்த அளவுக்குத் தியாகம் செய்ய முடிந்ததோ அதை அவர்கள் செய்தார்கள்.

பொருள் தியாகத்தில் எவ்வளவு அருட்கள் இருக்கின்றன? என்பது தொடர்பாக ஓரிடத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள். அன்னார் (ஸல்) தம் உறவின் சகோதரி ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களுக்கு இந்த அறிவுரையை வழங்கினார்கள். அல்லாஹ்வின் வழியில் எண்ணி எண்ணி செலவு செய்யாதே! இல்லையென்றால், அல்லாஹ்வும் உனக்கு எண்ணி எண்ணியே கொடுத்து வருவான். உனது பணப்பையின் வாயை அடைத்து வைத்து கருமித்தனமாக அமர்ந்து கொள்ளாதே! இல்லையென்றால், பிறகு அதன் வாய் அடைத்தே வைக்கப்பட்டிருக்கும்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: எவ்வளவு ஆற்றல் இருக்கிறதோ மனம் திறந்து செலவு செய்! அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்திடு! அல்லாஹ்வும் கொடுத்துக் கொண்டே செல்வான்.

பிறகு, அன்னார் ஒரு தருணத்தில் கூறினார்கள்: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: தினமும்

காலையில் வானவர்கள் இருவர் இறங்குகிறார்கள். அவர்களில் ஒருவர் கூறுகிறார்கள்: அல்லாஹ்வே! (உன் வழியில்) செலவு செய்யக் கூடிய வள்ளலுக்கு இன்னும் அதிகம் வழங்குவாயாக! மேலும் அவன் வழியில் செலவு செய்யக் கூடியவர்களை இன்னும் பிறக்கச் செய்வாயாக! இன்னொருவர் கூறுவார்கள்: அல்லாஹ்வே! (உன் வழியில் செலவிடாமல் பொருளைத்) தடுத்து வைத்திருக்கும் கருமியை அழித்து விடுவாயாக! மேலும், அவருடைய செல்வங்களை இல்லாமல் செய்வாயாக!

எவ்வாறாயினும், இன்றைய நாட்களில் செலவு செய்யக் கூடிய வள்ளலுக்கு என்ன முக்கியத்துவம் உள்ளது? என்ற இந்த இரகசியம் அஹ்மதிகளுக்குத் தெரியும். பல்வேறு எடுத்துக்காட்டுகளால் அஹ்மதிய்யத்தின் வரலாறு நிறைந்து கிடைக்கின்றது. மேலும், ஒவ்வொரு நாளும் அதில் அதிகரிப்பு ஏற்பட்டுக் கொண்டே செல்கின்றது.

ஒருவர் எழுதியுள்ளார்: என்னிடம் சிறிதளவே ஒரு தொகை இருந்தது. அந்தத் தொகையை வைத்து நான் தொழில் செய்ய வேண்டி இருந்தது. சில அவசியமான பொருட்களை வாங்க இருந்தேன். முற்றிலும் வசதியற்ற நிலைமைகள் இருந்தன. இந்தத் தொழில் செய்ய முடியுமோ? முடியாதோ? என்று எனக்குப் புரியவில்லை. என் தந்தை என்னிடம், இது எவ்வளவு தொகையாக இருந்தாலும் இதை நீ சந்தாவில் கொடுத்து விடு! அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்து விடு என்று கூறினார்.

எனவே நான் சந்தா கொடுத்து விட்டேன். அல்லாஹ் எத்தகைய ஏற்பாட்டைச் செய்தான் என்றால், எனக்கு எத்தகைய ஓர் ஆர்டர் கிடைத்து விட்டது என்றால், அதனால் பன்மடங்கு அதிக தொகை எனக்குக் கிடைத்து விட்டது. பிறகு, நான் அந்தத் தொழிலைத் துவங்கினேன். அதில் அல்லாஹ் எவ்வளவு பரக்கத் ஏற்படுத்தினான் என்றால் அளவற்ற செல்வம் வரத் துவங்கியது. ஆக, இந்த அனுபவங்களை அல்லாஹுத்ஆலா இந்தக் காலத்திலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்பவர்களுக்கு அன்னாருடைய ஊழியர்களுக்கு அவர்களுடைய ஈமான் அதிகரிப்பதற்காகக் காட்டிக் கொண்டே இருக்கிறான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பல்வேறு தருணங்களில் பொருள் தியாகங்களுக்காக மிகவும் அதிகமாக வலியுறுத்தியுள்ளார்கள். ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இது ஹதீஸே குத்ஸீ ஆகும். அதாவது அல்லாஹ் கூறியதாக அன்னார் இதை எடுத்துரைத்தார்கள். அல்லாஹ் கூறுகிறான். ஆதமின் மகனே! நீ உனது கருவூலத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டு மன நிம்மதி அடைந்து விடு! தீப்பிடித்து விடுவதற்கான ஆபத்தும் இல்லை ; நீரில் மூழ்கிவிடுவதற்கான அச்சமும் இல்லை. மேலும் எந்தத் திருடனும் திருடி விடுவதற்கான பயமும் இல்லை. என்னிடம் வைக்கப்பட்டுள்ள கருவூலத்தை நீ அதற்கு மிக அதிகம் தேவை உடையவனாக இருக்கும் அந்நாளில் உனக்கு முழுமையாகத் தருவேன்.

அதாவது, மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்வு அப்பொழுது மனிதனுக்குத் தன்னுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும்? என்று எதுவும் தெரியாது. அவனுக்குத் தன்னுடைய நன்மைகளைப் பற்றியோ தெரியாது. அப்பொழுது அல்லாஹ் கூறுகின்றான்: உன்னுடைய தியாகங்களுக்காக நான் உனக்கு வெகுமதி வழங்குவேன். மேலும் அதன் மூலமாக உனது பாவமன்னிப்புக்கான ஏற்பாடு ஆகிவிடும். இதுதான் அல்லாஹ் நம்பிக்கையாளர் ஒருவருடன் செய்து கொள்ளும் வாணிபமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள் ; கருமித்தனமும், ஈமானும் ஓர் உள்ளத்தில் ஒன்றிணைய முடியாது என்று நான் உறுதியாகப் புரிகிறேன். எவர் உண்மையான உள்ளத்துடன் இறைவன் மீது ஈமான் கொள்கிறாரோ அவர் அவரது இரும்புப் பெட்டியில் அடைப்பட்டிருக்கும் பணத்தை மட்டும் தனது பொருளாகக் கருதுவதில்லை ; மாறாக, அவர் இறைவனின் எல்லாக் கருவூலங்களையும் தன்னுடைய கருவூலங்களாகக் கருதுகிறார். ஒளியால் இருள் அகன்று விடுவதைப் போன்று, தடுத்து வைத்தல் அவரை விட்டு விலகிவிடுகிறது. அதாவது, கருமித்தனம் அவரை விட்டு விலகி விடுகிறது. (மஜ்மூஆஃ இஷ்திஹாராத், தொகுதி 3, பக்கம் 498)

பிறகு, அன்னார் (அலை) கூறினார்கள்:

சமுதாயம் எல்லா வகையிலும் இந்த இயக்கத்துக்கு தொண்டாற்ற வேண்டும். நிதி ரீதியாகத் தொண்டாற்றுவதிலும் சோம்பல் இருக்கக் கூடாது. பாருங்கள்! உலகில் எந்த இயக்கமும் சந்தா இல்லாமல் இயங்குவதில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஆகிய எல்லாத் தூதர்களின் காலத்திலும் சந்தாக்கள் திரட்டப்பட்டன. எனவே நமது ஜமாஅத் மக்களும் இந்த விஷயத்தைக் கருத்திற் கொள்வது அவசியமாகும். இந்த மக்கள் முறையாக ஆண்டு முழுவதும் ஒரு ஒரு பைசாவாகக் கொடுத்தாலும் பல விஷயங்கள் நடக்க முடியும். (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 38 - 39, காதியான் பதிப்பு 1984)

இது தொடர்பாக ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் முன்மாதிரி என்னவாக இருந்தது? அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் திட்டத்திற்கு லெப்பைக் கூறியவாறு அன்னார் மேற்கொண்ட பணியை நிறைவேற்றுவதற்காக எவ்வாறு தியாகம் செய்தார்கள் என்று பாருங்கள்!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் அவர்களைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்கள்: நான் அனுமதியளித்தால் அவர்கள் எல்லாவற்றையும் இந்த வழியில் அர்ப்பணித்து விட்டு, தமது ஆன்மிக உறவைப் போன்று, பௌதீக உறவு மற்றும் எந்நேரமும் உடனிருப்பதற்கான உரிமையையும் நிறைவேற்றுவார்கள்.

பிறகு அன்னார் (அலை) எழுதினார்கள்: அன்னாருடைய சில கடிதங்களின் சில வரிகளை மாதிரிக்காக நான் காட்டுகிறேன். அவர்கள் எழுதினார்கள்: அதாவது முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள்;

நான் தங்களது வழியில் அர்ப்பணமாகிறேன். என்னிடமுள்ள எதுவும் என்னுடையதல்ல ; தங்களுடையதே. மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே! வழிகாட்டியே! என்னுடைய சொத்து, செல்வங்கள் அனைத்தும் மார்க்கத்தைப் பரப்புவதற்காக செலவாகிவிட்டால், எனது வாழ்வின் குறிக்கோள் நிறைவேறிவிட்டது என்று நான் முழுவதும் நேர்மையாகப் பணிவுடன் கூறுகிறேன். பராஹீனே அஹ்மதிய்யா நூல் அச்சிடும் பணியில் இடைநிறுத்தம் ஏற்பட்டதனால் நூலை வாங்குபவர்கள் கவலை தோய்ந்துள்ளார்கள் என்றால், அதாவது வாங்குபவர்கள் குறைவு காரணமாகவோ அவர்கள் பணம் தராததன் காரணமாகவோ நூலை வெளியிடுவதில் ஏதும் தடை வருகிறது என்றால், இந்த அற்பமான தொண்டாற்றுவதற்கு எனக்கு அனுமதி தாருங்கள். அதாவது அதன் முழு விலையையும் செலுத்தி விட்டு என்னிடமிருந்து திருப்பி அனுப்பி விடுகிறேன். மேலும் வரும் வரவையும் திருப்பி அனுப்பி விடுகிறேன்.

மேலும், மிகவும் வேதனையுடன் அன்னார் (ரலி) இவ்வாறு கூறினார்கள்: இது எனது நற்பேறு ஆகும். மாறாக, அன்னார் (ரலி) கூறினார்கள்: எனது நாட்டமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இதைப் பணிவுடன் கூறினார்கள்: பராஹீன் (அஹ்மதிய்யா எனும் நூலை) அச்சிடுவதற்கான முழு செலவும் என் மீது சுமத்தப்பட வேண்டும் என்பது எனது நாட்டமாகும். (ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானீ கஸாயீன் தொகுதி 3, பக்கம் 35 -36)

இதுதான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தியாகத்தின் தரமாக இருந்தது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தை அறிவித்தபோது எண்ணற்ற மக்கள், ஏழை மக்கள் சிறிது சிறிதான தொகையைக் கொண்டு வந்து சந்தாவில் கொடுக்கத் துவங்கினார்கள். ஒருவர் கோழியைக் கொண்டு வந்தார் என்றால், ஒருவர் கோழி முட்டையைக் கொண்டு வந்தார். மேலும், எங்களிடம் என்ன இருந்ததோ அதை நாங்கள் சமர்ப்பித்து விட்டோம் என்று கூறினார்கள்.

அந்தக் காலத்திலும் ஏழைகளின் உதாரணங்களை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முன்வைத்து வந்தார்கள். பழைய சான்றோர் சிலருடைய உதாரணங்களையும் முன்வைத்து வந்தார்கள். இது தொடர்பாகவே அன்னார் ஹஸ்ரத் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் உதாரணத்தையும் முன்வைத்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் முதல் துணைவியாரான ஹஸ்ரத் உம்மு நாஸிர் (ரலி) அவர்களின் தந்தையார் ஆவார்கள். இவ்வாறே இவர்கள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் தாய் வழிப்பாட்டனார் ஆவார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஒரு நண்பரிடமிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தைக் கேள்விப்பட்டார்கள். அவர்கள் கேட்டதுமே கூறினார்கள்:

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

இவ்வளவு பெரிய வாதம் புரியும் நபர் பொய்யராக இருக்க முடியாது. எனவே எனக்கு எந்த சான்றுகளுக்கும் தேவை இல்லை. இந்த வாதமே எவ்வளவு பெரியது என்றால், எனக்கு வேறு எந்த சான்றையும் கேட்க வேண்டிய தேவையே இல்லை. அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்தான் என்று நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மேலும் இவர்கள் மிக விரைவாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவர்கள் பெயரைத் தம் 12 ஸஹாபிகளில் ஒருவராக எழுதியுள்ளார்கள். மேலும், இவர்களது பொருள் தியாகங்கள் எந்த அளவுக்கு மிகுந்திருந்தன என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவர்களுக்கு, நீங்கள் இயக்கத்திற்காக எந்த அளவு பொருள் தியாகம் செய்துள்ளீர்கள் என்றால், இனி நீங்கள் தியாகம் செய்ய வேண்டிய தேவையில்லை என்று எழுத்துப்பூர்வமான சான்றளித்தார்கள். ஆனால், இவர்களோ தியாகங்கள் செய்து வந்தார்கள்தான். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத்(ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தக் காலம் எனக்கு நினைவிருக்கிறது. அப்பொழுது குருதாஸ்பூரில் அன்னார் மீது வழக்கு நடந்து கொண்டிருந்தது. அதில் அன்னாருக்குப் பணம் தேவைப்பட்டது. அப்போது ஹுஜூர் (அலை) அவர்கள் தம் தோழர்களுக்கு இவ்வாறு எழுதி அனுப்பினார்கள்: செலவுகள் அதிகரிக்கின்றன. லங்கர் கானா இரண்டு இடங்களில் செயல்படுகிறது. ஒன்று காதியானில் ; மற்றொன்று இங்கு குர்தாஸ்பூரில்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இருந்ததன் காரணமாக அங்கும் மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உணவும் வழங்கப்பட்டு வந்தது. அன்னார் (அலை) கூறினார்கள்: இதுபோக வழக்கிலும் செலவாகிறது. எனவே தோழர்கள் பொருளுதவியின் பால் கவனம் செலுத்தவும். அதாவது செலவுகளுக்காக சந்தா கொடுங்கள் (என்று கூறினார்கள்).

ஆக, டாக்டர் ஸாஹிப் அவர்களோ மார்க்கத்திற்காகத் தியாகங்கள் செய்வதில் எந்த அளவுக்கு முன்னேறியிருந்தார்கள் என்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவர்களைத் தடுக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. இப்பொழுது நீங்கள் தியாகம் செய்ய வேண்டிய தேவையில்லை என்று அவர்களிடம் கூற வேண்டி இருந்தது.

ஆக, இந்த முன்மாதிரிகளைத்தான் முந்தைய ஸஹாபா நிலைநாட்டினார்கள். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபா நிலைநாட்டினார்கள். பிறகு, ஒவ்வொரு கிலாஃபத் காலகட்டத்திலும் இந்த முன்மாதிரிகள் தென்படுகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தின் இன்னும் ஓரிரு நிகழ்வுகளை எடுத்துக் கூறி விடுகிறேன். காதியானுக்கு இடம் பெயர்ந்து வந்த ஹஸ்ரத் சூஃபீ நபி பக்ஷ் ஸாஹிப் கூறுகிறார்கள்:

ஒருமுறை நான் ஆண்டு மாநாட்டுக்கு வந்தேன். அப்பொழுது நான் முற்றிலும் தனிமையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் சிலவற்றைப் பணிவுடன் கூறவிரும்புகிறேன் என்று கேட்டுக் கொண்டேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உள்ளே வாருங்கள் என்று கூறினார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: தற்செயலாக அந்த சாளரம் திறந்திருந்தது. எந்தக் கதவு வழியாக உள்ளே நுழைந்தார்களோ அது திறந்திருந்தது. என்னுடன் இன்னும் சில மக்களும் உள்ளே வந்து விட்டார்கள். அப்பொழுது, நாங்கள் மகனுக்கு நல்ல உயர்கல்வி வழங்கினோம்; அவர் வேலைக்குப் போகத் துவங்கியதிலிருந்து எங்களுக்கு எந்தத் தொண்டும் ஆற்றுவதில்லை என (என்) தந்தையார் கூறுகிறார் என்று நான் பணிவுடன் கூறினேன்.

நான் மகனுக்கு இவ்வளவு உயர்கல்வி வழங்கியுள்ளேன். எங்களுக்குத் தொண்டு எதுவும் செய்வதில்லை. பொருளுதவி செய்ய வேண்டும் ; செய்வதில்லை என்பது தந்தையாரின் முறையீடாகும். மனைவி கூறுகிறார்: நல்ல அஹ்மதியாக இருக்கிறார்; என்னிடம் என்ன நகைகள் இருந்தனவோ அவையும் விற்றுப் போய்விட்டன. எல்லாவற்றையும் போய் சந்தாவில் கொடுத்து விடுகிறார்.

வீட்டை நடத்துவதற்கு இவர்களுக்கு நகைகளை விற்க வேண்டி வந்தது போல. அல்லது தேவையின்போது, நகைகளை விற்க வேண்டிய விஷயம் வந்து விட்டது போலும்! இந்த விஷயத்தில் மனைவிக்கு முறையீடு இருந்தது. அவர் கூறினார்: தந்தையும் முறையீடு செய்கிறார்; மனைவியும் முறையீடு செய்கிறார். பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேலான அவையில் பணிவுடன் இவ்வாறு கேட்டுக் கொள்கிறார்;

இங்கு நான் பார்க்கிறேன். இப்பொழுது நான் காதியானுக்கு வந்துள்ளேன். இங்குள்ள காட்சிகளைப் பார்க்கிறேன். அதாவது, இந்த இயக்கத்துக்குத் தொண்டாற்றுவதற்காக தங்களுடைய சீடர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தியாகம் செய்து விடுகிறார்கள். நான் தங்களுக்குத் தொண்டாற்றும் பொருட்டு அல்லாஹ் எனக்கு இரட்டிப்பு. மும்மடங்கு சம்பளம் வழங்கிட தாங்கள் துஆ செய்யுங்கள். இந்த முறையீடுகளைப் பற்றி எடுத்துரைத்தவாறு பிறகு அவர் கூறுகிறார்: மக்களின் முன்மாதிரிகளைப் பார்க்கும்போது, நான் இதை விட அதிகமாக செய்து விட வேண்டும் என்று உள்ளத்தில் ஆசை பிறக்கிறது. பிறகு, அல்லாஹ் எத்தகைய ஏற்பாட்டைச் செய்து விட்டான் என்றால், இவருக்கு வேறு நாட்டில் வேலை கிடைத்து விட்டது. சம்பளமும் அதிகரித்து விட்டது. இவர் பொருளுதவியும் செய்தார். தம் வீட்டு மக்களுக்கும் உதவி செய்தார்.

அந்த மக்கள், நல்ல மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய ஆற்றலின் விளைவாக அந்தக் காலத்தில் அதாவது அதுவும் உலகவாத காலமாக இருந்தது. அங்கு உலகவாதம் மேலோங்கியிருந்தது. பிறகும் அவர்கள் தியாகங்கள் செய்து வந்தார்கள்.

இன்றும் இந்த முன்மாதிரிகள் நமக்குக் காணக்கிடைக்கின்றன. இப்பொழுது உலகவாதம் இந்தக் காலத்தில் அதிகரித்து மேலோங்கியுள்ளது.

அடுத்து, இறைவழியில் செலவு செய்து வருகிறார்கள். ஏழை மனிதர்கள் சிலர் எப்படித் தியாகங்கள் செய்து வந்துள்ளார்கள்! இன்றும் நமக்குத் தென்படுகிறார்கள். ஆஃப்ரிக்காவின் மக்கள் சிலர் தங்களுடைய நிகழ்வுகளை அனுப்புகிறார்கள். ஆனால், நான் முதலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தின் ஏழை மக்களின் முன்மாதிரியை எடுத்து வைத்து விடுகிறேன்.

ஹஸ்ரத் காஸீ கமருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் சாயீ(ன்) தீவான் ஷாஹ் அவர்கள் தொடர்பாக ஒன்றை எடுத்துக் கூறுகிறார்கள். நிகழ்வை எடுத்துக் கூறுகிறார்கள். இவர்கள் கூறுகிறார்கள்: நானும் சாயீ(ன்) ஸாஹிப் அவர்களிடம், நீங்கள் காதியானுக்கு செல்வதற்குக் குறிப்பான காரணம் ஏதும் இருக்கிறதா? என்று எப்பொழுதாவது கேட்டு வந்தேன். அவர்கள் மிகவும் அதிகமாக காதியானுக்கு சென்று வந்தார்கள். ஏனெனில், எங்கு இவர்களது கிராமம் இருந்ததோ அந்தப் பக்கமாக சாயீன்(ன்) ஸாஹிப் கடந்து சென்று வந்தார்கள். காஸீ ஸாஹிப் அவர்களின் கிராமத்தைக் கடந்து சென்று வந்தார்கள். மேலும், இரவை அங்கேயே கழித்து வந்தார்கள்.

இவர்கள் கூறுகிறார்கள்: சாயீ(ன்) தீவான் ஷாஹ் நாரோவாலைச் சேர்ந்தவர் ஆவார்கள். அவர்கள் நடை பயணம் மேற்கொண்டு காதியானுக்கு சென்று வந்தார்கள். அவர்கள் கடந்து வந்த இந்தப் பயணம் பல மைல்கள் பயணமாக இருந்தது. நாரோவாலிலிருந்து காதியான் வரை. இவர்கள் கூறுகிறார்கள்: நடுவிலிருந்து சென்றாலும், shortcut எடுத்து சென்றாலும் அப்பொழுதும் கூட கிட்டத்தட்ட 100 மைல் தொலைவு இருக்கும். அதை அவர்கள் நடந்து பயணம் மேற்கொண்டார்கள். இவர்கள் சாயீ(ன்) ஸாஹிப் அவர்களிடம், காதியானுக்கு செல்வது ஏதாவது குறிப்பான காரணத்தினாலா அல்லது சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திக்கிறேன் என்று சந்திப்பிற்கான ஆர்வத்தினால் மட்டும் செல்கிறீர்களா? என்று கேட்டார்கள். சாயீ(ன்) ஸாஹிப் கூறுகிறார்கள்: நான் ஏழை மனிதன் ஆவேன். ஒன்று, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் ஆகும்.

இரண்டாவது, நான் ஏழை ஆவேன். மக்கள் கொடுப்பது போன்று செல்வந்தர்கள் கொடுப்பது போன்று என்னால் ஆயிரக்கணக்கிலும், நூற்றுக்கணக்கிலும் சந்தா கொடுக்க முடியாது. எனவே, விருந்தினர் இல்லங்களின் கயிறுக் கட்டில்களை செய்துக் கொடுப்பேன்; எனது தலையில் இருந்து சந்தா பொறுப்பு இறங்கி விடும் என்பதற்காக செல்கிறேன். அதாவது இலவசமாக கயிற்றுக் கட்டில்களை செய்து கொடுப்பேன். சந்தாவின் சுமை இறங்கி விடும். சந்தா கொடுக்க முடியாததன் காரணமாக இருக்கும் உணர்வு எனும் அந்த சுமை குறைந்து விடும். கயிற்றுக் கட்டில்கள் பின்னுவதற்கான இந்தப் பணியால் எனக்குத் திருப்தி ஏற்பட்டு விடுகிறது. எனவே, நான் லங்கர் கானாவின் கயிற்றுக் கட்டில்களைப் பின்னிக் கொடுக்கிறேன். மேலும், இந்தக் கூலிவேலையை செய்தால் அதுவே எனது சந்தாவாகும் என்ற திருப்தி ஏற்படுகிறது.

ஆக, இதுபோன்ற ஆன்மா இருந்தது. அப்பொழுது அந்தக் காலத்தில் அது ஏழைகளிடமும் உருவாகியிருந்தது. இந்தக் காலத்திலும் எவ்வாறு அல்லாஹ் மக்களிடம் இந்த ஆன்மாவை ஏற்படுத்தியுள்ளான் என்று நாம் பார்க்கிறோம்! தொலைதூர நாடுகளில் வசிக்கும் மக்கள் எங்கு சில ஆண்டுகளுக்கு

முன்பு அஹ்மதிய்யத் அறிமுகமானதோ அங்கு அந்த மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்துள்ளார்கள். அவர்களது பொருள் தியாகத்தின் ஆர்வத்தின் விநோதமான காட்சிகளும் தென்படுகின்றன. 1400 வருடங்களுக்கு முன்புள்ள உணர்வு இந்த மக்களிலும் நமக்கு தென்படுகிறது. மேலும், இந்த உணர்வுதான் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு, ஈமானில் புத்துணர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக உருவாகியுள்ளது.

மார்ஷல் ஜலாந்தின் முபல்லிஃக் எழுதுகிறார்கள்: லாத்ரீ ஆர்ஸிக் ஸாஹிபா என்ற கலப்பற்ற உறுப்பினர் ஒருவர் இருக்கின்றார்கள். ஜமாஅத்தின் லங்கரை நடத்துவதற்காக மிகக் கடினமாக உழைக்கிறார்கள். அங்கு தினமும் இருவேளை உணவு சமைக்கப்படுகிறது. அங்கு இவர்கள் வருவார்கள்; தொண்டாற்றுவார்கள் ; சமைப்பார்கள். ஆனால், எப்பொழுது இவர்களுக்கு சம்பளம் கிடைத்தாலும் தம் சார்பாகவும், தம் மகன் வழிப் பேரர், பேத்திகள் ஐவர் சார்பாகவும் பொருள் தியாகத்தை முன்வைப்பதே இவர்களது முதல் வேலையாக இருக்கும். மேலும், இவர்களது வக்ஃபே ஜதீத் தியாகம் ஜமாஅத்தில் எல்லாரையும் விட அதிகம் இருக்கும்.

முரப்பி ஸாஹிப் கூறுகிறார்: இவர்கள் எத்தகைய மக்கள் என்றால், இவர்களது வீடுகள் மிகவும் ஏழை வீடுகளாக இருக்கும். இவர்களது வீடுகளைப் பார்த்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த அருளுக்குரிய சொற்கள் நினைவுக்கு வருகின்றன. இறையச்சமுடையவர் உண்மையான செழிப்பை ஒரு குடிசையில் பெற முடியும். அது பேராசைக் கொண்ட உலகவாதிக்கு உயர்ந்த ஆடம்பரமான மாளிகையில் கூட கிடைக்க முடியாது.

இவ்வாறே அந்த இடத்தையே சேர்ந்த இன்னொரு பெண்மணி இருக்கிறார். லோரீன் ஸாஹிபா அவர்கள். இவர்களும் மார்ஷல் ஜலாந்தில் ஜமாஅத்தின் லங்கரில் பணிபுரிகிறார்கள். முரப்பி ஸாஹிப் கூறுகிறார்: ஆண்டு நிறைவடைகிறது: மேலும் நமது சந்தா சென்ற ஆண்டை விடக் குறைவாக இருக்கிறது என்று வக்ஃபே ஜதீத் சந்தாவை நான் நினைவூட்டினேன். அவர்கள் கூறுகிறார்கள்: அதற்குப் பிறகு, ஜுமுஆவுக்குப் பிறகு லோரீன் ஸாஹிபா அலுவலகத்திற்கு வந்தார்கள். மேலும், தங்களது சென்ற ஆண்டின் இலக்கை அடையும் பொருட்டு அல்லது அதை விட அதிகமாக்குவதற்காக தமது வக்ஃபே ஜதீத் சந்தாவை முன்வைத்தார்கள்.

கஸாகிஸ்தானின் இயக்கத்தின் முபல்லிஃக் அவர்கள் அயான் அப்ராயிஃப் ஸாஹிப் அவர்களின் சந்தாவைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்: அப்ராயிஃப் அயான் ஸாஹிப் அவர்கள் கூறினார்கள்: நான் வாழ்வில் எத்தகைய நேரத்தையும் பார்த்துள்ளேன் என்றால், என்னிடம் ரொட்டி வாங்குவதற்குப் பணம் இருக்கவில்லை. எனக்கு உணவுப் பொருட்களைக் கடன் வாங்க வேண்டி வந்தது. என் மனைவி நாம் மேற்கொண்டு எப்படி வாழ்வைக் கழிப்போம் என்ற கவலையுடன் இருந்து வந்தார். அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால், இந்த நிலைமைகளிலும் நான் சந்தா செலுத்தத் துவங்கி விட்டேன். இப்பொழுதும் எனது வழக்கம் என்னவென்றால், என்னிடம் எப்பொழுது பணம் வந்தாலும் நான் எல்லாவற்றையும் விட முதலில் சந்தா செலுத்துகிறேன். ஆனால், அல்லாஹ் என்னுடன் மிகவும் விநோதமாக நல்ல முறையில் நடந்து கொள்கிறான். நான் எப்பொழுது சந்தா செலுத்தினாலும் அல்லாஹ் எனக்குச் சிறந்த நிதி வழிவகைகளை வழங்கிவிடுகிறான். இந்தப் பணம் எங்கிருந்து வந்தது? என்று என் மனைவி சிலவேளை கேட்பார். அப்பொழுது, நான் அவருக்கு இது அனைத்தும் சந்தாவின் பரக்கத் என்றே கூறுகிறேன். அல்லாஹ்வோ கடன் வைத்திருப்பதில்லை.

மேலும், அல்லாஹ் கூறுகிறான்: நீ எனக்காக பொருளை செலவு செய்யும் போது, நான் உனக்கு வழங்குவேன்; அதிகரித்து வழங்கிவிடுவேன். மேலும் அல்லாஹ் தனது இந்த வாக்குறுதியையே நிறைவேற்றுகிறான்.

கேம்ரூனின் ஒரு நகரமான மர்வாவுக்கு அருகில் ஒரு ஜமாஅத் உள்ளது. அங்கு முஹம்மத் யூஸின் ஸாஹிப் என்ற நண்பர் ஒருவர் இருக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் மிகவும் ஏழையாக இருந்தேன். மக்களின் பண்ணையில் வேலை பார்த்து வந்தேன். ஆனால், அஹ்மதி ஆன பிறகு, நான் சந்தா கொடுக்கத் துவங்கினேன். மேலும், சந்தாவின் பரக்கத்தால் அல்லாஹ் எனது அந்தச் சந்தாவை ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், அதையும் தாண்டி எந்த அளவுக்கு வழங்கினான் என்றால், எனக்கு சொந்த பண்ணை உருவாகி விட்டது.

அல்லாஹ் அதை ஏற்றுக் கொண்டான் என்ற இந்த விஷயம் எனக்குத் திருப்தியளிக்கிறது. ஏனெனில், அல்லாஹ் எனக்கு அளவற்ற முறையில் வழங்கியுள்ளான். மேலும் என்னைப் பண்ணைக்கு உரிமையாளர் ஆக்கி விட்டான். நான் கூலிவேலை பார்த்து வந்த நிலை எங்கே? இப்பொழுது நான் எனது பண்ணைக்கு உரிமையாளர் ஆகிவிட்ட இந்த நிலை எங்கே!

இங்கு நைஜர் என்ற ஓர் ஏழை ஜமாஅத் உள்ளது. அங்குள்ள முபல்லிஃக் எழுதியுள்ளார்கள்: லாவஸீ ஸாஹிப் என்ற அஹ்மதி ஒருவர் கூறுகிறார்கள்: நான் டைகர் நட்ஸ் பயிரிட்டு வருகிறேன். நான் அதன் பத்தில் ஒரு பங்கை சந்தாவில் கொடுத்து விடுவேன் என்று யாரிடமும் சொல்லவில்லை : ஆனால், உள்ளத்தில் எண்ணியிருந்தேன். ஆனால், நிலைமை எப்படி ஆனது? என்றால், பயிரிடப்பட்ட பிறகு, பலமுறை மழை பொழிந்து விட்டது. பயிர் வீணாவதற்கான ஆபத்து இருந்தது. அதற்கு அவ்வளவு தண்ணீர் தேவைப்படாது.

சுற்றியிருந்த அக்கம்பக்கத்தினரின் பயிர்கள் வீணாகி விட்டன. மிகவும் குறைந்து விட்டன. ஆனால், அல்லாஹ் எனது பயிரில் எவ்வளவு பரக்கத் ஏற்படுத்தினான் என்றால், மக்களுக்கு என்னை விட அதிக நிலத்தில் 5 அல்லது 6 பைகள் கிடைத்த அதேவேளையில், எனக்கு 10 பைகள் அல்லது சாக்குப் பைகள் கிடைத்தன. இன்னும் கூறுவதாயின், 11 சாக்குப் பைகள் கூட என்னுடைய வயல்களில் இருந்து கிடைத்து வந்தன.

பயிர்கள் வீணாகிவிடும் நிலையில், விலையும் ஏற்படுகிறது. மனிதன் சந்தையில் நன்றாக பணம் சம்பாதிக்கலாம். ஆனால், இவர்கள் பணத்தின் மீது பேராசைப்படவில்லை. இவர்கள் அல்லாஹ்விடம் உள்ளத்தில் வாக்குறுதி அளித்திருந்தார்கள். யாரிடமும் சொல்லியிருக்கவில்லை. உள்ளத்தில் அல்லாஹ்விடம் வாக்குறுதி அளித்து விட்டிருந்தார்கள். எனவே அல்லாஹ்வுக்காகத் தியாகம் செய்ய ஆயத்தமாகி விட்டார்கள். தமது வாக்குறுதிக்கு ஏற்ப அவர்கள் தற்போது ஜமாஅத்துக்குச் சந்தாவில் கொடுக்க இருந்த அந்த 11 -வது மூட்டையைக் கொடுத்து விட்டார்கள். பணத்தின் மீதான அன்பு அவர்கள் மீது மேலோங்கவில்லை. ஆக, இவர்கள்தான் அந்தத் தியாகம் செய்யக் கூடிய மக்கள் ஆவார்கள். அவர்கள் இன்றும் நமக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் தென்படுகிறார்கள். மேலும், ஒவ்வொரு நாட்டிலும் தென்படுகிறார்கள்.

கேம்பியாவின் ஒரு ஜமாஅத் யேரோபாவல் ஆகும். அங்குள்ள சத்ர் ஸாஹிப் கூறுகிறார்கள்: அவர்களுக்கு எங்கிருந்தோ சிறிது பணம் கிடைத்தது. அதை அவர்கள் இரண்டு பங்காகப் பிரித்து விட்டார்கள். ஒரு பங்கைச் சந்தாவுக்காக வைத்து விட்டார்கள். மற்றொரு பங்கை சொந்த பயன்பாட்டுக்காக வைத்துக் கொண்டார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

துர்பாக்கியமான முறையில் அவர்களது சொந்த பயன்பாட்டுக்காக இருந்த தொகை தொலைந்து போய் விட்டது. இப்பொழுது அவர்களிடம் சந்தாவுக்காக வைத்திருந்த பணம் மட்டுமே எஞ்சியிருந்தது. அதை அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், தேவை இருந்தும் அவர்கள் சந்தாவுக்கான பணத்தை சொந்த செலவுக்குப் பயன்படுத்தவில்லை.

செல்வத்தின் மீதான அன்பு அவர்கள் மீது மேலோங்கவில்லை. அது தொலைந்து விட்டது. எனவே இதிலிருந்து பாதி செலவு செய்து கொள்கிறேன் என்று அவர்கள் எந்த சாக்கும் கூறவில்லை. அவர்கள் கூறினார்கள்: இல்லை. எந்தத் தொகையை நான் சந்தாவுக்காகத் தனியாக வைத்து விட்டேனோ அதைச் சந்தாவில் கொடுப்பேன்.

மேலும், கூறுகிறார்கள்: அதை நான் சந்தாவில் செலுத்தி விட்டேன். அல்லாஹ் எப்படி நிகழச் செய்தான்? என்றால், சில காலங்களுக்குப் பிறகு தொலைந்து போன அதே தொகை அவர்களுக்குக் கிடைத்து விட்டது. மேலும், அவர்களது தேவை நிறைவேறிவிட்டது. ஆக, தேவை ஏற்படும் இத்தகைய நிலையிலோ செல்வத்தின் மீதான அன்பு கண்டிப்பாக மேலோங்குகிறது. ஆனால், அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை எந்நிலையிலும் நிறைவேற்ற வேண்டும் என்ற மக்களின் கலப்பற்றத் தன்மை மிகவும் விநோதமாக உள்ளது.

பிறகு, இன்னொரு நிகழ்வு இருக்கிறது. அங்கு செல்வத்தின் தேவையும் செல்வத்தின் மீதான அன்பும் தியாகத்தின் மீது மேலோங்க முடியாது. நைஜரிலேயே மராவீ மண்டலத்தின் ஒரு ஜமாஅத் உள்ளது. அங்கு ஒரு நண்பர் அஹ்மது சானீ ஸாஹிப் அவர்கள் வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்தக் கூடியவர் ஆவார். ஒவ்வோர் ஆண்டும் மிகவும் முறையாக செலுத்துவார்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

இவ்வாண்டு அந்த மண்டலத்தில் வெள்ளத்தால் பயிர்கள் வீணாகி விட்டன. இதனால் மக்களால் அதிகம் சந்தா செலுத்த முடியாது என்று கருதப்பட்டது.

சானீ ஸாஹிப் கூறினார்கள்: அதிக மழையினாலும், வெள்ளத்தினாலும் பயிர்கள் சேதமடைந்து விட்டிருந்தனதான்; வெள்ளத்தினால் பயிர்களோ நன்றாக ஆகவில்லைதான்; ஆனால், இதனால் அவர்கள் சந்தாவைக் குறைக்க மாட்டார்கள். மேலும் எவ்வளவு சந்தாவை அவர்கள் முன்பு கொடுத்து வந்தார்களோ அதை விட அதிகமாகக் கொடுத்தார்கள்.

பிறகு, தேவை இருந்தும் தியாகத்துக்கு முன்னுரிமை வழங்கிய இன்னொரு நிகழ்வு இருக்கிறது. நைஜரில் டேப்ஸு என்ற ஒரு ஜமாஅத் இருக்கிறது.அங்கு குறைவாக மழை பொழிந்தது. அதனால் பயிர்கள் பெரிதும் பாதித்தன. சில இடங்களில் அதிகம் மழை பொழிகிறது; சில இடங்களில் குறைவாக மழை பொழிகிறது. இயற்கை பேராபத்துகள் ஆகும். நமது ஆஃப்ரிக்காவில் பெரும்பாலான ஜமாஅத்துகள் கிராமப்புற ஜமாஅத்துகள் ஆகும். இரண்டாவது, அங்கு நாட்டின் அரசியல் சூழ்நிலையும் இன்றைய நாளகளில் மிகவும் மோசமாக உள்ளது. விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது.

இந்த சூழ்நிலையைப் பார்த்து முஅல்லிம் கூறுகிறார்கள்: இந்த மக்களிடமோ பணம் இல்லை. அவர்கள் எங்கிருந்து சந்தா கொடுப்பார்கள் என்று எனக்குக் கவலையாக இருந்தது. ஆனால், வக்ஃபே ஜதீின் ஆண்டு இப்பொழுது நிறைவடைகிறது என்று கிராமத்து மக்களிடம் கூறியபோது, அங்கு ஷாஃபீ ஸாஹிப் ஒருவர் இருக்கிறார்கள். ஷாஃபீ ஏங்கோ ஸாஹிப். அவர்கள் எழுந்து நின்று கூறினார்கள்:

ஒவ்வோர் ஆண்டும் நாம் முறையாக சந்தா கொடுக்கிறோம். அல்லாஹ் நமக்கு அதிகரித்துத் திருப்பித் தராத எந்த ஆண்டும் இருக்கவில்லை.

எனவே சந்தாவின் பரக்கத்தால் அல்லாஹ் நமக்கு வழங்குகின்றான். நமது பொருளாதார நிலைமையும் சரியாகிறது. நெருக்கடி இருந்தும் நாம் சிறப்பாக இருக்கிறோம். எனவே நாங்கள் பின்வாங்க மாட்டோம். நாங்கள் சந்தா செலுத்துவோம்.

மேலும், அவர்கள் செலுத்தினார்கள். இங்கு அதே விஷயம்தான். செல்வத்தின் மீதான அன்பு அவர்கள் மீது மேலாங்கவில்லை.

தன்ஸானியாவில் இப்ராஹீம் ஸாஹிப் என்ற நண்பர் ஒருவர் இருக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: எனக்குச் சந்தாவின் பரக்கத் பற்றித் தெரியவந்த போது, நான் ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பொருள் தியாகத்துக்காக நிர்ணயித்து விட்டேன். அதன் பரக்கத்தால் எனது பணி அதிகரித்துக் கொண்டே இருந்தது. அல்லாஹ் எனது வாழ்வாதாரத்தை அதிகரித்துக் கொண்டே வந்தான்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை முஅல்லிம் என்னிடம் சந்தா கொடுக்குமாறு கூறினார்கள். அப்பொழுது என்னிடம் சிறிது தொகை இருந்தது. அதை நான் ஒரு பணிக்காக வைத்திருந்தேன். தொழில் இருந்தது: எனவே அந்தத் தொகையை வைத்திருந்தேன். ஆனால், வலியுறுத்தப்பட்டதும் நான் அதைச் சந்தாவில் கொடுத்து விட்டேன். அடுத்த நாள் ஃபோன் செய்து, யாரிடமிருந்து நான் பொருள் வாங்க இருந்தேனோ அந்தப் பொருள் விற்பவரிடம் நான், என்னிடம் இப்பொழுது பணம் இல்லை; எனவே நான் வாங்க இருந்த பொருளை என்னால் உங்களிடமிருந்து வாங்கிக் கொள்ள முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் என்னிடம், பரவாயில்லை; நீங்கள் வாங்க இருந்த பொருளுக்குப் பாதி விலை செலுத்தப்பட்டு விட்டது. மீதித் தொகையை நீங்கள் பின்னர் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்.

அவர்கள் கூறுகிறார்கள்: பாதித் தொகை எங்கிருந்து செலுத்தப்பட்டது? செலுத்தியது யார்? என்று எனக்குத் தெரியாது. இன்று வரை எனக்கு இந்த இரகசியம் புரியவில்லை. ஆக, அல்லாஹ் சிலவேளை, தெரியாத அளவுக்கு இப்படியும் உதவி செய்து விடுகின்றான்.

சிலருக்கு அல்லாஹ் பொருள் தியாகம் செய்ததனால் வேலைகளை வாங்கிக் கொடுத்து விட்டான். செக் குடியரசிலிருந்து ஒரு காதிம் அல்லாஹ் தனக்குப் பொருள் தியாகத்தின் தத்துவத்தை எவ்வாறு புரிய வைக்கின்றான் என்று கூறுகிறார்கள். இவர்கள் அங்கு, செக் குடியரசின் உள்ளூர் நபர் ஆவார். அவர்கள் கூறுகிறார்கள்: எனக்குப் பொருள் தியாகத்தின் மூலமாக ஒரு புதிய ஆன்மிக வாழ்வு கிடைத்தது. நான் என்னுடன் இருக்கும் மாணவர்களைப் பார்க்கிறேன். அவர்கள் பிரச்சனைகளில் மூழ்கியுள்ளார்கள். ஆனால், நான் பெரும் நிம்மதியாக இருக்கிறேன். ஒவ்வொருவருக்கும் பணம் சேர்ப்பதில் மூழ்கியிருக்கின்ற வேளையில், எந்தப் பணம் கையில் வந்தாலும் அதை இறைவழியில் அர்ப்பணித்து விடும் பழக்கம் எனக்கு ஏற்பட்டு விட்டது. என் தோழர்கள் அதற்கு எந்தப் பயனும் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால், என் இறைவன் சாட்சியாக இருக்கிறான். என் வாழ்வு இத்துடன் இணைந்திருக்கின்றது. அவர்கள் கூறுகிறார்கள்: நான் எனது துறையில் வேலை தேடிக் கொண்டிருந்தேன். சிரமம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இறையருளால் சந்தாவின் பரக்கத்தால் அது அகன்று விட்டது. தங்க இடம் இருக்கவில்லை. அல்லாஹ் தங்குவதற்கான ஏற்பாடு செய்து விட்டான்.

அவர்கள் கூறுகிறார்கள்: முன்னர் என் பாக்கெட் எப்பொழுதும் காலியாக இருக்கும். ஆனால், இப்பொழுது அல்லாஹ்வின் அருளால் எனது பாக்கெட் எந்நேரமும் நிறைந்து இருக்கின்றது. சந்தாவும் கொடுக்கின்றேன. ஆக, அல்லாஹ் பிறகு எங்கிருந்தாவது நிரப்பி விடுகின்றான்.

இந்தியாவிலிருந்து அங்குள்ள இன்ஸ்பெக்டர் ஸாஹிப் ஒருவர் எழுதுகிறார்கள்: நண்பர் ஒருவர் இருக்கிறார்கள். அவர்களது வக்ஃபே ஜதீத் சந்தா 24 ஆயிரமாக இருந்தது. சிலநாட்கள் எஞ்சியிருந்தன. அவர்கள் கூறினார்கள்: என்னிடம் சிறிது தொகை இருக்கின்றது.ஆனால், முக்கியமான ஒரு பணியில் நான் இந்தத் தொகையைக் கொடுக்க வேண்டும். அதற்கு நான் அவர்களிடம், இது வக்ஃபே ஜதீத் ஆண்டின் இறுதியாகும். கொடுக்க வேண்டுமா? அல்லது பின்னர் கொடுக்க வேண்டுமா ? என்று எதனை நீங்கள் பொருத்தமானதாக கருதுகின்றீர்களோ அதனை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்!என்று கூறினேன். அதற்கு அவர்கள் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைக்கிறேன் என்று கூறி, தொகையைச் சந்தாவாக செலுத்தி விட்டார்கள். அடுத்த நாளே அவர்கள் ஃபோன் செய்து,வியாபாரத்தின் ஒரு மிகப் பெரும் தொகை எங்கோ மாட்டியிருந்தது. அது திடீரென்று கிடைத்து விட்டது. முழு தொகையோ கிடைக்கவில்லை ; ஆனால், அதிலிருந்து 50 ஆயிரம் கிடைத்து விட்டது. கொடுக்க வேண்டியவர் மீதித் தொகையையும் விரைவில் கொடுத்து விடுவேன் என்று வாக்குறுதியளித்துள்ளார் என்று கூறினார்கள்.

பாருங்கள்! அல்லாஹ் இவர்களிடம் கூறினான்: நீ எனக்காக பொருள் மீதான அன்பை விடுகிறாயா? சொந்தத் தேவைகளை விடுகிறாயா? ஜமாஅத்தின் தேவைகளை முழுமைப்படுத்த முயற்சி செய்கிறாயா?சரி! பிறகு நான் உனக்கு உதவி செய்கிறேன்.

ஆக, இவ்வாறு அல்லாஹ் உதவுகிறான். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் அல்லாஹ்வின் அருளினால் இந்த செலவுகள் செய்யப்படுகின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத் அமைப்பை நடத்துவதற்காகப் பொருள் திட்டத்தை அறிவித்திடாத எந்த நபியும் உலகில் வாழ்ந்திருக்கவில்லை என்று கூறியுள்ளது போன்று. அஹ்மதிய்யா ஜமாஅத்திலும் ஜமாஅத் அமைப்பை நடத்திடுவதற்காகத் திட்டங்கள் அறிவிக்க வேண்டி வருகின்றன.

தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீின் சந்தாக்கள் மட்டுமே முழுமையாக தலைமையகத்துக்கு வருகின்றன. மற்றவையோ உள்ளூர் நாடுகளிலேயே செலவாகி விடுகின்றன. ஆனால், ஆஃப்ரிக்க நாடுகளில் மக்கள் அவ்வளவு பணக்காரர்கள் இல்லை. அவ்வாறு இருந்தும் அவர்கள் சந்தா கொடுக்கின்றனர். ஆனால், செலவுகள் மிக அதிகமாக உள்ளன. மிஷன் ஹவுஸ்கள் இருக்கின்றன. பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அவை ஆஃப்ரிக்காவில் இயங்குகின்றன.

இப்பொழுது 7953 பள்ளிவாசல்கள் உருவாகி விட்டன. 306 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறே ஒவ்வோர் ஆண்டும் பல பள்ளிவாசல்கள் கட்டுவதற்கான திட்டம் வகுக்கப்படுகிறது. 1860 மிஷன் ஹவுஸ்கள் இயங்குகின்றன. சில வாடகைக்கும் எடுக்கப்பட்டுள்ளன. நம் தலைமையக முபல்லிஃக்மார்கள் சிலர் 400 பேர் அங்கு பணிபுரிகின்றனர். 2000-க்கும் மேற்பட்ட முஅல்லிம்மார்கள் பணிபுரிகின்றார்கள்.

பிறகு, காதியான் உள்ளது. பிறகு, தென்அமெரிக்காவின் நாடுகளுக்கு, தீவுகளுக்கு தலைமையகத்திலிருந்து செலவு செய்யப்படுகின்றது. அங்கு அவர்களுடைய செலவுகள் பூர்த்தியாவதில்லை. மிஷனுடைய செலவுகளைப் பூர்த்தி செய்வதற்கான running expenditure மிகவும் அதிகமாக உள்ளன. இலக்கியங்கள் விநியோகம் செய்வதற்காக செலவுகள் இருக்கின்றன. இலக்கியங்களுமே பெரிய நூல்கள் போக, அவற்றில் பெரும்பாலும் சிலவேளை இங்கிருந்து அனுப்பப்படுகின்றன. அதுவும் அவற்றிலும் பல நூல்கள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. சிறு நூல்களோ இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. அங்கு சில நூல்கள் அச்சிடவும்படுகின்றன. ஆக, அல்லாஹுத்தஆலா இந்தத் தொகை அனைத்தையும் தனதருளால் செலவுக்காகக் கொடுத்துக் கொண்டே செல்கின்றான். சிலவேளை புரிவதில்லை. இவ்வளவு விரிவான நிகழ்ச்சிகள் உள்ளன. இவ்வளவு செலவுகள் ஆகின்றன. மேலும் வரவு குறைவாக இருக்கிறது.

இப்பொழுது, முழுக்க முழுக்க தலைமையகத்துக்கு வரும் தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாக்களை சேர்த்தாலும் கூட அது ஏறத்தாழ 30,31 மில்லியன் பவுண்ட் ஆகிறது. ஆனால்,

அல்லாஹ்வின் அருளாலேயே இந்த செலவு நடக்கிறது. 106 நாடுகளின் மிஷன்களுக்கு ஆண்டு மானியம் வழங்கப்படுகிறதே அதுவே கிட்டத்தட்ட இதற்கு நிகரானதாகும். பிறகு, ஜாமிஆக்கள் உள்ளன. அவற்றில் பல மில்லியன்கள் செலவாகின்றன. அவற்றிற்கு மானியம் வழங்கப்படுகிறது. MTA இருக்கிறது. அதில் பல மில்லியன்கள் செலவாகின்றன. பிறகு, தலைமையக செலவுகள் இருக்கின்றன.

ஆக, அல்லாஹ் இந்த செலவுகளை எப்படி பூர்த்தி செய்கின்றான்? என்று புரியாத அளவுக்குப் பூர்த்தி செய்து விடுகின்றான். சிலவேளை, மிக அதிகமான செலவுகள் இருக்கின்றனவே. எப்படி பூர்த்தியாகும் என்ற சிந்தனை வருகிறது. ஆனால், அல்லாஹ் தனதருளால் செலவுகளைப் பூர்த்தி செய்து கொண்டே செல்கின்றான். மேலும், அதில் ஒருபோதும் குறை வரவிடுவதில்லை. அல்லாஹ்வின் அருளால் இந்த மிஷன்கள் தொடர்கின்றன. இவற்றில் பணிகள் நடைபெறுகின்றன.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இதைத்தான் கூறினான்: பொருளையோ நான் உமக்கு வழங்குவேன்.

மேலும்,அந்தப் பொருளை அல்லாஹ் வழங்குகிறான். அல்லாஹ் ஜமாஅத்துக்கு இதை சரியான முறையில் செலவு செய்வதற்கான நல்வாய்ப்பையும் எப்பொழுதும் வழங்கிக் கொண்டே இருப்பானாக! சரியாக செலவு செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! இதில் ஒருபோதும் எவ்வித முறைகேடும் ஏற்படாமல் இருக்கட்டுமாக!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: செல்வத்தையும் நேசித்து இறைவனையும் நேசிப்பது உங்களுக்கு சாத்தியமில்லை. ஒன்றை மட்டுமே உங்களால் நேசிக்க முடியும். எனவே இறைவனை நேசிக்கக் கூடிய மனிதர் நற்பேறு பெற்றவராவார். உங்களில் ஒருவர் இறைவனை நேசித்து அவனது வழியில் பொருள் செலவு செய்தால், அவருடைய செல்வத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் பரக்கத் வழங்கப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏனெனில், செல்வம் தானாக வருவதில்லை ; மாறாக, இறைவனுடைய நாட்டத்தால் வருகிறது. எனவே எவர் இறைவனுக்காக செல்வத்தின் சில பகுதிகளை விட்டுவிடுகிறாரோ அவர் நிச்சயமாக அதைப் பெறுகிறார். ஆனால், எவர் செல்வத்தை நேசித்து இறைவழியில் ஆற்ற வேண்டிய தொண்டை ஆற்றுவதில்லையோ அவர் நிச்சயம் அந்த செல்வத்தை இழந்து விடுவார்.

செல்வம் உங்களது முயற்சியால் வருவதாகக் கருதாதீர்கள். மாறாக, இறைவன் புறமிருந்து வருகிறது. மேலும் நீங்கள் செல்வத்தின் ஒரு பகுதியைக் கொடுத்தோ அல்லது வேறு ஏதாவது ஒரு விதமாகத் தொண்டாற்றியோ இறைவன் மற்றும் அவன் தூதருக்கு ஏதும் பேருதவி புரிவதாகக் கருதாதீர்கள். மாறாக உங்களை இந்தத் தொண்டுக்காக அழைப்பது அவன் உங்கள் மீது புரியும் பேரருளாகும். நீங்கள் அனைவரும் என்னை விட்டு விட்டாலும் தொண்டாற்றுவதை விட்டும், பொருளுதவி செய்வதை விட்டும் விலகி விட்டாலும் அவன் ஒரு சமுதாயத்தை உருவாக்கி விடுவான். அது அவனுக்குத் தொண்டாற்றிடும் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். இந்தப் பணி விண்ணிலிருந்து நிகழ்கிறது என்றும், உங்களுடைய தொண்டு உங்களது நன்மைக்காக மட்டும் என்றும் நீங்கள் உறுதியாகப் புரிந்து கொள்ளுங்கள். எனவே நீங்கள் உள்ளத்தில் ஆணவம் ஏதும் கொண்டு விடாதீர்கள். அல்லது நாம் பொருள் தொண்டோ அல்லது வேறு எவ்வித தொண்டோ செய்கிறோம் என்று நினைத்து விடாதீர்கள்! இறைவன் உங்களுடைய தொண்டுகளுக்கு சற்றும் தேவையற்றவன் ஆவான் என்று நான் மீண்டும் மீண்டும் கூறுகிறேன். எனினும், அவன் உங்களுக்கு இந்தத் தொண்டுக்கான வாய்ப்பளிப்பது அவன் உங்கள் மீது புரியும் பேரருள் ஆகும்.

எனவே இந்த உணர்வைத்தான், இந்த சிந்தனையைத் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்தில் உருவாக்கியிருக்கின்றார்கள். மேலும், அல்லாஹ்வின் அருளால் இன்று 130, 135 ஆண்டுகள் கழிந்த பிறகும், இந்த உணர்வு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்களிடம் இருக்கிறது. அது இளைஞர்களிடமும் இருக்கிறது. புதிதாக வருபவர்களிடமும் இருக்கிறது. மேலும், அவர்கள் தியாகங்கள் செய்து கொண்டே செல்கின்றார்கள்.

அவர்களுடைய சில நிகழ்வுகளை நான் எடுத்துரைத்தேன். அதாவது அல்லாஹ் அவர்களது செல்வத்தில் பரக்கத்தை ஏற்படுத்துகின்றான் என்ற உணர்வை அவர்கள் எவ்வாறு புரிந்துள்ளார்கள்? மேலும் அதற்காக அவர்கள் எல்லாத் தியாகங்களையும் செய்ய ஆயத்தமாகி விடுகின்றார்கள் என்பதை நான் எடுத்துரைத்தேன்.

அவர்கள் அனைவரின் செல்வங்களிலும், வாழ்நாளிலும் அல்லாஹ் பரக்கத்தை ஏற்படுத்துவானாக! இதனுடன் நான் ஓர் அறிக்கையையும் முன்வைப்பேன். அது இந்த ஆண்டு வக்ஃபே ஜதீத் சந்தாவின் அறிக்கையாகும். இதிலிருந்து இவ்வாண்டு அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் எந்த அளவுக்குத் தியாகங்கள் செய்துள்ளது என்பது தெரியவருகிறது.

அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் 67-வது ஆண்டு டிசம்பர் 31-ல் நிறைவடைந்தது. உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக 1,36,81,000 (ஒரு கோடியே முப்பத்து ஆறு லட்சத்து என்பத்தி ஓராயிரம்) பவுண்ட். அதாவது ஏறத்தாழ 14 மில்லியன் பவுண்ட் பொருள் தியாகம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வசூல் கடந்த ஆண்டை விட 7,36,000 (ஏழு லட்சத்து முப்பத்தி ஆறாயிரம்) பவுண்ட் அதிகமாகும். அல்ஹம்துலில்லாஹ்!

மேலும், இதில் தியாகங்கள் அடிப்படையில் தொகை அடிப்படையில் முதல் இடத்தில் பிரிட்டன் உள்ளது. இவர்களுக்கும், கனடாவுக்கும் மிகக் கடுமையான போட்டி உள்ளது. கனடாவும் தன்னுடைய தியாகங்களில் பெரிதாக அதிகரித்துள்ளது. ஆனால், இப்பொழுது பிரிட்டனை விடப் பின்னால் தான் இருக்கிறார்கள். மூன்றாவது இடத்தில் ஜெர்மனி உள்ளது. அடுத்து, அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த ஒரு ஜமாஅத், இந்தோனேஷியா, மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த ஒரு ஜமாஅத் மற்றும் பெல்ஜியம்.

ஆஃப்ரிக்காவில் ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில் ஜமாஅத்துகளில் கானா முதல் இடத்தில் உள்ளது. அடுத்து, மொரீஷியஸ், பின்னர் மூன்றாவது இடத்தில் புர்கினாஃபாஸ் உள்ளது. இங்கும் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. ஆனால், அவ்வாறு இருந்தும் தியாகங்கள் செய்கின்றனர். அவர்களுடைய பல இடங்களில் அறிக்கை கூட இன்னும் வர முடியவில்லை. ஏனெனில் தொடர்பு இருக்கவில்லை. பிறகு, தன்ஸானியா, லைபீரியா, கேம்பியா, நைஜீரியா, ஸிராலியோன், பெனின் மற்றும் கோங்கோ கன்சாஷா.

கிடைத்துள்ள அறிக்கைகளின் அடிப்படையில் வக்ஃபே ஜதீதின் நிதியமைப்பில் கலந்து கொள்ளக் கூடியவர்களின் எண்ணிக்கை 15,51,000 ஆகும். கடந்த ஆண்டை விடச் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையை அதிகரித்ததில் நிலைமை மோசமாக இருக்கும் பாகிஸ்தானிலும் மக்கள் அதிகரித்துள்ளனர்.. நைஜீரியா, கேம்ரூன், ஸிராலியோன், கேம்பியா மற்றும் காங்கோ பராஸ்வீல்.

தியாகம் செய்யக் கூடியவர்களில் பிரிட்டனின் பத்து பெரிய ஜமாஅத்துகளில் ஃபரான் ஹம் முதலிடத்தில் உள்ளது. பிறகு ஒஸ்டர் பார்க். இஸ்லாமாபாத், வால்சால், ஆல்டர்ஷாட் ஸவுத், ஏஷ், சீம் ஸவுத், ஜில்லிங்கம், ஆல்டர்ஷாட், நார்த் மற்றும் யோல்.

முதல் ஐந்து மண்டலங்களில் முதல் மண்டலமாக இஸ்லாமாபாத் உள்ளது. பிறகு பைத்துல் ஃபுதூஹ், மிட்லேண்ட்ஸ், மஸ்ஜித் ஃபஸல் மற்றும் பைத்துல் இஹ்ஸான்.

அத்ஃபால் பதிவேடு வக்ஃபே ஜதீத் தனியாக இருக்கும். இதில் முதல் பத்து ஜமாஅத்துகளில் முதல் இடத்தில் ஆல்டர்ஷாட் நார்த். ஃபரான் ஹம், ஏஷ், ஆல்டர்ஷாட் சவுத், பார்டன் சீம் சவுத், இஸ்லாமாபாத். ரூஹிம்டன் வெல், மான்செஸ்டர் நார்த் மற்றும் வால்சால்.

வசூல் அடிப்படையில் கனடாவின் அமாரத்துகளில் முதலிடத்தில் வார்ன் உள்ளது. பிறகு அட்மின்டன் வெஸ்ட். ஹெமில்டன் மவுண்டெயன், மில்டன் ஈஸ்ட், பைத்துர் ரஹ்மான் ஸிஸ்காடவுன், டர்ஹம் வெஸ்ட், ரிஜாயினா, மோண்டர்யாஸ் வெஸ்ட், பைத்துல் ஆஃபியத் ஸிஸ்காடவுன், வேனீ பெஃக், ஏட்ரீ லாயிட் மினிஸ்டர் மற்றும் நியூஃபவுண்ட் லேண்ட்.

அத்ஃபால் பதிவேட்டில் முன்னணி பெற்ற அமாரத்துகளில் வார்ன் முதலிடத்தில் உள்ளது. பிறகு டொரெண்டோ வெஸ்ட், வேன்கோவர், பீஸ் வில்லேஜ், கேல்கரீ, மிஸீஸாகா, பிரஹ்மண்டன் ஈஸ்ட், பிரஹ்மண்டன் வெஸ்ட் மற்றும் டொரொண்டோ.

அத்ஃபால் பதிவேட்டில் ஜமாஅத்துகளில் முதலிடத்தில் டர்ஹம் வெஸ்ட் உள்ளது. அடுத்து,ஹதீக்கா அஹ்மத், பிரட் ஃபோர்ட் ஈஸ்ட், மோண்டர்யால் வெஸ்ட், ஹெமில்டன் ஈஸ்ட், ஹெமில்டன், ஹெமில்டன் மவுண்டெய்ன், என்ஸ்ஃபோல், மில்டன் வெஸ்ட் மற்றும் வேண்ட்ஸர்.

ஜெர்மனியின் ஐந்து உள்ளூர் அமாரத்துகளில் ஹேம்பர்க் முதலிடத்தில் உள்ளது. பிறகு ஃபிரங்க்ஃபர்ட், வெஸ்பாடேன், கிராஸ் கிராவ் மற்றும் டெட் ஷடட்.

பத்து ஜமாஅத்துகள் - முதலில் அமாரத்துகள் இருந்தன. இப்போது

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

ஜமாஅத்துகள் -ரோட்காவ், நீடா, ருவீடர் மார்க், ஃப்லோரன்ஸ் ஹாயிம், நோயீ வீட், கோப்லன்ஸ், வாயின் கார்டன், பெனீ பார்க், பெர்லின் மற்றும் நோயிஸ்.

அத்ஃபால் பதிவேட்டில் மண்டலங்கள். முதல் ஐந்து மண்டலங்களில் முதலிடத்தில் வெஸ்பாடேன் உள்ளது. பிறகு, ஹெம்பர்க், ஹேஸன் ஸோதா ஈஸ்ட், ஃபாலன் மற்றும் டெட்ஸன் பாக்.

அமெரிக்காவின் பத்து ஜமாஅத்துகளில் மேரி லேண்ட் முதலிடத்தில் உள்ளது. பிறகு, இரண்டாவது இடத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் உள்ளது. அடுத்து, நார்த் வெர்ஜாயினா, சிலிக்கான் வேலி, சேட்டல், டெட்ராயிட், ஷிகாகோ, டேல்ஸ், சவுத் ரிஜாயினா மற்றும் ஆஸ்டன்.

அத்ஃபால் அடிப்படையில் அவர்களுடைய பத்து ஜமாஅத்துகளில் முதலிடத்தில் சேட்டல் உள்ளது. பிறகு, ஃபிலடெல்ஃபியா, நார்த் வெர்ஜாயினா, ஜார்ஜியா, க்ரோலாயினா, ஷிகாகோ, ஆஸ்டன், டேல்ஸ், ஆஷ்கோஷ் டெட்ராயிட் மற்றும் மேரிலேண்ட்.

அல்லாஹ்வின் அருளால் பாகிஸ்தான் இங்கும் தம்மளவிலோ அவர்கள் மிகவும் அதிகமாகக் கடினமாக உழைத்துள்ளார்கள். தியாகங்கள் செய்துள்ளனர். அதில் முதலிடத்தில் இங்கு லாஹூர் உள்ளது. பிறகு, இரண்டாவது இடத்தில் ரப்வா மற்றும் மூன்றாவது இடத்தில் கராச்சி.

பருவம் அடைந்த சந்தா செலுத்தக் கூடியவர்களில் ; மாவட்டங்களின் தரவரிசை இவ்வாறு உள்ளது: இஸ்லாமாபாத் முதலிடத்தில் உள்ளது. ஸியால்கோட் இரண்டாவது இடத்தில் உள்ளது. அடுத்து ஃபைஸலாபாத், குஜ்ராத், குஜரன்வாலா, சர்கோதா, உமர் கோட், முல்தான், ஹைத்ராபாத் மற்றும் மீர்பூர் காஸ்.

முதல் பத்து ஜமாஅத்துகளில் முதலிடத்தில் இஸ்லாமாபாத் உள்ளது. பிறகு டவுண்ஷிப் லாஹூர், தாருஸ் திக்ர் லாஹூர், அஸீஸ் ஆபாத் கராச்சி, அல்லாமா இக்பால் டவுண் லாஹூர், சமனாபாத் லாஹூர், பைத்துல் ஃபஸ்ல் ஃபைஸலாபாத், முல்தான் ஷெஹர், டெல்ஹீ கேட், லாஹூர் மற்றும் குஜ்ரன்வாலா ஷெஹர்.

அத்ஃபாலில் மூன்று பெரிய ஜமாஅத்துகளில் முதலிடத்தில் லாஹூர், இரண்டாவது இடத்தில் ரப்வா மற்றும் மூன்றாவது இடத்தில் கராச்சி.

அத்ஃபால் பதிவேட்டில் மாவட்டங்களின் தரவரிசை இவ்வாறு உள்ளது: இஸ்லாமாபாத் முதலிடத்தில் உள்ளது. பிறகு ஸியால்கோட், நாரோவால், உமர் கோட், ராவல் பிண்டீ, குஜரன்வாலா, மீர் பூர் காஸ், குஜராத், ஹைத்ராபாத் மற:றும் ஷேக்குபுரா.

சில அசாதாரணமான முயற்சிகள் செய்த ஜமாஅத்துகளும் உள்ளன.

இந்தியாவின் முதல் பத்து மாநிலங்களில் கேரளா முதலிடத்தில் உள்ளது. பிறகு, தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், கர்நாடகா, தெலுங்கானா, ஒடீஷா, பஞ்சாப், மேற்குவங்காளம், மஹாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசம்.

பத்து ஜமாஅத்துகளில் முதலிடத்தில் கோயம்பத்தூர் உள்ளது. இரண்டாவது இடத்தில் காதியான் உள்ளது. அடுத்து, ஹைதராபாத். கோழிக்கோடு. மஞ்சேரீ, பெங்களூர், மேலப்பாளையம், கொல்கத்தா, கேரங் மற்றும் கருளாயீ.

ஆஸ்திரேலியாவின் பத்து ஜமாஅத்துகளில் முதலிடத்தில் காஸில் ஹில் உள்ளது. பிறகு மெல்போர்ன் லாங் வார்ன், மாஸ்டன் பார்க், மெல்போர்ன் க்ளைய்ட், லோகன் ஈஸ்ட், மெல்போர்ன் பேரூக், பென்ரித், பெர்த்,அடிலைய்ட் மற்றும் அடிலைய்ட் வெஸ்ட்.

பருவம் அடைந்தவர்களில் ஆஸ்திரேலியாவின் ஜமாஅத்துகளில் முதலிடத்தில் காஸில் ஹில் உள்ளது. பிறகு மெல்போர்ன் லாங் வார்ன், மார்ஸ்டன் பார்க், லோகன் ஈஸ்ட், மெல்போர்ன் பேரூக், மெல்போர்ன் க்ளைய்ட், பென்ரித், அடிலைய்ட் வெஸ்ட் மற்றும் ப்ளாக் டவுண்.

அத்ஃபாலில் அவர்களுடைய ஜமாஅத்துகளில் மெல்போர்ன் லாங் வார்ன், பெர்த், பெல்மெட்டன், அடிலைய்ட் சவுத், மெல்போர்ன் க்ளைய்ட், பென்ரித், மெல்போர்ன் வெஸ்ட், மார்ஸ்டன் பார்க், ப்ரிஸ்பன் சென்ட்ரல் மற்றும் மெல்போர்ன் பேரூக்.

எல்லாம் வல்ல அல்லாஹ் தியாகம் செய்யக் கூடிய இவர்களின் செல்வங்களிலும், வாழ்நாளிலும் அளவற்ற பரக்கத் ஏற்படுத்துவானாக! இந்தவொரு துஆவையும் செய்யுங்கள்; இந்த 2025 ஆம் ஆண்டு ஜமாஅத்திற்கு அருட்களைக் கொண்ட ஆண்டாகட்டுமாக! மேலான அல்லாஹ் ஜமாஅத்தை எல்லாத் தீங்கிலிருந்தும் பாதுகாத்து வைப்பானாக!

பாகிஸ்தானில் பயங்கரவாத அமைப்புகளும், கூட்டங்களும் அவ்வப்போது கொதித்தெழுந்து கொண்டே இருக்கும். ஜமாஅத்திற்கு எதிராக சில இடங்களில் சட்டத்துக்குப் பின்னால் நின்று கொண்டு இவர்கள் அஹ்மதிகளுக்கு எல்லாவித அநீதிகளையும் இழைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். கப்ருஸ்தான்களும் பாதுகாப்பாக இல்லை. வீடுகளும் பாதுகாப்பாக இல்லை.

அல்லாஹுத்தஆலா இந்த அநீதியிழைப்பவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டை விரைவில் செய்வானாக! அஹ்மதிகளைத் தனது பாதுகாப்பில் வைப்பானாக! ரப்வாவிலும் இந்த மக்கள் பெரிதும் பார்வையை செலுத்தி வருகிறார்கள். அதையும் அல்லாஹ் பாதுகாத்து வருவானாக! சில காலம் முன்பு துஷூது ஷரீஃப் மற்றும் சில துஆக்களின் பக்கம் நான் கவனமூட்டியிருந்தேன். அதன் பக்கம் பாகிஸ்தானின் அஹ்மதிகளும் சிறப்பு கவனம் செலுத்துங்கள். உலகின் ஒவ்வோர் அஹ்மதியும் கவனம் செலுத்துங்கள்.

வங்காள தேசத்தின் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹுத்தஆலா அவர்களையும் பயங்கரவாதத்தின் தீங்கிலிருந்து பாதுகாத்து வைப்பானாக! சிரியாவிலும் இப்பொழுது புதிய அரசு வந்துள்ளது. அல்லாஹ் அங்கும் அஹ்மதிகளை எல்லாத் தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக! தனது பாதுகாப்பில் வைப்பானாக! இவ்வாறே மற்ற நாடுகள் உள்ளன. ஆஃப்ரிக்காவின் நாடுகள் உள்ளன. எல்லா இடங்களிலும் அல்லாஹ் அஹ்மதிகளைத் தனது பாதுகாப்பில் வைப்பானாக!

அதற்காகத் சுயமே அதிகம் துஆக்கள் செய்வது ஒவ்வோர் அஹ்மதி மீதும் கடமையாகும். உங்களுடைய நாடுகளுக்காகவும், பாகிஸ்தானுக்கு வெளியில் வாழும் பாகிஸ்தான் மக்கள் பாகிஸ்தானுக்காவும், உலகின் பொதுவான நிலைமை மற்றும் போர்களின் சூழ்நிலைக்காகவும் துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ் அதன் தீய தாக்கங்களிலிருந்து குற்றமற்றவர்களான, அப்பாவிகளான ஒவ்வொருவரையும் பாதுகாப்பானாக!

புத்தாண்டை இந்த மக்கள் பெரிதும் கொண்டாடுகின்றார்கள். பட்டாசுகள் பெரிதும் வெடிக்கப்படுகின்றன. வான வேடிக்கைகள் பறக்கவிடப்படுகின்றன. ஆனால், ஒவ்வொருவரும் தனது மகிழ்ச்சியை மட்டும் பார்க்கிறார். மற்றவர்களுடைய வேதனை பற்றி அவர்களுக்கு உணர்வு இல்லை. ஏழை மக்கள், ஏழை சமுதாயங்கள், அநீதிக்குள்ளான மக்கள் ஆகிய அவர்கள் மீது ஆற்றல் பெற்ற சமுதாயங்கள் அவர்கள் மீது அநீதியிழைத்துக் கொண்டே செல்கின்றன.

அல்லாஹுத்தஆலா இந்த ஆண்டில் அந்த அனைத்து ஆற்றல்களின் திட்டங்களையும் ஆற்றல் பெற்ற சமுதாயங்களின் திட்டங்களையும் மண்ணோடு மண்ணாக்குவானாக! அல்லாஹ்வின் ஓரிறைமை உலகில் நிலைபெறுவதை நாம் காண்போமாக! அல்லாஹ் நமக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

தமிழாக்கம்

மவ்லவி
அத்தாவுல் முஃக்னீ

* * * * * **


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HGEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகத்துவ மிக்க சாதனைகளான ஜமாஅத் அமைப்பு மற்றும் கிளை அமைப்புகளை நிறுவுதலும் அதன் அருட்களும்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகத்துவ மிக்க சாதனைகளான ஜமாஅத் அமைப்பு மற்றும் கிளை அமைப்புகளை நிறுவுதலும் அதன் அருட்களும் என்ற இந்த உரையானது ஃபஸ்லே உமர் வாழ்க்கை வரலாறு என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. அதன் ஐந்து தொகுப்புகளும் நம்முடைய அல்இஸ்லாம் இணையதளத்தில் இருக்கின்றது. முதல் இரண்டு தொகுப்புகள் பின்னர் கிலாஃபத் அரியணையில் அமர்ந்த ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்களால் எழுதப்பட்டது. எனவே இந்த உரையில் கூறப்பட்டுள்ள சிந்தனைகள், குறிப்புகள் மற்றும் சொற்கள் எப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த ஒரு நபருடையது என்றால் அந்த நபர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களை மிகவும் அருகில் இருந்து பார்த்தவர் ஆவார். மேலும் அன்னாரின் ஆளுமை மற்றும் பணி தொடர்பாக உள்ளத்தை கவரக் கூடிய சிறப்பான எத்தகைய வரைபடத்தை வரைந்து உள்ளார் என்றால் அதை விட சிறந்தது வேறு எதுவும் இருக்க முடியாது.

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 52 ஆண்டுகள் வரை கிலாஃபத்தின் அரியணையில் இருந்தார்கள். அந்த காலகட்டத்தில் அன்னார் இஸ்லாம் அஹ்மதிய்யத்திற்காக எப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த தொண்டை ஆற்றினார்கள் என்றால், மேலும் எப்படிப்பட்ட தனித்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொண்டார்கள் என்றால், அது ஒரு நபியிடம் மட்டுமே குறிப்பாக காணப்படக் கூடிய பண்பாக இருந்தது. அல்லாஹ் அன்னாரை நபி என்று அழைக்கவில்லை தான். ஆனால் அன்னாரிடமிருந்து நபிமார்களுடைய பணியையே அவன் பெற்றான். ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் கலீஃபா இல்லை. மாறாக வாக்களிக்கப்பட்ட கலீஃபா ஆவேன். நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர் அல்ல. மாறாக, என்னுடைய குரல் எல்லாம் வல்ல இறைவனின் குரலாகும் என இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலுமாக இதை அறிவித்துள்ளான். இந்த கிலாஃபத்தின் அந்தஸ்தானது இறைவனால் அனுப்பப்பட்டவர் மற்றும் கிலாஃபத் ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட அந்தஸ்தாகும். இது எப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் என்றால் ஜமாஅத் அதை வீணாக்கிவிட்டு பிறகு இறைவன் முன்னிலையில் தலை குனிந்து நிற்க வேண்டிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி விடாது. எவ்வாறு தினம் தினம் நபி வருவதில்லை என்ற விஷயம் சரியானதோ அதேபோன்று வாக்களிக்கப்பட்ட கலீஃபாவும் தினம் தினம் வருவதில்லை என்பதும் உண்மையே.

(ஸ்வானே ஃபஸ்லே உமர், தொகுதி 4, பக்கம் 58)

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் வருகையை தன்னுடைய வருகையாக கூறி இவ்வாறு கூறுகின்றான்:

كَاَنَّ اللّٰهَ نَــــــزَلَ مِنَ السَّمَا ِ

அன்னாரின் வருகையானது இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வருவதைப் போன்றதாகும். இது அன்னாரின் மகத்துவம் வாய்ந்த உதவி மற்றும் ஒத்தாசைக்கான அறிகுறியாக இருந்தது. வாசகர்களே, எந்த மனிதனுடைய வருகையை அல்லாஹ் தனது வருகையாக கூறியுள்ளானோ அந்த நபர் எப்படிப்பட்ட மகத்துவமான உயர்வான அந்தஸ்தை உடையவராக இருப்பார் என்று சிந்திக்கக் கூடிய இடம் இதுவாகும். எனவே அன்னாரின் இருப்பு என்பது ஒரு சாதாரண இருப்பு அல்ல என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. மேலும் அன்னாரின் தோற்றமோ ஒரு சாதாரண தோற்றம் இல்லை. மாறாக, அன்னார் நூற்றாண்டுகள் மாறாக, ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை மனிதநேயத்தின் உலகில் தோன்றக் கூடியவர். அன்னாரின் ஒளியானது ஒரு தலைமுறைக்கு மட்டுமல்ல ;மாறாக, அது எண்ணற்ற மனித தலைமுறைக்கு தன்னுடைய ஒளியைப் பரப்பிக் கொண்டே செல்கிறது.

கண்ணியத்திற்குரியவர்களே! கிலாஃபத்தின் அரியணையில் அமர்ந்த உடனேயே எல்லாவற்றிற்கும் முதலாக அன்னார் கிலாஃபத்திற்கு எதிரான குழப்பத்தை எதிர்கொள்ள நேர்ந்தது. ஜமாஅத் அமைப்பின் முக்கியமான பொறுப்புகளை அப்போது வரை கிலாஃபத்தை எதிர்க்கக் கூடியவர்கள் வகித்து வந்தார்கள். வெளியீட்டுத் துறையின் பெரும் பகுதி அவர்களிடம் இருந்தது. ரூபாய் மற்றும் பைசாவிற்கான சாவிகள் அவர்களிடத்தில் இருந்தன. இது மட்டுமல்லாமல் அனைவராலும் அறியப்படுகின்ற மற்றும் வெளித்தோற்றத்தில் மிகப் பெரிய அந்தஸ்தில் இருக்கக் கூடியவர்களின் கருத்தும் அவர்களுடைய கருத்திற்கு ஒத்ததாக இருந்தது. அதனுடைய ஆழ்ந்த தாக்கம் ஜமாஅத்தின் மீதும் மிகுதியாக படர்ந்து விட்டது. மேலும், அவர்கள் ஜமாஅத்தின் அனைத்து தகவல் தொடர்பு மற்றும் வெளியீட்டு வழிமுறைகளைப் பயன்படுத்தி கிலாஃபத் அமைப்பிற்கு எதிராக இந்தியா முழுவதும் மிகவும் அபாயகரமான மற்றும் நச்சுப் பிரச்சாரத்தை மிக வேகமாகத் தொடங்கி விட்டனர்.

கண்ணியத்திற்குரியவர்களே! அதற்குப் பிறகும் கூட ஏராளமான சோதனைகள் வந்தன. ஆனால், சந்தேகத்திற்கு இடமின்றி, உறுதிமிக்கவருக்கு ஏற்பட்ட சோதனைகளில் இது ஒரு குறிப்பிடத்தக்க சோதனையாக இருந்தது. எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கு தன்னுடைய சிறப்பான அருள் மற்றும் கருணையின் உதவிக் கரத்தை நீட்டினான். அதன் மூலம் அபாயத்திலும் அபாயகரமான பள்ளத்தாக்கிலிருந்து வெளியேற்றி அன்னார் தன்னுடைய ஜமாஅத்தை வெற்றி மற்றும் உதவியின் புதிய இலக்குகளை நோக்கி முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டே இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் முதலாவது மற்றும் அனைத்தையும் விட மிகப் பெரிய அமைப்பு ரீதியான பணி எதுவாக இருந்தது என்றால், அன்னார் பிளவுப்பட்ட ஜமாஅத்தை சிதறிய காகிதங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு வலுவாய்ந்த புத்தகத்தில் பிணைக்கப்படுவது போன்று ஒரே கையில் மிக வேகமாக இணைத்து விட்டார்கள்.

وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ط

(அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை இறைவன் வழங்குவான்) என்ற வாக்குறுதியானது மீண்டும் ஒருமுறை பூர்த்தி அடைவதன் மூலம் இஸ்லாத்தின் வாழ்வு அதன் உறுதிப்பாடு மற்றும் அதன் அமைதி எப்பொழுதும் கிலாஃபத் அமைப்புடன் தொடர்புடையதாக இருக்கின்றது என்ற உண்மையை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்திக் காட்டி விட்டது.

ஒரு முஸ்லிஹ் மவ்வூத் என்ற ரீதியில் அன்னாரின் அனைத்துப் பணிகளின் மீதும் ஒட்டு மொத்த பார்வையையும் செலுத்தினால் அன்னாரின் இந்த பணியானது சந்தேகத்திற்கிடமின்றி ஒரு தனித்துவம் வாய்ந்த சிறப்பு அம்சமாகவும், உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும் விளங்குகிறது. அதாவது அன்னார் கிலாஃபத்தின் மகத்துவம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை அஹ்மதி நபர்களின் உள்ளங்களில் என்றென்றும் தெளிவுபடுத்தியவாறு உறுதிப்படுத்தி விட்டார்கள். கருத்து வேறுபாடு மற்றும் வேற்றுமையின் தத்துவங்களும் உந்துதல்களும் எத்தகைய தெளிவுடன் ஜமாஅத்திற்கு முன் மீண்டும், மீண்டும் முன்வைக்கப்பட்டன என்றால் கிலாஃபத் அமைப்பை சிதைக்கும் விதமாக எப்போது எந்த ஆடையில் எந்தவோர் இயக்கம் எழுந்தபோதும், ஜமாஅத் அந்த இயக்கத்தை எவ்வித தாமதமும் இன்றி அடையாளம் கண்டு வன்மையாக அதனை புறக்கணித்து விட்டது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் என்ற நிலையில் கிலாஃபத்தின் ஆரம்ப காலகட்டத்திலிருந்தே அன்னாரின் கவனம் ஜமாஅத் அமைப்பை ஒரு வலுவாய்ந்த ஜமாஅத்தாக உருவாக்க வேண்டும் என்பதிலேயே இருந்தது. இஸ்லாமிய கிலாஃபத்தே ராஷிதாவிற்கு எத்தகு அபாயத்தை எதிர்கொள்ள நேரிட்டதோ அதே போன்ற அபாயங்களை அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு எதிர்கொள்ள நேர்ந்தாலும் ஜமாஅத் அதை நேர்த்தியுடன் எதிர்கொள்ளக் கூடிய வகையில் ஆயத்தம் செய்திருந்தார்கள். இது மட்டுமல்லாமல், சமுதாயங்களின் முன்னேற்றம் மற்றும் வீழ்ச்சியின் காரணிகளின் மீது பார்வை செலுத்தியவாறு ஜமாஅத்திற்கு ஏற்படும் தடைகளிலிருந்து தூய்மைப்படுத்தியவாறு என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய உண்மையான மற்றும் நிரந்தரமான வாழ்விற்கு உத்திரவாதமாக அமையக் கூடிய அனைத்து வழிமுறைகளையும் அன்னார் மேற்கொள்ள விரும்பினார்கள். ஜமாஅத் அமைப்பை உருவாக்குவதன் தொடர்பாக அன்னார் எந்தெந்த வழிமுறைகளை மேற்கொண்டார்களோ மேலும் எந்தெந்தத் திட்டங்களை வகுத்தார்களோ அவை அனைத்தும் ஒரு வரலாற்று ஆசிரியர் மற்றும் சிந்தனையாளர் என்ற ஒரு நபரின்

மூலமாகத் தான் அது சாத்தியமாகும். மேலும் அந்த நபர் அறிவும், செயலும் உள்ளவராக இருக்க வேண்டும். மனித இயல்புகளை நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். பல்வேறு மனித வர்க்கங்களின் மனநிலையை கூர்ந்து கவனிக்க வேண்டும். இவை அனைத்தையும் தவிர்த்து, அனுபவமுள்ள ஆன்மிகவாதியாகவும் இருக்க வேண்டும். இந்த அனைத்து சிறப்பு அம்சங்களும் அன்னாருடைய இயல்பில் ஒன்றிணைக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த அனைத்து நல்லியல்பானது எப்படிப்பட்ட ஓர் அமைப்பை பெற்றெடுத்தது என்றால் அது இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் என்ற அமைப்பின் உருவில் மிகவும் வலுவாய்ந்த நிலையில் உலகத்திற்கு முன்னால் ஒரு முன்னுதாரணமான அமைப்பாக எடுத்து வைக்கப்படுகிறது.

முழு அமைப்பின் அதிகாரமானது உயர்நிலையில் உள்ள காலத்தின் கலீஃபாவின் இருப்பே ஆகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மேலும் உலகளாவிய ஜமாஅத்தின் கிளைகள் கிராமங்களையும், நகரங்களையும் கடந்து மாவட்டங்கள், மாநிலங்கள் மற்றும் நாடுகள் அளவில் படர்ந்து விட்டது. இவை அனைத்தும் ஒரு வலுவாய்ந்த மற்றும் அறுபடாத நூலில் கோர்த்த மணியை போன்று ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டுள்ளது. எந்த இடத்தில் மூன்று நபர் அல்லது அதைவிட அதிக அஹ்மதிகள் இருக்கின்றார்களோ அங்கு முறையாக ஜமாஅத் நிறுவப்படுகிறது. அங்குள்ள நிலைமைக்கு ஏற்றவாறு நியமனம் அல்லது தேர்தல் மூலமாக ஒரு ஸத்ர் (தலைவர்) நியமிக்கப்படுகிறார். பெரிய ஜமாஅத்துகளில் அமாரத் (அமீர்) நியமிக்கப்படுகிறார்கள். இதன் அடிப்படையில் ஒவ்வொரு உள்ளூர் ஜமாஅத்திலும் ஸத்ர் அல்லது அமீர் பதவி வகிப்பார். பிறகு ஒவ்வொரு மாவட்டம் அல்லது மாநிலத்தின் ஜமாஅத்துகளுக்கும் ஒரு அமீர் நியமிக்கப்படுகிறார். அதற்கு மேல் அனைத்து நாட்டிற்கும் தேசிய அளவிலான ஒரு அமீர் இருப்பார். இது மட்டுமின்றி, ஜமாஅத் அமைப்பில் பல துறைகள் நிறுவப்பட்டுள்ளன. அதற்கான கண்காணிப்பாளரை செயலாளர் என்று அழைக்கிறோம். உதாரணமாக, செகரட்டரி மால் (பொருளாளர்), செகரட்டரி தஃலீம், (கல்விச் செயலாளர்), செகரட்டரி ஜாயிதாத்( சொத்துச் செயலாளர்), செகரட்டரி ஸியாஃபத் (விருந்து உபசரிப்பு செயலாளர்) போன்றவை ஆகும். இந்த அனைத்து பொறுப்பாளர்களும் தேர்தலின் மூலமாகவோ அல்லது நிலைமைக்கு ஏற்ப நியமனம் செய்யப்பட்டோ தன்னார்வத்துடன் கலப்பற்ற முறையிலும் அர்ப்பணிப்புடனும் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றார்கள். இந்த உள்ளூர், மாவட்ட, மாநில மற்றும் நாட்டின் பொறுப்பாளர்கள் அல்லாமல் காலத்தின் கலீஃபாவின் மேற்பார்வையில் கீழ்வரும் முக்கியமான துறைகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

### ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா

இது ஜமாஅத்தில் உள்ள அனைத்தையும் விட பெரிய மற்றும் முக்கியமான துறையாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய வாழ்நாளிலேயே இதை நிறுவினார்கள். துவக்கத்தில் தற்போது உள்ள நிலை இதற்கு இல்லை என்றாலும் பல படித்தரங்களை கடந்து சென்றவாறு பின்னர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் இத்துறையானது மெல்ல மெல்ல தற்போதைய வடிவத்தை மேற்கொண்டது. ஜமாஅத்தில் கட்டாயச் சந்தாவிற்கான முறையான ஏற்பாடுகள் அனைத்து தர்பிய்யத், தஃலீம், தப்லீஃக் மற்றும் தொண்டு பணியை கண்காணித்தல் ஆகியவை ஸத்ர் அஞ்சுமனின் பொறுப்பாகும். அனைத்து உள்ளூர், மாவட்ட மற்றும் மாநில அமாரத்தினுடைய செயல்பாடுகளும் ஸத்ர் அஞ்சுமனின் மேற்பார்வையில் இயங்கும். இந்த அஞ்சுமனின் கீழ் எண்ணற்ற அலுவலகங்கள் மற்றும் (நஸாரத்துகள் எனும்) துறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு துறையின் உயர் அதிகாரியும் நாஸிர் என்றழைக்கப்படுவார். உதாரணமாக, நாஸிர் தஃலீம், நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாஅத், நாஸிர் நஷ்ர் வ இஷாஅத். நாஸிர் பைத்துல் மால் ஆமத் வ கர்ச், நாஸிர் உமூரே ஆமா போன்றவை. ஒட்டுமொத்த அஞ்சுமனின் மேற்பார்வையாளர் நாஸிர் ஆஃலா என்றழைக்கப்படுவார்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தினந்தோறும் உள்ள அமைப்பு ரீதியான விவகாரங்களில் நாஸிர்மார்களை அழைத்து நேரடியாக வழிகாட்டல்களை வழங்கி வருவார்கள். மேலும் அவர்களுடைய பணிகளை சுயமே கண்காணித்து வந்தார்கள். இதுவே அன்னாரின் நடைமுறையாக இருந்தது. ஆனால், இது மட்டுமின்றி ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்காக சிலநேரங்களில் பொதுக் கூட்டங்களிலும் நாஸிர்மார்களுக்கு ஜமாஅத் மற்றும் இயக்கத்தின் அமைப்பு ரீதியான வழிமுறை தொடர்பாக அறிந்து கொள்ளும் வகையில் எவ்வாறு வழிநடத்துவார்கள் என்றால்,அதன் மூலம் இனிவரும் காலங்களில் இயக்கத்திற்கு தர்பிய்யத் பெற்ற பணியாளர்கள் கிடைப்பதில் உதவியாக இருக்கும்.

அமைப்பின் உயர்மட்டத் தலைவர் என்ற நிலையில் அன்னார் எங்கு அடிப்படையான மற்றும் சிலநேரங்களில் விரிவான வழிகாட்டல்களை வழங்குவார்களோ அங்கு அவ்வப்போது பணியை ஆய்வு செய்தவாறு சில நேரங்களில் கண்டிக்கவும் சிலநேரம் கனிவாகவும், சிலநேரங்களில் மிகவும் கடினமாகவும் பிடிப்பார்கள். சிலநேரங்களில் உள்ளத்தை ஈர்க்கக் கூடிய அளவிற்கு மன்னிப்புடன் நிர்வாகத் துறையினர் மற்றும் பணியாளர்களை சீர்திருத்தவும் செய்வார்கள். மன்னிப்பை மேற்கொள்ளும் போது அன்னாரின் கண்டும் காணாமல் இருக்கக் கூடிய அந்த தோரணை மிகவும் அழகாக இருக்கும். எண்ணற்ற அலட்சியங்களை காணும்போது கண்களை மூடிக் கொள்வார்கள். மேலும் பிடிக்கப்படும் போது மிகவும் துல்லியமான பார்வையுடன் நிர்வாகத் துறையின் பலவீனத்தை தோண்டி தோண்டி வெளியே எடுப்பார்கள். ஒரு சாதாரண பணியாளர்களுக்கென்று தினந்தோறும் அலுவலகப் பணிக்கான ஒரு குறிப்பிட்ட நேரம் இருக்கின்றது. ஆனாலும் முக்கியமான ஜமாஅத் பணியின் தேவை இருக்கும் நேரத்தில் அன்னார் அலுவலக நேரத்தையும் கருத்தில் கொள்ள மாட்டார்கள். மேலும் பணியாளர்களிடம் 24 மணிநேரமும் அவர்கள் ஆஜராக வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தால் அவர்கள் 24 மணிநேரமும் ஆஜராகுவதற்கு தயாராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

அன்னாரின் தனிப்பட்ட நிலை எவ்வாறாக இருந்தது என்றால், அன்னார் (ரலி) அலுவலக நேரங்களை கணக்கில் கொள்ள மாட்டார்கள். இரவும், பகலுமாக சுற்றிக் கொண்டே அவர்களால் முடிந்த வரை தம்முடைய அதிகமான நேரத்தை ஜமாஅத்தின் பணிக்காக அர்ப்பணித்திருந்தார்கள். குறைந்தது 16 மணிநேரம் தினமும் வேலை செய்வது அன்னாருடைய வழக்கமாக இருந்தது. தமக்கு கீழ் உள்ள பணியாளர்களிடமும் அதே போன்று கடின உழைப்பை எதிர்பார்ப்பார்கள். எனவே இதன் அடிப்படையில் எப்போதாவது ஜமாஅத்திற்கு நன்மை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் நேரத்தை கருத்தில் கொள்ளாமல் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிக்கு கவனமூட்டுவார்கள். தேவை என்று கருதினால் முழு அலுவலகத்தையும் முக்கியமான கடமையை நிறைவேற்றுவதற்காக திறந்தே வைப்பதற்கான வழிகாட்டலை வழங்குவார்கள். அவ்வாறான நேரத்தில் அலுவலகங்கள் 24 மணி நேரமும் திறந்தே இருக்கும். மேலும் இந்த தொடர்பானது நிலைமையை கருத்தில் கொண்டவாறு நாட்களிலோ வாரங்களிலோ மாறாக மாதங்கள் வரையும் நீடித்துக் கொண்டே இருக்கும். பணியாளர்களுக்கு சுழற்சி முறையில் டியூட்டி கொடுக்கப்படும்.ஆனால், பொதுவாக நாஸிர்மார்களிடம் குறித்த நேரத்தில் ஆஜராக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. எனவே சிலநேரங்களில் நாஸிர்மார்கள் தங்களுடைய படுக்கையை எடுத்துக் கொண்டு வந்து அலுவலகத்திலேயே தங்கி விடுவார்கள். மேலும் நிலைமை சீராகும் வரை வீட்டைப் பற்றி எந்த நிலவரத்தையும் கேட்க மாட்டார்கள்.

### தஹ்ரீக்கே ஜதீத் அஞ்சுமன் அஹ்மதிய்யா

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1934-ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் தப்லீஃக் மற்றும் மார்க்கத்தைப் பரப்பக் கூடிய நோக்கத்துடன் ஒரு புதிய பொருளாதாரத் திட்டமான தஹ்ரீகே ஜதீத் திட்டத்தை நிறுவினார்கள். இத்திட்டத்தின் மூலமாக வசூல் செய்யப்படுகின்ற சந்தாக்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கான வாழ்வாதாரங்கள் மற்றும் வெளிநாடுகளில் தப்லீஃக் அமைப்பை கண்காணிப்பதற்காக அஞ்சுமன் தஹ்ரீகே ஜதீத் என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இந்தத் துறையின் கீழும் பலப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்த இன்சார்ஜூம் வக்கீல் என்றழைக்கப்படுவார்கள். உதாரணமாக வக்கீலுத் தஃலீம், வக்கீலுத் தப்ஷீர், வக்கீலுல் மால் போன்றவர்கள். மேலும் இந்த அஞ்சுமனின் உயர் கண்காணிப்பாளராக இருக்கக் கூடியவர் வக்கீலே ஆஃலா



என்றழைக்கப்படுவார்.

வாசகர்களே! தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக கூறுவதுடன் மஜ்லிஸே அஹ்ரார் தொடர்பாகவும் சுருக்கமாக கூறுவது உகந்ததாக இருக்கும்.அஹ்ராரியர்கள் 1934-ஆம் ஆண்டில் ஜமாஅத்தை கடுமையாக எதிர்த்தனர். மேலும் முழு இந்தியாவிலும் முஸ்லிம்களை நமக்கு எதிராகத் தூண்டி விட்டனர். ஜமாஅத்திற்கு எதிராக குழப்பத்தை ஏற்படுத்தினார்கள்.

மஜ்லிஸே அஹ்ரார் இவ்வாறு அறிவித்தார்கள்:

நாங்கள் ஒரு வருடத்திற்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும். இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் தப்லீஃக் செய்ய மாட்டோம் என்றும், அவர்களின் பக்கம் செல்லவும் மாட்டோம் என்று உறுதி எடுத்துள்ளோம். மேலும், மிர்ஸாயியத்தை வேரோடு அறுப்பதில் மட்டுமே கவனம் செலுத்துவோம் என்றும் உறுதிமொழி எடுத்துள்ளோம்.

அஹ்ராரியர்கள் ஜமாஅத்தின் மீது எப்படிப்பட்ட அடிப்படையற்ற, ஆதாரமற்ற அவதூறுகளை சுமத்தினர் என்றால், அதன் மூலம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கும், நாட்டிற்கும் எந்த நலனும் இல்லை என்று கூறி முஸ்லிம்களை ஏமாற்றி வந்தனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மிகவும் பொறுமையுடனும், துணிவுடனும் உறுதி வாய்ந்த உறுதிப்பாட்டுடனும் இந்த அனைத்து ஆதாரமற்ற அபத்தமான அவதூறுகளுக்கு பதில் அளித்தார்கள். அது மட்டுமல்லாமல், உண்மை மற்றும் பொய்யை வேறுபடுத்திக் காட்ட வேண்டும் என்பதனால் அவர்களை முபாஹிலாவிற்கு அழைத்தார்கள். ஆனால், அவர்கள் ஓடி விட்டனர். அஹ்ராரியர்கள் முபாஹிலாவிலிருந்து தப்பி ஓடியது எந்த அளவிற்கு தெளிவானதாகவும், வெளிப்படையானதாகவும் இருந்தது என்றால் அவர்களின் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் விதமாக அவர்களுடைய பிரபலமான ஒரு பத்திரிகை ஆசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார்:

மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மதிடம் இருந்து முபாஹிலாவின் பெயரைக் கேட்டதும் அஹ்ராரிகளின் தலைவர்களின் உடல் நடுநடுங்க ஆரம்பித்து விடுகிறது. நான் அந்த மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது அல்ல.

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஜமாஅத்திற்கு ஆறுதல் அளித்தவாறு கூறுகின்றார்கள்:

நீங்கள் அஹ்ராரிகளின் குழப்பத்தைக் கண்டு பதட்டம் அடைய வேண்டாம். நான் அவர்கள் தோல்வியை அவர்களுக்கு அருகாமையில் காண்கின்றேன்.

ஜமாஅத்தை அழித்து விடுவோம் என்று ஒருபுறம் மஜ்லிஸே அஹ்ரார் வாதம் புரிகின்றனர். மறுபுறம் இஸ்லாத்தின் பயில்வான் இஸ்லாத்தை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பதற்கு தம்முடைய உடல், உள்ளம் மற்றும் உயிர் அனைத்தையும் அர்ப்பணித்து விட்டார்கள். தஹ்ரீகே ஜதீதின் வெற்றியைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

தற்போது தஹ்ரீகே ஜதீத் கீழ் நம்முடைய முபல்லிஃக் (மார்க்க பிரச்சாகரர்) ஜப்பான் வரை சென்றுள்ளார்கள். தஹ்ரீகே ஜதீதின் கீழ் நம்முடைய முபல்லிஃக் (மார்க்கப் பிரச்சாகரர்) சீனா வரை சென்றுள்ளார்கள். தஹ்ரீகே ஜதீதின் கீழ் நம்முடைய முபல்லிக் சுமத்ரா மற்றும் ஜாவா வரை சென்றுள்ளார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளினால் ஸ்பெயின், இத்தாலி, ஹங்கேரி, போலந்து, அல்பேனியா, யூகோஸ்லாவியா மற்றும் அமெரிக்காவில் முபல்லிக்மார்கள் சென்றுள்ளார்கள். மேலும் ஆஃப்ரிக்க கண்டங்களிலும் இந்தத் திட்டத்தின் கீழ் முபல்லிஃக்மார்கள் சென்றுள்ளார்கள். மேலும் இந்த முபல்லிஃக்கின் மூலமாக எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் ஆயிரக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யா இயக்கத்தில் இணைந்துள்ளார்கள்.

(அல்ஃபஸ்ல், நவம்பர் 28, 1944)

இன்று அல்லாஹ்வின் அருளால் 200-க்கும் அதிகமான நாடுகளில் அஹ்மதிய்யாவின் செடி நாட்டப்பட்டுள்ளது.

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப பின்னர் அஹ்ராரியர்களுக்கு மிகுந்த அவமானமும், இழிவும் ஏற்பட்டது. அனைவரும் அவர்களை ஏகமனதாக இஸ்லாத்தின் துரோகி என்றழைத்தனர். அவர்களின் பிரிவினான தேவ்பந்த் பிரிவு அவர்கள் தொடர்பாக இவ்வாறு எழுதுகிறார்கள்:

அல்லாஹ்வின் சட்டத்தை அறிவதிலிருந்து வெறுப்படைந்து விட்டனர். இஸ்லாம் ஈமான் மற்றும் பேருபகாரத்தை வெறுத்து விட்டனர்.இறைத் தூதரின் வேதத்தை பேணிக்காப்பதில் முற்றிலும் சோர்ந்து விட்டனர். காஃபிர்களிடம் தோழமை முஸ்லிம்களிடம் வெறுப்பு. அதில் இஸ்லாத்தின் அஹ்ரார் என்ற வாதமும் செய்தார்கள். ஆனால், அஹ்ரார் எங்கு உள்ளார்கள். அவர்களோ இஸ்லாத்தின் துரோகிகள். பஞ்சாபின் அஹ்ரார் இஸ்லாத்தின் துரோகிகள்.

அரபு நாட்டின் நாகரீகத்தை அறியாத இவர்கள் நற்பேறு இழந்தவர்கள். அல்லாஹ்வின் கோபத்திற்கு அஞ்சுவதில்லை. எப்படியாவது ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும். மதீனாவின் தலைவருடன் இவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. பஞ்சாபின் அஹ்ரார் இஸ்லாத்தின் துரோகிகள்.

**அஞ்சுமன் அஹ்மதிய்யா வக்ஃபே ஜதீத்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஒரு மகத்துவமான சாதனை வக்ஃபே ஜதீத் திட்டத்தை துவங்கியதாகும். ஆரம்பத்தில் இத்திட்டமானது துணைக் கண்டத்திற்கு மட்டுமே இருந்தது. பின்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் முழு உலகிலும் அதை விரிவுபடுத்தினார்கள். வக்ஃபே ஜதீதை நிறுவியதற்கான அடிப்படை நோக்கம் கிராமப்புற ஜமாஅத்துகளில் தர்பியத் மற்றும் சீர்திருத்தம் ஏற்படுத்துவதாகும். அதன் மூலம் அவர்களின் முகம் சீரழிவுகளிலிருந்து திருப்பப்பட்டு மீண்டும் புதிய வகையில் முன்னேற்றத்தின் பக்கம் திரும்ப வேண்டும் என்பதாகும். இவ்வாறு செய்ததனால் எண்ணற்ற பல கனிகள் வெளிப்பட்டன. சுருக்கமாக, முபல்லிஃக்மார்கள் மற்றும் முஅல்லிம்மார்கள் மூலமாக மார்க்க போதனைகள், தர்பியத், திருக்குர்ஆன் கற்றல், கற்பித்தல் ஆகிய பணிகள் தொடங்கப்பட்டு முழு ஜமாஅத்தும் மிகவும் வலுவாகவும், நிலையானதாகவும், ஒருங்கிணைந்ததாகவும், அமைப்பு ரீதியாகவும் ஒன்றிணைந்து காணப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் வசூல் செய்யப்படும் சந்தா தஃலீம், தர்பியத் மற்றும் அதற்காக நியமிக்கப்பட்டுள்ள முஅல்லிம்களை கண்காணிப்பது ஆகியவற்றிற்காக ஒரு தனிப்பட்ட அஞ்சுமன் வக்ஃபே ஜதீத் அஞ்சுமன் அஹ்மதிய்யா என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ளது. இதன் கீழ் பல பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவைச் சார்ந்த இன்சார்ஜும் நாஸிர் என்றழைக்கப்படுவார்.

**நிஸாமே அமாரத்**

ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா அமைப்பை முழுமைப்படுத்தியதுடன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முறையாக அமாரத்தின் அமைப்பை நடைமுறைப்படுத்தினார்கள். மேலும் அமீருக்குக் கட்டுப்படுகின்ற ஆன்மாவை ஜமாஅத் அமைப்பில் மிகுந்த முயற்சியுடனும், உழைப்புடனும் தொடரச் செய்தார்கள். இஸ்லாத்தில் அமாரத்திற்கு எவ்வகையான தோற்றம் நிறுவப்பட்டுள்ளதோ ஹுஸூர் அதன் உயர் தகுதியை நன்கு அறிந்திருந்தார்கள். அதனுடைய ஒவ்வொரு அசைவிலும் அன்னாருக்கு ஆழ்ந்த கவனம் இருந்தது. அன்னார் இந்த தலைப்பில் ஜமாஅத்திற்கு போற்றத்தக்க அறிவுரையை வழங்கியுள்ளார்கள். அமாரத்தின் ஆட்சி அதிகாரம் தொடர்பாக சிறந்த முறையில் ஜமாஅத் சகோதரர்களுடைய சிந்தனையில் பதிய வைப்பதற்கு முயற்சி செய்தார்கள்.

**மஜ்லிஸே ஷூரா அல்லது மஜ்லிஸே முஷாவரத்**

1992-ம் ஆண்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முதல் முறையாக வருடாந்திர மஜ்லிஸே முஷாவரத் அமைப்பை நிறுவினார்கள். 1992-ம் ஆண்டில் நிகழ்ந்த மஜ்லிஸே முஷாவரத் ஜமாஅத் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் தொடக்க உரையில் மஜ்லிஸே ஷூராவின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை விவரித்தவாறு முஷாவரத் தொடர்பான இஸ்லாமிய நடைமுறை, ஷூராவின் ஒழுக்கங்கள், கருத்து கூறுபவர்களின் கடமைகள், அஜெண்டாவை கருத்தில் கொள்வதற்கான வழிமுறை, ஷூராவின் தீர்மானங்கள் மற்றும் அதன் நிலைபாடுகளை குறித்து கூறினார்கள். 1922-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டு வரை இந்தத் துறையானது நேரடியாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் தர்பிய்யத்தின் கீழ் மற்றும் மேற்பார்வையில் இயங்கி வந்தது. நாம் இன்று காணக் கூடிய இந்த முஷாவரத்தின் அமைப்பின் ஒவ்வோர் அம்சத்திலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பங்களிப்பு மற்றும் ஆளுமையின் முத்திரையும் இருக்கின்றது. மேலும் இதை நிறுவியதில் அன்னாரின் பல ஆண்டு கால கடின உழைப்பும் மேற்பார்வையும்,கலப்பற்ற துஆக்களும் பெரும் பங்காற்றியுள்ளது.

வாசகர்களே! கிளை அமைப்புகளை நிறுவியதே ஹுஸூர் (ரலி) அவர்களின் சிறந்த நிர்வாகத் திறனுக்கு சான்றாகும். ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அனைத்து ஜமாஅத்தையும் ஒரே சரடில் கோர்த்து, ஒருவர் மற்றவருடன் பிணைக்கப்பட்டு மற்றும் அவர்களின் செயல்முறையை வடிவமைக்க கிளை அமைப்புகள் நிறுவப்பட்டன. 1923-ம் ஆண்டில் லஜ்னா இமாயில்லாஹ், 1935-ம் ஆண்டில் குத்தாமுல் அஹ்மதிய்யா, 1940-ம் ஆண்டில் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் போன்ற கிளை அமைப்புகள் அன்னாரால் நிறுவப்பட்டன.

எல்லாவற்றிற்கும் முன்பாக தற்போது நான் லஜ்னா இமாயில்லாஹ் தொடர்பாக சுருக்கமாக குறிப்பிடுகிறேன். அஹ்மதி பெண்கள் அன்னாரின் தலைமையில் எத்தகு முன்னேற்றத்தின் இலக்குகளை கடந்து கொண்டே சென்றார்கள் என்றால் அதனுடைய விவரம் மிகுந்த சுவாரஸ்யமானதும், இஸ்லாமிய மக்களுக்கு ஊக்குவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. பெண்களுக்கென்று குறிப்பிடத்தக்க போதனைகள் வழங்குவதற்கான துறையை நிறுவுதல், நுஸ்ரத் பல்கலைக்கழகம் மூலமாக கல்லூரியின் உயர் கல்விக்கான ஏற்பாடு போன்றவை. அதில் மார்க்க தர்பிய்யத்தின் அம்சங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. மேலும், லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பின் மூலமாக பல விதமான கைவினைப் பயிற்சிகள், பெண்களுக்கென்று தனிப்பட்ட வருமானத்திற்கான ஏற்பாடுகள் மற்றும் பெண்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் மற்றும் உரை நிகழ்த்துவதற்கான ஆர்வத்தை ஏற்படுத்துதல், கட்டுரைகளின் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டுதல், அவர்களுக்கென்று தனி நாளிதழ்கள், பத்திரிகைகள் துவங்குதல் மேலும் ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு என்று தனி அமர்வில் பெண்களே பெண்களுக்கு உரை நிகழ்த்துவது ஆகியவை. இவை மட்டுமின்றி, தஃலீமிற்கு தேவையான அனைத்து விதமான வழிவகைகளையும் செய்திருந்தார்கள். ஏழ்மையிலும் அஹ்மதி பெண்பிள்ளைகள் குறைந்தபட்ச அடிப்படை போதனையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற வகையில் அதற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்கள்.

சுருக்கமாக, தம்முடைய 52 ஆண்டுகால கிலாஃபத் காலகட்டத்தில் அன்னார் (ரலி) இந்தியாவின் பிற்படுத்தப்பட்ட பெண்களை தாழ்ந்த நிலையில் இருந்து எப்படிப்பட்ட உயர்வான இடத்தில் அமர்த்தி விட்டார்கள் என்றால் அதை உலகத்திற்கு முன்பு இஸ்லாத்தின் மகத்துவத்திற்கு முன்னுதாரணமாக எடுத்து வைக்கலாம். சில விஷயங்களில் உலகில் முன்னேற்றமடைந்த மற்றும் சுதந்திரமான நாடுகளில் உள்ள பெண்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக திகழ்கிறார்கள். அஹ்மதிப் பெண்களின் உலகளாவிய அமைப்பான லஜ்னா இமாயில்லாஹ் அன்னாரின் மகத்துவம் வாய்ந்த தலைமையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் படைத்துள்ளது. அந்நியர்களும் இந்த அமைப்பின் சிறப்பான பணியின் தாக்கத்திற்கு உள்ளாகாமல் இருந்ததில்லை.

தன்ஸீம் நாளிதழ் டிசம்பர் 28, 1926 தேதி வெளியான தனது இதழில் இவ்வாறு எழுதுகிறது:

லஜ்னா இமாயில்லாஹ் காதியான் அஹ்மதி பெண்களுக்குரிய அஞ்சுமனின் பெயராகும். இந்த அஞ்சுமனிற்கு கீழ் எல்லா இடங்களிலும் பெண்களுக்கான சீர்திருத்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, ஆண்களிடமிருந்து எழுகின்ற ஒவ்வொரு திட்டங்களும் பெண்களின் உதவியுடன் வெற்றிகரமாக மாற்றப்படுகிறது. இந்த அஞ்சுமன் ஆனது அனைத்துப் பெண்களையும் இயக்க நோக்கங்களுக்காக செயல்வடிவில் பிணைத்து விட்டது. பெண்களின் ஈமான் ஆண்களை விட அதிக தூய்மையானதாகவும், பிணைக்கப்பட்டதாகவும் திகழ்கிறது. பெண்களின் மார்க்கத் துடிப்பானது ஆண்களை ஒப்பிடுகையில் அதிக பாதுகாப்பாக இருக்கின்றது. லஜ்னா இமாயில்லாஹ்வின் பணிகள் தொடர்பாக எந்த அளவு நாளிதழ்களில் அச்சிடப்படுகின்றதோ அதிலிருந்து அஹ்மதிகளின் வருங்கால சந்ததிகள் தற்போதுள்ள சந்ததிகளை விட அதிக உறுதிவாய்ந்தவர்களாகவும், உணர்வு கொண்டவர்களாகவும் இருப்பார்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும் எந்த பூந்தோட்டம் காலத்தின் மாற்றங்களால் தன்னுடைய இயற்கை வளத்தையும், பொழிவையும், பசுமையையும் இழப்பது கண்டிப்பானது என்று கருதப்படுகிறதோ அந்தத் தோட்டத்தை என்றென்றும் அஹ்மதிப் பெண்கள் புத்துணர்ச்சியுடன் பராமரிப்பார்கள்.

(தன்ஸீம் நாளிதழ், அமிர்தரஸரஸ், டிசம்பர் 28, 1926)

அதே போன்று லஜ்னாவின் மாதாந்திர இதழ் மிஸ்பாஹ்வை படித்தப் பிறகு தேஜ் என்ற ஆரிய சமாஜின் பத்திரிகை ஆசிரியர் எழுதுகிறார்:

என்னுடைய பார்வையில் இந்த நாளிதழ் ஆரியசமாஜை சார்ந்த ஒவ்வொருவரும் பார்ப்பதற்கு தகுதியானது ஆகும். இதை ஆய்வு செய்வதன் மூலம் அஹ்மதிப் பெண்கள் தொடர்பாக அவர்கள் திரையில் அடைபட்டு கிடக்கின்றார்கள்; அவர்கள் எந்த ஒரு வேலையும் செய்வதில்லை என்ற இந்த தவறான எண்ணமானது அத்தருணமே விலகிவிடும். மேலும் அவர்களில் மார்க்கப் பற்று மற்றும் தப்லீஃக்கின் துடிப்பு எந்த அளவு காணப்படுகின்றது என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வார்கள். நாம் பெண்களுக்கான சமூகத்தை உருவாக்கி விட்டு திருப்தி அடைந்து விட்டோம். ஆனால், அஹ்மதிப் பெண்களுக்கு முறையாக ஒவ்வோர் இடத்திலும் ஒரு அஞ்சுமன் இருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் செய்கின்ற பணிகளுக்கு முன்னால் நம்முடைய பெண்களின் பணி ஒன்றுமற்றதாக இருக்கின்றது. மிஸ்பாஹ் இதழைப் பார்க்கும்போது அஹ்மதிப் பெண்கள் இந்தியா, ஆஃப்ரிக்கா, அரபு, எகிப்து, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் எவ்வாறு எந்த அளவிற்கு பணி செய்கின்றார்கள்; மேலும் அவர்களுடைய மார்க்க உணர்வு எந்த அளவிற்கு போற்றக் கூடியதாக இருக்கின்றது என்பதை எண்ணி நாம் வெட்கப்பட வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு அவர்களின் அமீர் பள்ளிவாசலுக்காக 50 ஆயிரம் ரூபாய்க்கான தேவை உள்ளது என அறிவித்தார். மேலும் இந்தத் தொகையை பெண்களுடைய சந்தாக்களிலிருந்து மட்டும்தான் முழுமைப்படுத்த வேண்டும் என்றும் கூறிவிட்டார். எனவே சிறிது காலமான 15 நாட்களிலேயே அந்தப் பெண்கள் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு பகரமாக 55 ஆயிரம் ரூபாய் ஒன்று திரட்டி விட்டார்கள்.

### மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா

1938-ம் ஆண்டில் இந்த மஜ்லிஸ் நிறுவப்பட்டது. மஜ்லிஸின் பணியை சிறந்த முறையில் செயல்படுத்துதவதற்காக இந்த அமைப்பானது பல பிரிவுகளில் பிரிக்கப்பட்டது. உதாரணமாக, இஃதிமாத், தஜ்னீத், மால், தஃலீம், தர்பிய்யத், இஸ்லாஹ் வ இர்ஷாத், தஹ்ரீகே ஜதீத், கித்மதே கல்க், ஸேஹத் வ ஜிஸ்மானி, வகாரே அமல், ஸனத் வ திஜாரத், இஷாஅத், அத்ஃபால், இஃதிமாத் துறையின் இன்சார்ஜ முஃதமித் என்றும் பிற துறைகளின் ஒவ்வொரு இன்ஜார்ஜூம் முஹ்தமிம் என்றும் அழைக்கப்படுவார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்தத் துறைகள் தொடர்பாக குத்தாமுக்கு அவ்வப்போது பயனுள்ள வழிகாட்டல்களை வழங்கி வருவார்கள். அந்த உயரிய வழிகாட்டல்களாவது மஷ்அலே ராஹ் என்ற பெயரில் ஒரு பெரிய நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

### மஜ்லிஸே அத்ஃபாலுல் அஹ்மதிய்யா

ஜுலை மாதம், 1940-ம் ஆண்டில் ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு ஒரு வாரத்திற்குள் 8 வயதிலிருந்து 15 வயதுடைய குழந்தைகளை ஒன்று திரட்டுங்கள்; மேலும் அத்ஃபாலுல் அஹ்மதிய்யா என்ற பெயரில் அவர்களின் அமைப்பை நிறுவுங்கள் என கட்டளையிட்டார்கள். ஏனெனில், இந்த குழந்தைகள் அடிப்படையில் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் நர்சரி (சிறுவர்கள் இல்லம்) ஆக இருப்பார்கள். பிற்காலத்தில் இந்த சிறுவர்கள் தான் மஜ்லிஸின் பணியை மேற்கொள்ள வேண்டும். எனவே ஆரம்பத்திலிருந்தே அவர்களுக்கு இதற்கான பயிற்சி அளிக்க வேண்டும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

### மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்:

1940-ம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் என்ற அமைப்பை நிறுவினார்கள். மேலும் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் அமைப்பை நிறுவியதன் நோக்கம் மற்றும் குறிக்கோள் இதுவாகும். அதாவது பொதுவாக வாழ்வின் இந்த பகுதியில் மனிதன் அமல் செய்வதில் சோம்பேறி ஆகிவிடுகின்ற போது, மார்க்கப் பணியில் சோம்பேறியாக இருக்கக் கூடாது; மே மேலும் அவர் தம்மைத்தாமே பயனற்ற மற்றும் செயலிழந்த உறுப்பாக கருதக் கூடாது என்பது இதன் ஒரு நோக்கம் ஆகும்.

இந்த மஜ்லிஸ்கள் எங்கு அமைப்பு ரீதியாக மற்றும் தர்பிய்யத் பணியில் மிகுந்த பயனுள்ள தொண்டுகள் செய்வதற்கான வாய்ப்பை பெற்றுள்ளனவோ அங்கு அறிவு சார்ந்த துறையிலும் அவர்களின் பதிவானது பொறாமைப்படக் கூடியதாக இருக்கின்றது. இந்த அமைப்புகளின் வெற்றி மற்றும் அவர்களின் சிறந்த முடிவுகள் ஆனது எப்படிப்பட்ட வெளிப்படையான உண்மைகளாக இருந்தன என்றால் அதிலிருந்து அந்நியர்களும் தாக்கத்திற்கு உள்ளாகாமல் இருந்ததில்லை. எனவே அஹ்மதிய்யத்தை எதிர்ப்பதில் அவப்பெயரை பெற்றெடுத்த மஜ்லிஸ் அஹ்ராரின் ஸம்ஸம் என்ற பத்திரிகை நமது ஜமாஅத்தின் இந்த பொறாமைப்படக் கூடிய அமைப்பு தொடர்பாக மனம் தளர்ந்தவாறு இவ்வாறு எழுதுகிறது:

நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றோம்? என்றால் நமக்கென்று எந்தவொரு அமைப்பும் இல்லை. மேலும் அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? என்றால் அவர்களுக்கென்று அமைப்புகளின் கீழ் அமைப்புகள் இருக்கின்றன. நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றோம் என்றால், ஆதரவற்றவர்களாக சிதறி கவலையில் இருக்கின்றோம். அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்றால், ஒரு வட்டத்திற்குள் வட்டமிட்டு வரையறுக்கப்பட்டு வலுவாக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கிறார்கள். அஹ்மதிய்யத்தின் ஒரு வட்டம் இருக்கின்றது! அதில் உள்ள சிறுவர்கள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் சுருக்கமாக, ஒவ்வோர்

அஹ்மதியின் மையக் கருத்தும் நபித்துவம் மீது தான் வலம் வருகிறது; மேலும் ஒன்றுகூடுகிறது. ஆனால், அமைப்பின் அவசியம், அருட்கள், ஞானம் மற்றும் உணர்வுகள் ஆகியவை தொடர்பாகவும் கேளுங்கள். இந்த விரிவான ஒருங்கிணைந்த அமைப்புடன் நின்றுவிடவில்லை. அந்த படர்ந்த வட்டத்திற்குள் பல சிறிய சிறிய வட்டங்களை உருவாக்கி ஒவ்வொரு நபரையும் அவர் அசையாத வண்ணம் மற்றவருடன் இணைக்கப்பட்டுள்ளார்.

பெண்களுக்கான நிலையான அமைப்பு லஜ்னா இமாயில்லாஹ் ஆகும். வருடாந்திர மாநாட்டின்போது அவர்களுக்கென்று தனிப்பட்ட முறையில் மாநாடு நடைபெறுகிறது. இளைஞர்களுக்கென்று குத்தாமுல் அஹ்மதிய்யா என்ற தனி அமைப்பு உள்ளது. 15 முதல் 40 வயது வரை உள்ள ஒவ்வொரு ஜமாஅத் உறுப்பினரும் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் இணைவது அவசியமாகும். 40 வயதை விட அதிகமானவர்களுக்கு அன்ஸாருல்லாஹ் என்ற நிரந்தர பிரிவு உள்ளது. அதில் சவ்த்ரி சர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவர்களும் இணைந்துள்ளார்கள்.நான் இந்த சம்பவங்கள் மற்றும் நிலைமைகளை கண்டவாறு முஸ்லிம்களிடம் இதை மட்டும் கேட்க விரும்புகிறேன். தற்போது உங்களுடைய விழித்தல் எழுதல் மற்றும் ஒன்றிணைதலுக்கான நேரம் வரவில்லையா என்ன? நீங்கள் இந்த எண்ணற்ற சுவர்களுக்கு முன்னால் ஏதாவது ஒரு சுவரையாவது எழுப்பி உள்ளீர்களா? எதிரிகள் பெண்களையும் போர்க்களத்தில் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள். என்னுடைய பார்வையில் நம்முடைய தோல்வி மற்றும் அவமானத்திற்கான மிகப் பெரியக் காரணம் இந்த தவறான கொள்கைதான்.
(ஸம்ஸம் லாஹூர், 23 ஜனவரி, 1945)

தற்போது நான் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் போற்றத்தக்கப் பண்புகள் தொடர்பாக அந்நியர்களின் சில கருத்துகளை முன்வைத்து என்னுடைய இந்த உரையை முடித்துக் கொள்கிறேன். மவ்லானா குலாம் ரஸூல் மெஹர் அவர்கள் மிகப்பெரிய வரலாற்று ஆசிரியராக இருந்தார். மேலும் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் ஹுஸுர் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு இணங்க சிறந்த தொண்டினை ஆற்றுவதற்கான பாக்கியத்தைப் பெற்றுள்ளார்கள். அன்னார் எழுதுகிறார்:

உங்களுடைய எந்தப் புத்தகத்திலும் இந்த மகத்துவம் வாய்ந்த மனிதரைக் குறித்த சாதனை முழுவதுமாகக் காணக் கிடைப்பதில்லை. நாம் அவரை மிகவும் அருகிலிருந்து கண்டுள்ளோம். பலமுறை சந்தித்துள்ளோம். தனிப்பட்ட விஷயங்களை பகிர்ந்துள்ளோம். முஸ்லிம் சமுதாயத்திற்காக அன்னார் தமது இருப்பையே அர்ப்பணித்து இருந்தார்கள்.

எனக்கு ஒருமுறை இரவோடு இரவாக காதியான் சென்று ஹஸ்ரத் ஸாஹிபிடம் ஆலோசனை கேட்க வேண்டியது இருந்தது. அப்போது மனிதநேயத்திற்காக அன்னாருடைய உள்ளத்தில் இருந்த வேதனைக்கான அந்தக் காட்சி தற்போதும் என் கண்முன்னே இருக்கின்றது. முஸ்லிம் சமுதாயத்திற்கான நலன் மற்றும் முன்னேற்றத்திற்கான பிரச்சனையை எதிர்கொள்ளும்போதெல்லாம் அன்னாரின் செயல் திறன் மிக்க ஆலோசனையானது எங்களுடைய தைரியத்தை அதிகரிக்கச் செய்யும். அப்படிப்பட்ட தருணத்தில் அன்னாரின் ஒவ்வொரு அணுக்களும் சமுதாய வேதனையினால் துடித்துக் கொண்டிருக்கும். பிரிவினை வாதிகள் கிளர்ச்சியில் அன்னாரின் பெயரை ஒருபோதும் கண்டதில்லை. மிர்ஸா ஸாஹிப் மிகவும் புத்திக் கூர்மை உடையவராக இருந்தார்கள். நான் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் இப்படிப்பட்ட ஓர் ஆன்மிக மற்றும் அரசியல்வாதி தலைவரை கண்டதில்லை. மிர்ஸா ஸாஹிபை போன்ற ஒரு புத்திக் கூர்மையுள்ள மனிதரைக் கண்டதில்லை. தன்னலமற்ற அறிவுரைகள், தெளிவான ஆலோசனைகள் மற்றும் சரியான வழிகளில் செயல்திட்டம் ஆகியவை அன்னாரின் சிறப்புத் தன்மைகளாக காணப்பட்டன. முஸ்லிம்கள் மிர்ஸா ஸாஹிபிற்கு மதிப்பளிக்கவில்லை என்பது வருத்தம் அளிக்கின்றது. பலத்த எதிர்ப்பிற்கு எதிரில் மிர்ஸா ஸாஹிப் மனமுடைந்து மனச்சோர்வடைந்ததை நான் கண்டதேயில்லை. மிர்ஸா ஸாஹிபின் உள்ளத்தின் விளக்கு என்றென்றும் ஒளிர்ந்து கொண்டே இருக்கும். நாங்கள் மனச்சோர்வுடனும், விரக்தியுடனும் அன்னாரை சந்திக்கச் செல்வோம். மேலும் அன்னாரை சந்தித்து விட்டு அறையில் இருந்து வெளியே வரும்போது விரக்தியின் மேகங்கள் மறைந்து எங்களுடைய நோக்கத்தில் வெற்றிக் கண்டு விட்டது போன்று நாங்கள் உணர்வோம். அன்னார் வலுவான சான்றுகளை முன்வைப்பார்கள். மேலும், செயல்படுத்தக் கூடிய விஷயத்தை கூறுவார்கள். மேலும் அதில் நின்று விடமாட்டார்கள். அனைத்து விதமான தியாகங்கள் மற்றும் ஒத்துழைப்பின் முன்னோடியாக திகழ்வார்கள். அதன் மூலம் எங்களிடம் தைரியம் மற்றும் பரந்த மனப்பான்மைக்கான உணர்வு ஏற்படும்.
(இக்பால் மற்றும் அஹ்மதிய்யத் பக்கம் 502)


எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகளுக்கு ஏற்ப நம்முடைய வாழ்க்கையை அமைப்பதற்கான நற்பேறை வழங்குவானாக! ஆமீன்.

தமிழாக்கம்

மவ்லவி

அபுல் ஹஸன் ஆபித்

* * * * *




**24-ம் பக்கத் தொடர்ச்சி.......**
**குத்பா பேருரை 10.1.25**

எப்படிப்பட்ட செயல் என்றால் பெருமானார் (ஸல்) அவர்களின் அடிப்படை வழிகாட்டல்களும், முழு இஸ்லாமிய வரலாறும் இதை தெளிவாக மறுக்கின்றது. அந்தப் பெண் குற்றவாளி என்று கூறப்படும் என்றால் அதாவது சில அறிவிப்புகளில் எடுத்துரைக்கப்பட்டிருப்பது போன்று அந்தப் பெண் பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்ய திட்டம் தீட்டினாள் என்று வருகிறது. ஆகவே அவளுக்கு எதிராக ஆகுமான வழியில் மரண தண்டனை விதித்திருக்க வேண்டும் என்று கூறப்படும் என்றால் அது சரியானது.

ஆனால், கேள்வி என்னவென்றால் உம்மு கிர்ஃபாவை காட்டிலும் கடுமையான, அதிக கொலை செய்த எதிரிகளையும், ஆண் எதிரிகளையும் கூட ஸஹாபிகள் இவ்வாறு கொலை செய்தது கிடையாது. ஸைது பின் ஹாரிஸா போன்ற நன்கு அறிந்திருந்த ஒரு ஸஹாபியின் தலைமையில் ஒரு வயோதிக பெண்ணுடன் இவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது என்று கருதப்படுவதை முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே அறிவுப்பூர்வமாக பார்க்கும் போது இந்தக் கதை பொய்யானது என்றும் இட்டுக்கட்டப்பட்டது என்றும் தெளிவாக தெரிகின்றது. மார்க்க துவேஷமற்ற ஒருவருக்கு இதில் எவ்வித சந்தேகமும் எஞ்சி இருக்காது.

இப்போது ஆதாரப்பூர்வமாக பார்ப்போம்! முதல் விஷயம் என்னவென்றால், இப்னு ஸஅது இப்னு இஸ்ஹாக ஆகியோர் இந்த அறிவிப்புக்கு எந்தவோர் அறிவிப்பாளர் தொடரையும் முன் வைக்கவில்லை. எந்தவொரு நம்பத் தகுந்த அறிவிப்பாளர் தொடருமின்றி பெருமானார் (ஸல்) அவர்களின் தெளிவான வழிகாட்டலுக்கும், ஸஹாபிகளின் பொதுவான, பிரபல்யமான வழிமுறைக்கும் எதிராக இதுபோன்ற அறிவிப்புகள் இருக்கும் என்றால் அவற்றை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், மிகவும் நம்பத் தகுந்த ஹதீஸ் நூல்களான ஸஹீஹ் முஸ்லிமிலும், சுனன் அபூதாவூதிலும் இதே சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், அவற்றில் உம்மு கிர்ஃபா சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றில் உம்மு கிர்ஃபா கொலை செய்யப்பட்ட சம்பவத்தைப் பற்றிய எந்தக் குறிப்பும் கிடையாது. அத்துடன் இன்னும் சில விவரங்களிலும் எடுத்துரைக்கப்பட்ட அறிவிப்புகளில் இப்னு ஸஅது போன்றோரின் கூற்றுடன் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. ஸஹீஹான ஹதீஸ்கள் பொதுவான வரலாற்று அறிவிப்புகளை காட்டிலும் நிச்சயமானதாகவும், ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும், அதிக உறுதியானதாகவும், முன்னுரிமை பெற்றதாகவும் இருக்கின்றது.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்....)**

தமிழாக்கம்

மவ்லவி

A.P.A. தாரிக் அஹ்மது

* * * * *

# சின்னச் சின்ன விஷயங்களுக்காக குலா மற்றும் தலாக் வரை விவகாரம் சென்றடைவது மிகவும் அபாயகரமான மற்றும் விரும்பத்தகாத வழிமுறையாகும்

## (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் உரை - ஜூன் 21,1946)

கணவன் மனைவி உறவு என்பது மனித வாழ்வின் மிக முக்கிய தூண்களில் ஒன்றாகும். உலக வாழ்க்கைக்காக மனிதனுக்கு எவையெல்லாம் அவசியமாக இருக்கின்றதோ மேலும் எதன் மூலமாக மனிதன் நிம்மதியும் அமைதியும் பெறுகின்றானோ அதில் கணவன், மனைவி தொடர்பு ஒன்றாகும். கணவன், மனைவிக்கு இடையிலான அந்தத் தொடர்பின் மூலமாக மனிதனுக்கு எவ்வாறான நிம்மதியும், அமைதியும் கிடைக்கின்றது என்றால் அது வேறு எந்த ஒரு வழியிலும் கிடைப்பதில்லை. திருக்குர்ஆனில் இறைவன் இந்த இருப்புகளை ஒருவர் மற்றவருக்கு அமைதி மற்றும் நிம்மதிக்கான காரணியாக கூறியிருக்கின்றான். இதே போன்று பைபிளிலும் வருவதாவது; இறைவன் ஆதமிற்காக ஹவ்வாவைப் படைத்தான். அதனால் ஆதமிற்கு அமைதியும், நிம்மதியும் கிடைக்கும். அதாவது ஹவ்வா இல்லாமல் ஆதமிற்கு நிம்மதியும், அமைதியும் வேறு எந்த வழியிலும் இல்லை. எனவே இந்த இரண்டு இருப்புகளும் ஒருவர் மற்றவருக்கு அமைதி, நிம்மதி மற்றும் சமாதானத்திற்கான காரணியாக இருக்கின்றார்கள். சிலநேரங்களில் இந்த இரண்டு நபர்களுக்கு இடையில் சண்டை, சச்சரவுகள் உருவாகி விடுகின்றன. மேலும், அமைதியும், நிம்மதியும் மனிதனுக்கு ஏற்படுவதற்கு பகரமாக கணவன், மனைவிக்கும் மேலும் மனைவி கணவனுக்கும் உலகில் மிகப் பெரிய பிரச்சனைகளுக்கு காரணியாக ஆகிவிடுகின்றனர். ஆயிரக்கணக்கான கணவன்மார்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் தங்களுடைய மனைவிக்கு மிக மோசமான தண்டனையாக இருக்கின்றனர். அதே போன்று ஆயிரக்கணக்கான மனைவிமார்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் தங்கள் கணவன்மார்களுக்கு மிக மோசமான தண்டனையாக ஆகிவிடுகின்றனர். இஸ்லாம் இவ்வாறான சூழலில் நமக்கு எவ்வாறான வழிகாட்டியாக இருக்கின்றது என்றால் அதன் இந்தக் கட்டளைகள் இருக்கும்போது நம்மிடம் வெறுப்போ, குழப்பமோ இருப்பதற்கு எந்தக் காரணமும் தென்படுவதில்லை.

ஆனால், கேள்வி என்னவென்றால் இஸ்லாத்தின் போதனைகளின்படி செயல்படுவதற்கு எத்தனை நபர்கள் ஆயத்தமாக இருக்கின்றார்கள்? முஸ்லிம் அல்லாதவர்கள் ஏற்கனவே இஸ்லாமியப் போதனைகளின் மீது ஆட்சேபனை செய்கின்றனர். மறுபுறம் இஸ்லாமியப் போதனைகளை ஏற்றுக் கொள்கின்ற அந்த முஸ்லிம்களோ இஸ்லாமியப் போதனைகளை விட்டு விலகி தொலைவில் உள்ளனர். மேலும் திருக்குர்ஆனின் போதனைகளின் பக்கம் வருவதை அவர்கள் விரும்புவதில்லை. மேலும் மற்ற நீதிமன்றங்கள் மூலமாக தங்களுடைய தீர்ப்புகளைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றார்கள். ஒருவேளை யாராவது ஓர் ஆண் அல்லது பெண்ணிற்கு இடையில் சண்டை ஏற்பட்டது விட்டது என்றால் அவர்களிடம் நீங்கள் திருக்குர்ஆனுடைய போதனைக்கு ஏற்றவாறு இந்த சண்டைகளை தீர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டால், அவர்களுடைய உறவினர்கள் இடையில் வருகின்றனர். மேலும் பேச ஆரம்பித்து விடுகின்றனர். இந்தப் போதனையின் மீது செயல்படுவதனால் நம்மால் வாழ முடியாது என்கின்றனர். நாம் எப்படி இதன் மீது தீர்ப்பு பெற முடியும்? என்கிறார்கள். அதாவது அவர்களுடைய பார்வையில் திருக்குர்ஆன் மனிதனுடைய புத்தகமாகும். அது நூலகங்களை அழகுப்படுத்துவதற்காக வைக்கப்பட வேண்டும்; ஆனால் அதன் படி செயல்படக் கூடாது. ஆக, எந்த நபர் திருக்குர்ஆனுடைய போதனையை செயல்பட தகுதியற்றது என்று எண்ணுகின்றாரோ அவ்வாறான நபர் இஸ்லாத்தின் அந்த வரையறையில் ஏன் இருக்கின்றார்? அவ்வாறான நபர் இஸ்லாத்தின் போதனையை விட்டு விட வேண்டும். தான் செயல்படத் தகுந்ததாகக் கருதும் வேறு ஏதாவது ஒரு மார்க்கத்தை அவர் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். ஆகையால் குறைந்தபட்சம் அவருடைய உள்ளமாவது சுதந்திரமாக இருக்கும். அவர் இஸ்லாத்தின் போதனையை தவறானதாகவும், தனக்கு விருப்பமற்றதாகவும் எண்ணுகின்றபோது, பிறகு அவர் தனது ஆன்மாவை கொன்றுவிட்டு ஏன் இதை படித்துக் கொண்டிருக்கின்றார்? மேலும் ஏன் இதை விட்டு விடவில்லை?

நான் நம்முடைய ஜமாஅத்திற்கு கவனமூட்ட விரும்புகின்றேன். அதாவது நம்முடைய ஜமாஅத்தில் கணவன், மனைவிக்கு இடையிலான சண்டைகள் முன்பை விட அதிகமாக உருவாகி விட்டன. எந்த அளவிற்கு என்றால், சண்டைகள் உருவாகுவது தொடர்பாக பார்த்தோமேயானால் அது ஒன்றும் தவறான விஷயம் இல்லை. ஏனெனில், அது மனிதனுடைய குண இயல்பாகும். அதாவது, கணவன், மனைவிக்கு இடையே சிலநேரங்களில் வெறுப்புகள் உருவாகி விடுகின்றன. ஆனால், சண்டைகள் ஏற்பட்டதன் பிறகு இஸ்லாத்தின் போதனைகளை கண்டும் காணாமல் விட்டு விடுவது மிக மோசமான விஷயமாகும். மக்கள் இவ்வாறான செயலின் மூலம் பொதுவாக இஸ்லாமிய போதனைகளை முதுகுக்குப் பின்னால் வீசிவிட்டு அநீதியின் எல்லை வரை சென்று விடுகின்றார்கள் என்பதை பார்த்து இருக்கின்றேன். மேலும் இஸ்லாமியப் போதனைகளை மறுபுறம் வைத்து விடுகின்றனர். எனக்கு இவ்வாறான விஷயம் மிகவும் வருத்தத்தை ஏற்படுத்துகின்றது. நமக்கோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி இருக்கின்றது. நாம் அவரைப் பார்க்கின்றோம். அதாவது அன்னார் (ஸல்) கணவராக மட்டுமல்ல ; நபியாகவும் இருந்தார்கள்; தலைவராகவும் இருந்தார்கள். இருப்பினும் இவை அனைத்து விஷயங்கள் இருந்தபோதிலும் அன்னாருடைய நிலை எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், ஒருமுறை அன்னார் (ஸல்) தம்முடைய ஒரு மனைவியிடம் ஒரு ரகசியத்தைக் கூறினார்கள். மேலும் உம்முடைய எந்தத் தோழியிடமும் அதனைக் கூறக் கூடாது என்று கட்டளையும் வழங்கினார்கள். ஆனால், அன்னார் (ரலி) தம்முடைய சில தோழிகளிடம் அந்த இரகசியத்தை கூறிவிட்டார்கள். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவிமார்களாகவும் இருந்தார்கள்.

உங்களுடைய மனைவி அந்த ரகசியத்தை உங்களுடைய சில மனைவிகளிடம் கூறிவிட்டார் என அல்லாஹ் அன்னாருக்கு இது குறித்து இல்ஹாம் மூலம் தெரியப்படுத்தி விட்டான். அதனால், பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்வதற்காக தாம் பள்ளிவாசலிலேயே தங்குவேன்; மேலும் வீடுகளில் மனைவிமார்களிடம் செல்ல மாட்டேன் என்று தீர்மானம் எடுத்தார்கள். அன்னார் (ஸல்) பள்ளிவாசலில் கூடாரம் அமைப்பதற்கான கட்டளை வழங்கினார்கள். அன்னாருடைய கட்டளையின்படி பள்ளிவாசலில் அன்னாருக்காக கூடாரம் அமைக்கப்பட்டது. மேலும் அன்னார் (ஸல்) அதிலேயே தங்க ஆரம்பித்தார்கள். மக்காவாசிகள் மனைவிமார்களிடம் மென்மையாக நடந்து கொள்ள மாட்டார்கள். மாறாக, எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்றால், பஞ்சாபிகள் பெண்களை சீர்திருத்துவதற்காக ஒரு வழிமுறையை வைத்திருக்கின்றனர். அது என்னவென்றால், தடி எடுத்து அடித்து, அடித்து சீர்திருத்துவார்கள். இதே போன்று மக்காவாசிகளும் தங்களுடைய மனைவிமார்களிடம் கடுமையாக நடந்து கொள்வார்கள். மேலும் அவர்களுடைய பெண்களுக்கு எந்த விஷயத்திலும் ஆலோசனை வழங்குவதற்கான தைரியம் இருந்ததில்லை அல்லது ஆண்களுக்கு முன்னால் பேசுவதற்கும் தைரியம் இருந்ததில்லை. மதீனாவில் மக்காவை விட ஓரளவிற்கு பெண்களுக்கு சுதந்திரம் இருந்தது.

ஆகையால் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக பெண்களுக்கு என்ன சுதந்திரத்தை வழங்கினானோ அது முந்தைய சுதந்திரத்தை விட மிகப் பெரியதாகும். எவ்வாறு இருப்பினும், மதீனாவுடைய பெண்கள் சிலநேரங்களில் தங்களுடைய ஆண்களுக்கு முன்னால் பேசுவார்கள். ஆனால், மக்காவாசிகளிடம் இப்பொழுதும் அந்த கடுமை உள்ளது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் தங்குவதற்கான ஏற்பாடு செய்தபோது, அன்னார் (ஸல்) தமது மனைவிமார்களை விவகாரத்து செய்து விட்டார்கள் என்ற பேச்சுகள் ஸஹாபிகளிடம் வர ஆரம்பித்தன.

அப்பொழுது ஒரு ஸஹாபி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்றார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவில் இருந்து இரண்டு,மூன்று மைல் தொலைவில் ஒரு கிராமத்தில் வசித்து வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த நாட்களில் வாழ்வாதாரம் மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆகையால், நாங்கள் தினமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவையில் செல்ல முடியாமல் போனது. அதற்காக எங்களுக்குள் செல்வதற்கு முறை நியமித்து வைத்தோம். ஒரு நண்பர் சென்றார் என்றால், அவர் முழு நாளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களுடைய அவையில் இருப்பார். மாலையில் திரும்பி வருவார். எங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அவையின் அனைத்து விஷயங்களையும் மற்ற சகோதரர்களுக்கு கூறுவார். மறுநாள் அவர் பணிக்கு சென்று விடுவார். மேலும் மாலையில் திரும்பி வந்து எங்களுக்கு அனைத்து விஷயங்களையும் கூறுவார். எந்த நாள் இந்த அனைத்து சம்பங்களும் நடந்தனவோ அந்த நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய நண்பருடைய முறையாக இருந்தது. அவர் மதீனாவில் இருந்து திரும்பி வந்த உடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்றார். உமர் (ரலி) அவர்கள் மதீனாவில் என்ன நடந்தது? என்று கேட்டார்கள். அதற்கு அவர் கூறினார்: ரஸூல் (ஸல்) அவர்கள் தம்முடைய அனைத்து மனைவிகளையும் விவாகரத்து செய்து விட்டனர். அவருடைய இந்த பேச்சைக் கேட்ட உடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் பதற்றப்பட்டார்கள். ஏனெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிக்காஹ்வில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஹஃப்ஸா(ரலி) அவர்களும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவில் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் அமர்ந்து அழுது கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) சென்ற உடனேயே ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: நான் உன்னை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு கண்ணியத்துடன் நடந்து கொள்ள கூறிக் கொண்டே இருந்தேன் அல்லவா? ;ஆயிஷாவை பின்பற்றாதே என்றேன் அல்லவா? ஆயிஷா (ரலி) அவர்களின் மதிப்பு வேறு ; உன்னுடைய மதிப்பு வேறு என்றேன் அல்லவா? ஆனால், நீ என்னுடைய பேச்சைக் கேட்கவில்லை. இப்பொழுது அதனுடைய விளைவைப் பார்க்கின்றாய்.

பிறகு, உண்மையிலேயே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் அனைத்து மனைவிமார்களுக்கும் தலாக் கொடுத்து விட்டார்களா என்ன? என்று ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் கூறினார்கள்: தலாக் கொடுக்கவில்லை ; ஆனால் அனைவரிடமும் கோபித்துக் கொண்டு சென்று விட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அவைக்கு சென்றார்கள். உள்ளே செல்வதற்கான அனுமதி பெற்றார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உள்ளே வருவதற்கான அனுமதி நல்கினார்கள். அன்னார் (ரலி) உள்ளே சென்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் உள்ளே சென்ற உடன் அன்னார் (ஸல்) ஒரு பாயில் படுத்துக் கொண்டிருந்தார்கள். அதனுடைய படுக்கை மிருதுவாக இல்லாமல் இருந்தது. நான் உள்ளே சென்ற உடன் பெருமானார் (ஸல்) எழுந்து அமர்ந்து விட்டார்கள். ஆனால், முழு உடலிலும் பாயினுடைய அடையாளங்கள் இருந்தன. நான் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஓய்வுக்காகவும், ஆடம்பரத்திற்காகவும் உள்ள அனைத்துப் பொருட்களும் சீசரிடமும் மற்றும் கிஸ்ராவிடமும் உள்ளது. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் நாட்களை மிகவும் சுகபோகமாகவும், அமைதியுடனும் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் தங்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை வாழ எந்தப் பொருட்களும் இல்லை. உங்களிடம் இந்த பாய் இருக்கின்றது. அதனுடைய அடையாளம் உங்களுடைய உடல் முழுவதும் தென்படுகின்றது என்றேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த விஷயத்தை நான் அறிந்து கொண்டே கூறினேன். ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கோபம் இருந்தது என்றால், அது விலக வேண்டும் என்பதற்காக கூறினேன். என்னுடைய பேச்சைக் கேட்ட உடன் பெருமானார் (ஸல்) புன்னகைத்தார்கள். நான் சந்தர்ப்பத்தை பயன்படுத்தியவாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, நீங்கள் உங்களுடைய அனைத்து மனைவிமார்களுக்கும் தலாக் கொடுத்து விட்டீர்களா? இது உண்மையா? என்று கேட்டேன். அதற்கு, தலாக் கொடுக்கவில்லை என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நீ ஆயிஷாவைப் பின்பற்றாதே என்றும், தங்களுக்கு மிகவும் கண்ணியமும், மரியாதையும் கொடுக்க வேண்டும் என்றும் நான் ஹஃப்ஸாவிற்கு புரிய வைக்கின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பிறகு, கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் மக்காவாசிகள் ஆவோம்; என்பதும், எங்களுக்கு முன்னால் எங்களுடைய மனைவிமார்கள் பேச மாட்டார்கள் என்பதும் தாங்கள் அறியாதது அல்ல. ஒருநாள் ஏதோ ஒரு விஷயம் தொடர்பாக என்னுடைய மனைவி எனக்கு ஆலோசனை தர ஆரம்பித்தார். அப்பொழுது நான் அவரிடம் , உனக்கு என்ன அருகதை இருக்கின்றது? உனக்கு ஆலோசனை தரக் கூடிய வேலை ஒன்றும் இல்லை என்றேன். ஆனால், எங்களுடைய பெண்களும் சிறிதுசிறிதாக மதீனாவின் பெண்களினால் மாறிவிட்டார்கள். ஒருநாள் நான் பேசிக் கொண்டு இருந்தேன். என்னுடைய மனைவி ஏதோ ஒரு விஷயம் தொடர்பாக எனக்கு ஆலோசனை வழங்க முயற்சித்தார். அப்பொழுது நான் அவரை தடுத்தேன்.

அவ்வாறு இருந்தும் அவர் எனக்கு பதில் கொடுத்தார். அதாவது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீட்டில் அவர்களுடைய மனைவிமார்கள் அன்னாருக்கு ஆலோசனை வழங்குகின்றார்கள். நீங்கள் என்னை தடுப்பதற்கு யார்? என்றார். இவ்வாறே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் நுட்பமான முறையில் சுட்டிக் காட்டியவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் தான் பெண்களுக்கு சுதந்திரத்தை வழங்கியுள்ளார்க என்றார். ஒருவேளை அவர்களிடம் ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டது என்றால் அவர்கள் மன்னிப்பிற்கு தகுதியானவர்கள் ஆவர். ஆனால், இந்த அனைத்து விஷயங்களுக்குப் பிறகும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெண்களுடைய உரிமைகள் தொடர்பாக மிக உயரிய முறையில் பாதுகாப்பு வழங்கி உள்ளார்கள். எந்த அளவிற்கு என்றால் அன்னார் (ஸல்) தம்முடைய இறுதி பேருரையில் பெண்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்ளுங்கள்; உங்களுடைய அடிமைகளை உங்களுடைய சகோதரர்களைப் போன்று பார்த்துக் கொள்ளுங்கள். மேலும் அவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்ட வேலையை அவர்களிடம் வாங்காதீர்கள் என்று வாக்குறுதி வாங்கினார்கள்.

எவ்வாறு இருப்பினும், இஸ்லாம் பெண்களுடைய உரிமையை எந்த அளவிற்கு பாதுகாத்திருக்கின்றது என்றால் வேறு எந்த மார்க்கமும் அவ்வாறு செய்யவில்லை. ஆனால், மனிதன் எப்படிப்பட்ட ஒரு தொடர்புடைய இருப்பாக இருக்கின்றான் என்றால் அவனிடம் பலவிதமான பழக்கங்களும், விருப்பங்களும் ஏற்பட்டு விடுகின்றன. ஆகையால் கணவனுக்கு மனைவியிடம் சிலநேரங்களில் கருத்து வேறுபாடுகள் உருவாகி விடுகின்றன. மேலும் அந்தத் தொடர்பில் ஒரே நிலை இருப்பதில்லை.ஒருவேளை இந்த கருத்து வேறுபாடு மிகவும் வலுவடைந்து விட்டது என்றால், அவ்வாறான சந்தர்ப்பத்தில் இஸ்லாமியக் கட்டளையின் அடிப்படையில் ஆண், பெண்ணை தலாக் கொடுக்கலாம் அல்லது பெண், ஆணிடம் இருந்து குலா பெற்றுக் கொள்ளலாம்.

ஆயினும், தலாக் மற்றும் குலா கொடுப்பதற்கு முன்பு சில கட்டளைகளை ஷரீஅத் எடுத்துரைத்துள்ளது. தலாக் அல்லது குலா பொதுவானதாக ஆகிவிடக் கூடாது என்பதற்காக அவற்றை கருத்தில் கொள்வதை ஷரீஅத் ஆண், பெண் மற்றும் நீதிபதியின் மீது கடமையாக ஆக்கியிருக்கின்றது. எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

إِنَّ أَبْغَضَ الْحَلَالِ عِنْدَ اللّٰهِ الطَّلَاقُ

பொருள்: நிச்சயமாக ஹலாலான காரியங்களில் மிகவும் வெறுக்கத்தக்க விஷயம் இறைவனுடைய பார்வையில் தலாக் ஆகும். எப்பொழுது தலாக் ஆகுமான விஷயங்களில் மிகவும் வெறுக்கத்தக்கதாக கூறப்பட்டிருக்கின்றதோ அங்கு ஒரு நம்பிக்கையாளரின் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதான நேசம் இருக்கின்றது. அவர் எந்த பொருளுக்கு அருகில் செல்கின்றாரோ அது தொடர்பாக அவர் புரிந்து வைத்திருக்கின்றார். இது இறைவனுக்கு மிகவும் வெறுப்பான விஷயமாகும். ஆகையால் அதற்கு அருகில் எவ்வாறு செல்ல முடியும் என்று கூறுகின்றார்.

எந்த விஷயம் எல்லாம் ஆகுமானதாக இருக்கின்றதோ அவை அனைத்தையும் செய்ய வேண்டியது கட்டாயம் இல்லை. உங்களில் ஒவ்வொரு நபரும் அறிந்ததுதான். அதாவது பனாரஸ், கல்கத்தா, மதராஸ் அல்லது பாம்பே செல்வது ஹலால் ஆகும். ஆனால், அங்கு எவ்வளவு நபர்கள் சென்றுள்ளனர். ஹலால் என்பதற்கு அர்த்தம் அதை கட்டாயம் செய்ய வேண்டும் என்றால் பிறகு யாருக்கெல்லாம் இந்த நகரங்களுக்கு செல்ல பணம் இல்லையோ அவர்கள் தங்களுடைய சொத்துக்களை விற்பனை செய்து இந்த ஹலாலான பணியை கட்டாயம் நிறைவேற்றுவார்கள். ஆனால், மக்கள் இவ்வாறு செய்வதில்லை என்பதிலிருந்து ஹலாலான விஷயத்தை கட்டாயம் செய்ய வேண்டியது அவசியம் இல்லை என்பதை புரிந்து கொள்ள முடியும். இடம், பொருள், ஏவல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு செயல்படுவது அவசியமாகும். ஒருவேளை ஹலாலான வேலையை செய்வதற்கு விரும்பத்தகாத சூழல்கள் உருவாகின்றன என்றால் அந்த வேலையில் இருந்து எவ்வாறு இருப்பினும் விலகி இருக்க வேண்டும். உதாரணத்திற்கு வெங்காயத்தை சாப்பிடுவது ஹலால் ஆகும். ஆனால், பள்ளிவாசலில் வெங்காயம் சாப்பிட்டு விட்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் அங்குள்ள

மக்களுக்கு அதனுடைய மணம் கஷ்டத்தைக் கொடுக்கின்றது. இதேபோன்று மனிதன் ஹலாலாக இருக்கின்ற பச்சை நிறம் கொண்ட துணியை அணியலாம் அல்லது ஊதா நிறத்தில் உள்ள துணியை அணியலாம் அல்லது மஞ்சள் நிறத்தில் உள்ள ஆடையை அணியலாம். ஆனால், இந்த மஞ்சள் நிற ஆடையை வாங்கிக் கொள்ளுங்கள் என்று ஒருவருடைய நண்பர் கூறுகின்றார்.அதற்கு, எனக்கு மஞ்சள் நிறம் பிடிக்காது என்று அவர் கூறுகின்றார் என்றால், அவருடைய பார்வையில் ஹலாலான அந்தப் பொருள் அவருடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு மேலும் அவருடைய இயல்புக்கு ஏற்றவாறு இல்லை என்று பொருள்.

மேலும், ஹலால் மற்றும் தூயதை உண்ணுங்கள் என்று உண்பது தொடர்பான அல்லாஹ்வுடைய கட்டளை இருக்கின்றது. ஆனால் சில மக்கள் கத்திரிக்காயை உண்பதில்லை. சில மக்களுக்கு பூசணிக்காய் பிடிக்காது. அவர்களிடம் நீங்கள் ஏன் கத்திரிக்காய் உண்பதில்லை? என்று கேட்கப்பட்டால் அதற்கு, எனக்கு அது பிடிக்காது என்று அவர் கூறுகிறார். அல்லது வேறொரு நபரிடம், நீங்கள் ஏன் பூசணிக்காய் உண்பதில்லை? என்று கேட்கப்படுகின்றது. அதற்கு, என்னுடைய மனைவிக்கு இது பிடிக்காது என்று அவர் கூறுகின்றார். இவ்வாறு மனிதன் வீடு கட்டுகின்றான். அது தன்னுடைய விருப்பம் தன்னுடைய இயல்புக்கு ஏற்றவாறு கட்டுகின்றான். ஒருவர் ஒரு மாடிக் கட்டிடம் கட்டுகின்றார். மற்றொருவர் இரண்டு மாடிக் கட்டடம் கட்டுகின்றார். வேறொருவர் மூன்று மாடிக் கட்டடத்தைக் கட்டுகின்றார். ஒருவர் அதில் தோட்டம் வைக்க வேண்டும் என்று விரும்புகின்றார். ஒருவர் தோட்டம் இல்லாமல் கட்டிக் கொள்கின்றார். இந்த அனைத்து விஷயங்களும் ஹலாலானவை தான். ஆனால், அவர்கள் அனைவரும் அதன்படி செயல்படுவதில்லை.

இதன் பொருள் என்னவென்றால், ஒவ்வொரு ஹலாலான விஷயங்கள் மீதும் அமல் செய்வது கட்டாயம் இல்லை. ஆனால், மனைவியை விவாகரத்து செய்ய வேண்டும் என்ற விஷயம் முன்வருகின்றபோது மனைவியை விவாகரத்து செய்வது ஆகுமானதாகும் என்று கூறுகின்றார். மேலும், எந்த சிந்தனையும் இல்லாமலும், புரிதலும் இல்லாமலும் உடனடியாக தலாக் கொடுத்து விடுகின்றார். ஆனால், சில ஹலாலான விஷயங்களை மனிதன் தன்னுடைய ஆன்மாவிற்காக விட்டு விடுகின்றான். வேறு சிலர் தன்னுடைய நண்பர்களுக்காக; இன்னும் சிலர் சமுதாயத்திற்காக எப்பொழுதும் விட்டு விடுகின்றார்கள். உண்மையில் இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒரு நம்பிக்கையாளருடைய நிலை என்னவென்றால் அவர் இந்த ஹலாலான விஷயத்தை இறைவனுக்காக விட்டு விடுகின்றார். மேலும் இந்தப் பணி என்னுடைய இறைவனுக்கு விருப்பமில்லை. ஆகையால் நான் இந்த செயலை செய்யவில்லை. என்னுடைய இறைவன் என்னிடம் வெறுப்படையாமல் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றார்.

ஆகையால், நேர்வழி மற்றும் நேரிய வழி தலாக்கை பொதுவானதாக ஆக்குவது அல்ல. மாறாக, தலாக்கிலிருந்து நம்மை விலக்கிக் கொள்வதற்கான முயற்சியை மேற்கொள்வதாகும். ஹலால் என்பதன் பொருள் என்னவென்றால், விரும்பினால் அதை செய்யலாம்; சட்டத்தின் அடிப்படையில் தடை இல்லை. மேலும் உங்களுக்குள் மற்றவர்களுடைய சிந்தனை மற்றவர்களுடைய தன்மானம் மற்றவர்கள் மீதான கருணை மற்றும் நேசத்தை கருத்தில் கொள்ள வேண்டும். எந்த ஹலாலின் படி செயல்படுவதால் பிறருடைய சிந்தனை, பிறருடைய ஏக்கம், பிறர் மீதான கருணையும், அன்பும் மரணித்து விடுகின்றதோ அது ஹலால் அல்ல. மாறாக, அவ்வாறான ஹலால் ஒரு வகையில் ஹலாலாக இருக்கின்றது. மேலும் வேறொரு வகையில் ஹராமாக இருக்கின்றது. மக்கள் தங்களுடைய நண்பர்களுடைய வெறுப்பு, சமுதாயத்துடைய வெறுப்பு மேலும் சுற்றுச்சூழலின் வெறுப்பை கருத்தில் கொள்கின்றபோது இறைவனுடைய வெறுப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதிலிருந்து மனிதன் ஒருபோதும் கவனக் குறைவாக இருக்கக் கூடாது. இறைவனுடைய இருப்பு அந்த அளவிற்கு பலவீனமானதா என்ன? அவனுடைய வெறுப்பு மனிதனுக்கு நம்பிக்கை இல்லாததாக இருக்கின்றதா? மக்கள் உலகம் மற்றும் அதன் கீழான நேசத்திற்காக தங்களுடைய நேசத்திற்குரியவர்களுடைய சின்ன சின்ன வெறுப்பிற்கும் அஞ்சுகின்றனர்; மேலும் அவர்களை கோபித்துக் கொள்ளாமல் வைத்துக் கொள்கின்றனர். அவ்வாறான நிலையில் ஒரு நம்பிக்கையாளர் அவர் தன்னுடைய ஈமானை சுவையுடன் வைத்துக் கொள்வதற்காக அல்லாஹ்வுடைய நெருப்பிலிருந்து மிகவும் அச்சம் கொள்கின்றார்.

ஹதீஸில் வருகின்றது. ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) இருவருக்கும் இடையில் ஒரு விஷயம் தொடர்பாக விவாதம் ஏற்பட்டது. இந்த தர்க்கம் பெரிதானது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய இயல்பில் ஓர் உத்வேகம் இருந்ததனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த இடத்திலிருந்து சென்று விடுவது சரியானதாகும் என்று எண்ணி நகர்ந்து விட்டார்கள். ஏனெனில், சண்டை பெரிதாகக் கூடாது என்பதாகும். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கிருந்து செல்ல முற்பட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு முன்னே சென்று அவர்களுடைய மேலங்கியை பிடித்துக் கொண்டார்கள். மேலும், என்னுடைய பேச்சிற்கு பதில் கொடுத்து விட்டு செல்லுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இருந்து தம்மை விலக்கிக் கொண்டவராக செல்ல முற்பட்டார்கள். ஆனால், அன்னாருடைய அந்த மேலங்கி கிழிந்து விட்டது. அன்னார் அங்கிருந்து தம்முடைய வீட்டிற்கு சென்று விட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் என் தொடர்பாக முறையீடு வைத்து விடுவார்கள் என்று எண்ணினார்கள்.

எனவே அன்னார் (ரலி) அவர்களை பின் தொடர்ந்து செல்ல ஆரம்பித்தார்கள். ஏனெனில், நானும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் என்னுடைய முறையீட்டையும் முன் வைக்கின்றேன். ஆனால், வழியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பார்வையில் இருந்து மறைந்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) நினைத்தார்கள். அன்னார் (ரலி) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அவையில் முறையீடு செய்ய சென்றுள்ளார்கள். அவர்களும் நேராக பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். அங்கு சென்று பார்த்தபொழுது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கும் இல்லை. ஆனால், அவர்களுடைய உள்ளம் வெட்கமடைந்து விட்டது. எனவே, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் தவறு ஏற்பட்டு விட்டது. நான் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கடுமையாக நடந்து கொண்டேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது எந்தத் தவறும் இல்லை. அனைத்தும் என்னுடைய தவறுதான் என்றார்கள்.

அந்த தருணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் யாரோ ஒருவர் சென்று, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் உங்களைக் குறித்து முறையீடு செய்ய சென்றுள்ளார்கள் என்று கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய உள்ளத்தில் சிந்தனை வந்தது. நான் என்னுடைய விளக்கத்தை முன்வைக்க வேண்டும். ஏனெனில், ஒரு சார்பாக பேச்சைக் கேட்கக் கூடாது. மாறாக, தமது சார்பான விஷயத்தையும் முன்வைக்க வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சென்றார்கள்.

அப்பொழுது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தவறு என்னுடையது ஆகும்; நான் தான் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டேன்; மேலும் அவர்களுடைய மேலங்கி என்னால் கிழிந்து விட்டது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். இந்த விஷயத்தைக் கேட்ட உடன் பெருமானார் (ஸல்) அவர்களுடைய முகத்தில் கோபத்தின் அடையாளங்கள் வெளிப்பட்டன. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மக்களே! உங்களுக்கு என்ன நேர்ந்தது? முழு உலகமும் என்னை மறுத்தபோதும், நீங்களும் எனக்கு எதிரிகளாக இருந்தபோதும் அபூபக்ர் தான் என் மீது நம்பிக்கை கொண்டார். மேலும் எல்லா விதத்திலும் எனக்கு உதவி செய்தார். பிறகு பெருமானார் (ஸல்) கூறினார்கள்: இப்பொழுதும் நீங்கள் என்னையும், அபூபக்ரையும் விட்டு விடுவதில்லை. அன்னார் (ஸல்) இதை கூறிக் கொண்டிருக்கும் பொழுது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) உள்ளே வந்தவுடன் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னுடைய தவறு இல்லை ; உமருடைய தவறாகும் என்று முறையீடு செய்யவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய உள்ளத்தில் வெறுப்பு ஏற்படுகின்றது என்பதை அன்னார் (ரலி) அறிந்த உடன் அந்த உண்மையான நேசத்திற்குரியவர் அதனை சகித்துக் கொள்ள முடியாமல் தன்னால்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டு விட்டது என்று எண்ணி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்பு முழங்காலிட்டவாறு அமர்ந்து விட்டார்கள். மேலும் விண்ணப்பம் வைத்தார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உமர் அவர்களுடைய தவறு இல்லை ; என்னுடைய தவறாகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த அளவிற்கு உண்மையான நேசம் கொண்டவராக இருக்கின்றார்கள் என்று பாருங்கள்! தமது நேசருக்கு கஷ்டம் ஏற்படுவதை அன்னாரால் அதனை சகித்துக் கொள்ள முடியவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது பெருமானார் (ஸல்) அவர்கள் வெறுப்படைந்திருக்கின்றார்கள்; மேலும் மகிழ்ச்சியடையவில்லை என்பதை அன்னாரால் பார்க்க முடியவில்லை. பொதுவாக உலகத்தில் தமக்கு எதிராக

இருக்கக் கூடியவர் கண்டிக்கப்படுகின்றார் என்றால் ஒருவர் மகிழ்ச்சியடைவார். ஆனால், இந்த உண்மை நேசர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய உள்ளத்திற்கு வேதனை ஏற்படுவதை விரும்பவில்லை. அதற்கு என்ன காரணமாக இருந்தாலும் சரி; அன்னார் (ரலி) கூறினார்கள்: நான் குற்றவாளியாக ஆகிவிடுகின்றேன். ஆனால், என்னுடைய நேசத்திற்குரியவருடைய உள்ளம் வேதனை அடைவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. மேலும் அன்னார் (ரலி) மிகவும் பணிவுடன் இவ்வாறு விண்ணப்பம் வைத்தார்கள்;

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உமர் (ரலி) அவர்களுடைய தவறு இல்லை; என்னுடைய தவறுதான் என்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட வேதனையை அகற்றுவதற்காக தாம் அநீதியிழைக்கப்பட்டவராக இருந்தபோதிலும், அநீதி செய்தவர் என்று தம்மைக் கூற தயாராகிவிட்டார்கள். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்திற்கு கஷ்டம் ஏற்படக் கூடாது என்பதற்காக அன்னார் (ரலி) செய்த செயலாகும். ஒரு நம்பிக்கையாளர் என்பவர் தம்முடைய இறைவனுடைய விருப்பத்திற்காக தன்னை இறை நெருக்கத்தில் இருந்து விலக்கும் பணியை செய்யக் கூடாது.

எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு மிகவும் நேசத்திற்குரியவர் ஆவார்கள். மேலும் நாம் இறைவனுக்குப் பிறகு இந்த அளவிற்கு வேறு எவரிடமும் அன்பு கொள்வதில்லை. இருப்பினும், இறைவன் இறைவன் ஆவான். மேலும் இறைத் தூதர் (ஸல்) இறைத் தூதர் ஆவார்கள். நாம் அன்னாருடைய உயர்வான அந்த மகத்துவத்தை அறிந்திருக்கின்றோம். அது வேறு எந்த மனிதருக்கும் வழங்கப்படவில்லை. இவ்வாறு இருந்தபொழுதிலும், அன்னார் (ஸல்) அடியார் ஆவார்கள். மேலும் அல்லாஹ் வணக்கத்திற்குரியவன் ஆவான். அன்னார் (ஸல்) படைக்கப்பட்டவர் ஆவார்கள். அல்லாஹ் படைத்தவன் ஆவான். அன்னார் (ஸல்) அல்லாஹ்வுடைய கருணையின் கீழ் இருக்கின்றார்கள். மேலும் அல்லாஹ் கருணையாளனாக இருக்கின்றான். அன்னார் (ஸல்) மரணித்து விடுவார்கள். மேலும் அல்லாஹ் மரணத்திற்கு அப்பாற்பட்டவன் ஆவான். மேலும் என்றென்றும் நிரந்தரமாக இருக்கக் கூடியவன் ஆவான். அன்னார் (ஸல்) அல்லாஹ்வுடைய தேவையை வேண்டியவராக இருக்கின்றார்கள். மேலும் அல்லாஹ் அன்னாருடைய தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவனாக இருக்கின்றான். அன்னார் (ஸல்) பலவீனமானவராக இருந்தார்கள். அல்லாஹ் மிகப் பெரிய வல்லமை மிக்க எஜமானன் ஆவான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய உள்ளம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வருத்தத்தைப் பார்த்து துடித்து விட்டது. அவ்வாறு இருக்கையில்,

اِنَّ اَبۡغَضَ الۡحَلَالِ عِنۡدَ اللّٰهِ الطَّلَاقُ

(நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் தலாக் என்பது ஆகுமான காரியங்களில் மிகவும் வெறுக்கத்தக்கது ஆகும்) என்ற ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய இந்த ஹதீஸை ஒரு நம்பிக்கையாளர் படித்து அல்லது கேட்டதன் பிறகு எவ்வாறு அதற்கு எதிராக மிக எளிதாக துணிவை வெளிப்படுத்துவார். நீங்கள் அந்த வெறுக்கத்தக்க ஹலாலை பின்பற்றுவதலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள் என்று ஷரீஅத் கூறுகின்றது. எனவே ஒவ்வொரு நம்பிக்கையாளர் மீதும் கடமை என்னவென்றால், அவர் இவ்வாறான விஷயத்தில் குறைவை ஏற்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். மேலும் கணவன், மனைவி என்ற உறவில் விரிசலான நிலைகளை விலக்கி விட வேண்டும்.

தலாக் மற்றும் குலா உண்மையில் ஒரே பொருளைக் கொண்டதாகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஆண், பெண்ணை விட்டு விடுகின்றார் என்றால் அதற்கு தலாக் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் ஒருவேளை பெண் விண்ணப்பம் வைக்கின்றார் என்றால் அதாவது அவள் அவரிடமிருந்து விடுதலை பெறுவதை குலா என்றழைக்கின்றோம்.

குலா என்பதும்

اَبۡغَضُ الۡحَلَالِ

(ஆகுமானவற்றில் மிகவும் வெறுக்கத்தக்க ஒன்று) என்பதன் அடிப்படையில்தான் வருகின்றது. மனித உரிமை என்ற பேச்சு வரும்போது, அங்கு தலாக் மற்றும் குலா இரண்டும் முஸ்லிம்களுக்கு இடையில் ஓர் ஆழமாக பதிவு செய்யப்பட்ட விஷயமாக இருக்கின்றது. மேலும் முஸ்லிம்கள் எந்நிலையிலும் இதன்படி அமல் செய்ய வேண்டும் என்று தயாராவது இல்லை. இதனால் பெண்களுக்கு மிகவும் கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியது வந்தது. அஹ்மதிய்யத் இந்த இரண்டு உரிமைகளையும் நிலைநிறுத்தி இருக்கின்றது. பெண்களுக்கு அவர்களுடைய கஷ்டங்களில் ஈடேற்றத்தை வழங்கியுள்ளது. அதற்கு அவர்களுக்கு உரிமை வழங்கப்படாமல் இருந்த காரணத்தினால் அது அவர்களுக்கு கிடைக்கப் பெறச் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஹதீஸுடைய விளக்கத்தையும் மக்களுக்கு முன்பு விரிவாக கூறியுள்ளது. மேலும் கூறப்பட்டுள்ளது. இந்த இரண்டு வழிகளை பின்பற்றுவதும் இறைவனுடைய பார்வையில் ஹலால் ஆக உள்ளது. ஆனால் இந்த உரிமை இப்பொழுது புதிதாக கிடைத்திருக்கின்றது. மேலும் நம்முடைய நாட்டில் ஏதாவது ஒரு புதிய உரிமை கிடைத்தது என்றால் மக்கள் நன்கு அதை பயன்படுத்த முயற்சி செய்வது அவர்களுடைய பழக்கமாகும். இதனால் நம்முடைய ஜமாஅத்தில் இரண்டு வழிகளையும் பின்பற்றுவதில் ஒரு வேகம் இருக்கின்றது. ஜமாஅத்தில் ஒரு தரப்பு தலாக் மற்றும் குலாவின் பக்கம் சாய்ந்திருக்கின்றது. ஆனால், திருக்குர்ஆனுடைய கட்டளை என்னவென்றால், எப்போது கணவன், மனைவிக்கு இடையே ஏதாவது சண்டை ஏற்படுகின்றதோ அதை விலக்குவதற்காக ஒரு நடுவர் நியமிக்கப்பட வேண்டும். அவர் அவர்களுக்கு இடையில் இருக்கும் அந்த வெறுப்பை களைவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் முன்பு இருந்தது போன்று அன்பு நேசத்துடன் தங்களுடைய வாழ்வை கழிக்க வேண்டும். ஆனால், சமாதானத்திற்கான எந்த முகாந்திரமும் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டு விட்டது என்றால் பின்னர் குலா என்ற அடிப்படையிலேயே காஸி (எனும் நீதிபதி)யிடம் விஷயம் ஒப்படைக்கப்படும். மேலும் அவர் தீர்ப்பு வழங்குவார். சின்ன, சின்ன விஷயத்தில் குலா மற்றும் தலாக் வரை சூழல் செல்கின்றது என்றால் இது மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயமாகும். மேலும் இது எந்த அளவிற்கு அதிபயங்கரமான மற்றும் விரும்பத்தகாத முறையாக இருக்கின்றது என்றால் ஒவ்வொரு நல்ல நபரும் இதை வெறுக்க வேண்டும். கணவன், மனைவியுடைய ஒற்றுமை சாதாரண ஒற்றுமை அல்ல. மேலும் கணவன் மனைவியுடைய உறவு சாதாரண உறவு அல்ல. கணவன், மனைவியுடைய உறவு எப்படிப்பட்டது என்றால் தந்தை மகனுடைய உறவு கூட அப்படிப்பட்டது கிடையாது. ஒரு மனிதன் தன்னுடைய உடலுடைய சில பகுதிகளை தன்னுடைய தந்தை மற்றும் தன்னுடைய தாய்க்கு முன்பு கூட காட்டுவதில்லை. அவற்றை தன்னுடைய மனைவிக்கு முன்பு காண்பிக்கிறான். இதே போன்று பெண் தன்னுடைய சில பகுதிகளை தன்னுடைய தாய், தந்தை, சகோதரர், சகோதரி மீது கூட ஹலாலாக கருதுவதில்லை. அவற்றை கணவனுக்காக வெளிப்படுத்துகிறாள். இவ்வாறான தொடர்புக்கு பிறகு ஒருவேளை ஓர் ஆண் தம்முடைய மனைவியை விவகாரத்து செய்ய விரும்புகின்றார் என்றால் அல்லது பெண் குலா பெற விரும்புகின்றாள் என்றால் பின்னர் இவர்களுக்கு இடையில் கணவன்,மனைவி என்ற உறவுக்கு எந்த மகத்துவமும் இல்லை; மேலும் அவர்களுக்கு இடையில் இந்தத் தொடர்பு என்பது ஒரு விளையாட்டாகும்; அதை அவர்கள் விளையாடியுள்ளனர் என்று பொருள்படும். ஒரு பெண் அவள் குலா பெற விரும்புகின்றார் என்றால் அல்லது ஓர் ஆண் தன்னுடைய மனைவியை தலாக் கூறி இருக்கின்றார் என்றால் இந்த இருவரும் இஸ்லாமிய போதனையை ஏளனம் செய்கின்றார்கள். எந்தப் பெண் குலா பெற விரும்புகின்றாரோ இறுதியாக குலா ஏன் பெற விரும்புகின்றார்? அவர் வேறோர் ஆணை திருமணம் முடிக்க வேண்டும் என்பதற்காக அல்லவா? அதாவது வேறு சொற்களில் இதனுடைய அர்த்தம் என்னவென்றால், அவர் தன்னை கடைவீதியில் விற்பனை செய்ய விரும்புகின்றார். ஆனால், இஸ்லாம் அவளுக்கு மிகப் பெரிய கண்ணியத்தை வழங்கி இருக்கின்றது. மேலும் எந்த ஆண் தலாக் கொடுத்து, பெண்ணுடைய கண்ணியத்தை அழிக்க நினைக்கின்றாரோ அவர் முஸ்லிமல்லாத மக்கள் முன்பு ஒழுக்க ரீதியாக பின்தங்கியவராக தென்படுகின்றார். ஏனெனில் ஒவ்வொரு சமூகமும் மேலும் ஒவ்வொரு மார்க்கமும் மேலும் எல்லாத் தரப்பினரும் அவர்கள் எந்த நாகரீகம் பெற்றவராக இருந்தாலும் அல்லது நாகரீகமற்றவர்களாக இருந்தாலும் அல்லது கலாச்சாரமற்றவர்களாக இருந்தாலும் பெண்களுடைய கண்ணியத்தை ஒப்புக் கொள்கின்றார்கள். மேலும் அவளை ஒரு கண்ணியத்திற்குரிய இருப்பாக கருதுகின்றார்கள். எனவே ஓர் ஆண் எந்தக் காரணமும் இன்றி தன்னுடைய மனைவிக்கு தலாக் கொடுக்கின்றார் என்றால் அவர் முஸ்லிம் அல்லாத மக்கள் முன்பு ஒழுக்க ரீதியாக பின்தங்கியவராக கருதப்படுகின்றார். மேலும் ஒருவேளை ஒரு பெண் எந்தக் காரணமும் இன்றி, குலா பெற விரும்புகின்றார் என்றால் அவர் தன்னுடைய கண்ணியத்தை குறைப்பதற்காக தம்மை

கடைவீதியில் விற்பனை செய்ய எண்ணுகின்றாள். மேலும் தன்னுடைய உயரிய அந்தஸ்தை மறந்து விட்டாள். ஆகையால் இந்த விஷயங்களில் எவர்கள் எல்லாம் அதன் முக்கியத்துவத்தை புரியவில்லையோ அவர்கள் சமுதாய ஒழுக்கத்தை சீரழிக்கக் கூடியவர்கள் ஆவர்.

ஜமாஅத்தின் கடமை என்னவென்றால், நீங்கள் தலாக் மற்றும் குலாவால் ஏற்படுகின்ற தீய விளைவுகள் தொடர்பாக மக்களுக்கு கவனமூட்ட வேண்டும். மேலும் அவை பொதுவானதாக ஆகாமல் இருப்பதிலிருந்து தடுக்க வேண்டும்.

என்னிடம் சில வழக்குகள் வருகின்றன. அப்பொழுது எனக்கு வியப்பாக இருக்கின்றது. எவ்வளவு சிறிய சிறிய விஷயத்திற்காக மக்கள் வெறுப்பிற்கான காரணத்தை முன்வைக்கின்றார்கள். ஆண் கூறுகின்றார்: என்னுடைய மனைவி செல்லும்போது ஒரு பெட்டியை எடுத்து செல்கிறாள். மேலும் மனைவி கூறுகின்றார்: அவர்கள் என்னுடைய கம்மலை எடுத்துக் கொண்டார்கள்; திருப்பித் தரவில்லை. இவ்வாறான சின்னச் சின்ன விஷயங்களை முன்வைத்து தங்களுடைய தொடர்புகளை வீணடித்துக் கொள்கின்றனர். இது அறிவுடையவருடைய பணி அல்ல. என்னுடைய பார்வையில் மனைவியிடம் ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டது என்றால், அவருக்கு ஒழுக்க ரீதியான சீர்திருத்தம் செய்ய வேண்டும். ஆனால், அவரை விலக்கி விடுவதற்கு தயாரகிவிடக் கூடாது. தலைமை ஆசிரியர் மாணவர்களுக்கு பாடம் கற்றுக் கொடுக்கின்றார். எந்த மாணவர் பாடத்தை ஞாபகப்படுத்துவதில்லையோ அவரை பள்ளிக் கூடத்தில் இருந்து வெளியேற்றி விடுகின்றாரா? அதேபோன்று மனிதனிடம் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. ஞாபக மறதி ஏற்பட்டு விடுகின்றது. பலவீனங்கள் உருவாகி விடுகின்றன. ஆனால் நம்பிக்கையாளருடைய பணி என்னவென்றால், அவற்றை நீக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். எந்த இருப்பை அல்லாஹ் தூய்மையானதாக வைத்திருக்கின்றானோ அவற்றை கடைவீதியில் விற்பனை செய்யக் கூடிய பொருளாக ஆக்கிவிடாதீர்கள்.

எனவே நான் ஜமாஅத்திற்கு வழங்கும் அறிவுரை என்னவென்றால், இவ்வாறான சண்டைகளை மிகவும் நுட்பமான முறையில் தீர்வு காண்பதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.நான் நீதிபதிகளுக்கு (காஸி) வழங்கும் ஆலோசனை என்னவென்றால், அவர்கள் இவ்வாறான விவகாரங்களில் மிகவும் கவனத்துடன் பணி செய்ய வேண்டும். நீதிபதிகளும் இவ்வாறான விவகாரங்களை ஒரு வேடிக்கையாக எண்ணி வைத்துள்ளனர் என்பது எனக்கு வியப்பாக இருக்கின்றது. வழக்குகளை மிக நீண்டதாக ஆக்கிக் கொண்டு செல்கின்றனர். மேலும் சீர்திருத்தத்திற்கான நிலையை உருவாக்குவதில்லை. அதிக காலதாமதத்தை ஏற்படுத்துவதால் உள்ளங்களில் சந்தேகங்கள் அதிகமாக எழ ஆரம்பித்துவிடுகின்றன. நான் நீதிபதிகளுக்கு வழங்கும் அறிவுரை என்னவென்றால், இவ்வாறான விவகாரங்களில் எந்தவொரு தரப்பினருடைய வக்கீலையும் அருகில் கூட வர விடாதீர்கள். மேலும் அவர்கள் நீதிபதிக்கு தந்தையாக ஆகிவிடக் கூடாது. மேலும் பையனை உங்களுடைய மகனாக புரிந்து கொள்ளுங்க; மேலும் பெண்ணை உங்களுடைய மகளாக கருதுங்கள். இவ்வாறு உங்களுடைய பிள்ளைகளாக எண்ணியவாறு அவர்களுக்கு புரிய வையுங்கள். மேலும் ஷரீஅத்துடைய விவகாரங்கள் தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். மேலும் அவர்களுக்கு தலாக் மற்றும் குலா உடைய பாதிப்புகள் என்ன? என்பது பற்றியும் கூறுங்கள். அதாவது இது பொதுவாக ஆகிவிட்டது என்றால் சமுதாயத்தில் ஒழுக்கம் நீங்கிவிடும். அவர்களுக்கு சந்ததிகள் இருப்பார்கள். மேலும் அவர்கள் பெரியவர்களாக இருப்பார்கள். அவர்கள் மீது என்ன தாக்கம் ஏற்படும்? எங்களுடைய தாய், தந்தை ஒரு சாதாரண விஷயத்திற்காக பிரிந்து விட்டனர் என்று எண்ணுவார்கள். மேலும் தங்களுடைய தாய், தந்தையிடமிருந்து அவர்கள் என்ன நல்ல முன்மாதிரிகளை பெறுவார்கள்?

எனவே இந்த விஷயங்கள் ஒழுக்கத்தை சரி செய்யக் கூடியது அல்ல; மாறாக, ஒழுக்கத்தை சீர்கெடுக்கக் கூடியவை ஆகும். ஜமாஅத் இதனுடைய முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் என்னுடைய பார்வையில் இது மிக முக்கியமான பெரிய விஷயமாகும். எனவே ஏதாவது ஒரு நீதிபதியிடம் இவ்வாறான ஒரு விவகாரம் வந்தது என்றால், அவருடைய உள்ளம் நடுங்கிவிட வேண்டும். அதாவது இறைவனுடைய வெறுப்பை பெறக் கூடிய எந்தத் தீர்ப்பையும் நான் வழங்கி விடக் கூடாது என்ற எண்ணம் இருக்க வேண்டும். மேலும் இவ்வாறான விவகாரங்களில் எல்லாத் தரப்பையும் நன்கு கவனத்தில் கொண்டு தீர்ப்பு வழங்க வேண்டும். மேலும் எப்பொழுதுதாவது ஏதாவது இவ்வாறான சண்டை ஏற்பட்டு விட்டது என்றால், ஆணுடைய தாய், தந்தையர் மேலும் பெண்ணுடைய தாய், தந்தையர் இதில் நுழையக் கூடாது. மேலும் நீதிபதியின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். மேலும் ஒருவேளை ஏதாவது ஒரு தீர்ப்பின் மீது குறை இருக்கின்றது என்றால் எமக்கு எழுதலாம். பிறகு இந்தத் தீர்ப்பில் உண்மையிலேயே ஏதாவது குறை இருக்கின்றதா? இல்லையா? என்று நாம் பார்ப்போம். இவ்வாறு சிறிது சிறிதாக நீதிபதிகளுடைய சிந்தனையும் உத்வேகம் அடைய ஆரம்பித்து விடும்.

திருமணத்திற்குப் பிறகு தாய், தந்தையருடைய கடமை முழுமை அடைந்துவிட்டது என்பது அல்ல. மாறாக, திருமணத்திற்குப் பிறகும் கூட தாய், தந்தையருக்கு சந்ததிகள் மீது கடமை இருக்கின்றது. ஒரு பெண் எவ்வாறானவராக இருக்கின்றார் என்றால் அவரிடம் ஒரு மகளைத் தவிர வேறு எந்தக் குழந்தையும் இல்லை. அவர் அவருக்கு தொண்டு செய்ய வேண்டியவராக இருக்கின்றார். எப்பொழுது அந்த மகளுக்கு திருமணம் நடந்து விடுகின்றதோ அப்பொழுது அவருடைய மருமகனுடைய கடமை யாதெனில், அந்த பெண்ணுக்கு தன்னுடைய தாய்க்கு தொண்டு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். மேலும் அவரை அவரிடம் தங்க அனுமதிக்க வேண்டும் அல்லது ஒருவேளை அவர் தன்னுடைய மனைவியை தன்னுடன் வைக்க விரும்புகின்றார் என்றால், பின்னர் அவர் அந்த தாயுடைய சுமையை சுமப்பது அவர் மீது கடமையாகும். ஆனால், எப்பொழுது அவர் என்னுடைய மனைவி என்னுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றாரோ அப்பொழுது அவர் தன்னுடைய மாமியாரின் சுமையை சுமக்க வேண்டும். இதேபோன்று ஒருவேளை கணவரின் பெற்றோர் முதியவராக இருக்கின்றார்கள் ; மேலும் அவர்களுக்கு தொண்டு செய்வது அவசியமானதாக இருக்கின்றது என்றால் மனைவியின் கடமை என்னவென்றால் அவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். மேலும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். இந்த பொறுப்பு கணவன், மனைவி இருவர் மீதும் இருக்கின்றது. சில மக்கள் இவ்வாறான சந்தர்ப்பத்தில் தங்களுடைய செலவீனங்களின் கஷ்டத்தை காரணமாக கூறுகின்றார்கள். ஆனால், என்னுடைய பார்வையில் இவ்வாறான காரணங்கள் ஏற்றுக் கொள்வதற்கு தகுந்தவை அல்ல. என்னுடைய அனுபவம் என்னவென்றால், ஏழைகளுடைய வீடுகளில் குழந்தைகள் அதிகமாக இருக்கின்றனர். இறுதியாக அவர்களும் வாழ்கின்றனர். என்னிடம் ஏழைகளுடைய விண்ணப்பங்களில் உணவு, தானியங்களுக்காகவும் வருகின்றன. அவற்றில் பெரும்பாலான மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்களுக்கு ஆறு, எட்டு, ஒன்பது குழந்தைகள் இருக்கின்றனர். எவர்கள் எல்லாம் விண்ணப்பம் கொடுக்கின்றனரோ அவர்களுக்கு எட்டு, ஒன்பது பிள்ளைகள் இருக்கின்றனர் என்பதை பார்த்து நான் வியப்படைகின்றேன். இவர்கள் மிகைப்படுத்திக் கூறுகின்றார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் நான் விசாரித்தபோது விஷயம் உண்மை ஆகும். அதாவது இந்த மக்கள் எட்டு எட்டு,ஒன்பது ஒன்பது குழந்தைகளை பெற்றுள்ளார்கள். மேலும் அவர்களை வளர்ப்பது தொடர்பாக பயப்படவில்லை. அவ்வாறு இருக்கையில் நீங்கள் தாய், தந்தைக்கு தொண்டாற்றுவதற்கு ஏன் நடுங்குகின்றீர்கள்? ஒன்று இரண்டு நபர்களுடைய சுமை என்னுடைய பார்வையில் ஒரு கஷ்டமும் இல்லை. நிபந்தனை என்னவென்றால் மனிதன் அதற்காக எண்ணம் கொள்ள வேண்டும். நீங்கள் உங்களுடைய மனைவியுடைய தாய், தந்தையருக்கு தொண்டு செய்கின்றீர்கள். மேலும் அவர்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்கின்றீர்கள் என்றால், உங்களுடைய மனைவியுடைய உள்ளத்தில் உங்கள் மீது நம்பிக்கை உருவாகும். மேலும் உங்கள் மீது அதிகமாக நேசம் கொள்ள ஆரம்பிப்பார். மேலும் முன்பை விட அதிகமாக உங்களுக்கு கட்டுப்படுவார். ஆனால்,

இந்த விஷயம் தொடர்பாக எப்பொழுதும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். அவருடைய பெற்றோர் உங்களுடன் இருக்கின்றார்கள் என்றால், அவர்களை வேலையாட்கள் போன்று நீங்கள் எண்ணக் கூடாது. மாறாக அவர்களை உங்களுடைய எஜமானராக எண்ண வேண்டும். மேலும் அவர்களுடன் வேலையாட்களைப் போன்று நடந்து கொள்ளக் கூடாது. நான் சில மக்களைப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் தன்னுடைய அல்லது தன்னுடைய மனைவியுடைய பெற்றோர்களை தன்னுடன் வைத்துக் கொள்கின்றார்கள். ஆனால், அவர்களுடன் எவ்வாறான எதிர்பார்ப்புகள் வைக்கின்றனர் என்றால், அவர்கள் தங்களுடைய வேலைகளை செய்ய வேண்டும். இது சரியான முறை அல்ல.

பெரும்பாலும் நம்முடைய பார்வையில் வந்த விஷயம் என்னவென்றால், கணவருடைய பெற்றோரை அவருடன் தங்க வைக்காதே!

என்று பெண்ணுடைய பெற்றோர் பெண்ணிடம் கூறுகின்றார்கள். மேலும் மனைவியின் பெற்றோரை அருகில் வர விடாதே! என்று கணவருடைய பெற்றோர் தங்களது மகனிடம் கூறுகின்றனர். இவர்களுடைய இந்த வழிகாட்டலின் அடிப்படையில் ஆண் மற்றும் பெண் இருவருமே அமல் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். இதனுடைய விளைவுகள் என்னவாக வெளிப்படுகின்ற என்றால், அவர்களிடம் சண்டை சச்சரவுகள் உருவாகி விடுகின்றன. ஆண் கூறுகின்றார்: இவள் என்னுடைய தாய், தந்தையை தவறாக கருதுகின்றார்; மேலும் பெண் கூறுகின்றார்; இவர் என்னுடைய பெற்றோருக்கு கண்ணியம் அளிப்பதில்லை.

அனைத்து பெற்றோர்களும் தங்களுடைய மகள்களுக்கு இந்த வழிகாட்டல்களை வழங்குகின்றனர். இவர்கள் தங்களுடைய சந்ததிகளுடைய நன்மையை நாடுபவர்கள் அல்ல. மாறாக, அவர்கள் தங்களுடைய சந்ததிகளுக்கு மிக மோசமான எதிரிகள் ஆவர். மேலும் அவர்கள் என்னுடைய பார்வையில் ஷைத்தான் ஆவர். ஏனெனில், இது ஷைத்தானுடைய வேலையாகும். அதாவது வெறுப்பையும், பிரிவினையையும் விரும்பக் கூடியவனாக அவன் இருக்கின்றான். இவ்வாறான மக்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது அவர்கள் மற்றவருடைய மகன் அல்லது மகளுக்கான உரிய கண்ணியத்தை கவனத்தில் கொள்வதில்லை. பெற்றோர்கள் இவ்வாறான முட்டாள்தனமான அறிவுரையை வழங்குவதனால் தொடர்புகள் எவ்வாறு சரியானதாக இருக்கும்? மேலும் ஆண் மற்றும் பெண்ணுடைய வயதுகள் வீணாகின்றன. இதில் மிகப் பெரிய பகுதி அவர்களுடைய பெற்றோர்களுடையதாக இருக்கின்றது. ஏனெனில், அந்தப் பெற்றோர்கள் இவற்றையே கற்றுத் தந்துள்ளார்கள். மேலும் பெற்றோரை அருகில் வர விட வேண்டாம் என்று கூறுவதனால் திருமணத்திற்குப் பிறகு ஒருமுறை கணவன் மனைவிக்கு இடையில் விரிசல் உருவாகி விடுகின்றது. மேலும் சிலநேரங்களில் இந்த விரிசல் குலா அல்லது தலாக் என்ற நிலைக்கு சென்றுவிடுகின்றது. மேலும் இதில் யாராவது ஒருவர் விழுந்து விட்டார் என்றால் மற்றொருவர் மேலோங்கி விடுகின்றார். மேலும் எவர் மேலோங்கி விடுகின்றாரோ அவர் மற்றவருடைய பெற்றோருக்கு பதில் கூறிவிடுகின்றார். எவ்வாறு இருப்பினும், அங்கு ஓர் இழிவான விஷயம் ஏற்பட்டு விடுகின்றது. மேலும் இந்த நடைமுறை என்னுடைய பார்வையில் மிகப் பெரிய அநீதியாகும். மனைவி தன்னுடைய கணவர் மீது மேலோங்கி விட்டார் என்றால் மேலும் தாய், தந்தையருடன் அவள் தொடர்பை துண்டித்துக் கொண்டாள் என்றால், அந்த ஆணின் மீது இறைவனுடைய சாபம் ஏற்படுகின்றது. அந்த பெண்ணின் மீதும் இறைவனுடைய சாபம் உருவாகிவிடுகின்றது. ஏனெனில் அவள் அவனை தன்னுடைய பெற்றோரிடமிருந்து தொடர்பை துண்டிக்க நிர்பந்தத்திற்கு உள்ளாக்கினாள். மேலும், ஒருவேளை பெண் தன்னுடைய பெற்றோரை விட்டு விட்டாள் என்றால் அந்த பெண்ணின் மீது இறைவனுடைய சாபம் விழுகின்றது. மேலும் அவளுடன் இணைந்து அந்த பையன் மீதும் இறைவனுடைய சாபம் விழுகின்றது. ஏனெனில், அவன் அவளை முழுவதுமாக நிர்பந்தத்திற்கு உள்ளாக்கினான். எனவே ஆணின் காரணத்தினால் பெண் தன்னுடைய பெற்றோரை விட்டு விட்டால் அதனால் அவள் மீது சாபம் ஏற்படுகின்றது. மேலும் அந்த ஆணும் சாபத்திற்குரியவராக ஆகிவிடுகின்றார். மேலும் ஒருவேளை பெண்ணின் காரணத்தினால் ஆண் தன்னுடைய பெற்றோரை விட்டுவிட்டார் என்றால் ஆண் மீது சாபம் ஏற்படுகின்றது. மேலும் பெண்ணும் சாபத்திற்குரியவளாக ஆகிவிடுகின்றார். இந்த விஷயத்தினால் நான்கு புறமிருந்தும் இறைவனுடைய வெறுப்பு அவர்களை சூழ்ந்து விடுகின்றது. நம்பிக்கையாளர்களுடைய கடமை என்னவென்றால் இதிலிருந்து தங்களை காத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

நம்முடைய ஆலிம்களுடைய பணி என்னவென்றால், இரவும் பகலும் இந்த விவகாரங்கள் தொடர்பாக மக்கள் முன்பு பேச வேண்டும். மேலும் இஸ்லாமிய போதனைகளை திரும்பத் திரும்ப மக்கள் முன் வைக்க வேண்டும். இதனால் மக்களுடைய சிந்தனையில் இவை பதிந்து விடும். அதாவது தலாக் மற்றும் குலா என்பது மிகவும் வெறுக்கத்தக்க ஒரு விஷயமாகும். இதன் மீது எந்தவிதமான சமாதானத்திற்கான சூழலும் இல்லாத ஒரு நிலை ஏற்படும் போதுதான் அமல் செய்ய வேண்டும். மேலும் நீதிபதிகளுக்கும் அவசியம் என்னவென்றால், தந்தையாக இருந்தவாறு சமாதானத்திற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும். மேலும் எந்த ஒரு தரப்பினருடைய வக்கீலும் நுழைவதற்கு அனுமதி வழங்காதீர்கள். மேலும் கருணை, நேசம், அன்பு மற்றும் பரிவுடன் சண்டைகளை தீர்ப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுங்கள். சிலநேரங்களில் சூழல் மிகவும் மோசமானதாக ஆகிவிடுகின்றது. மேலும் வெளிப்படையாக எந்த முகாந்திரமும் தென்படுவதில்லை. ஆனால், ஒருவேளை பற்றுள்ள உள்ளத்துடன் இந்த சண்டையை விலக்குவதற்கான எண்ணம் மேற்கொள்ளப்படுமேயோனால் அல்லாஹ் தன்னுடைய அருளினால் இந்த நிலையை சரிசெய்து விடுகின்றான். ஒருமுறை என்னிடம் இவ்வாறான ஒரு சண்டையின் வழக்கு வந்தது. கணவன், மனைவி இருவருடைய உள்ளத்திலும் ஒருவர் மற்றவருக்காக மிகவும் வெறுப்பை உருவாக்கி வைத்திருந்தார்கள். நான் அவர்கள் இருவரையும் அழைத்தேன். மேலும் அன்பு மற்றும் நேசத்துடன் புரிய வைத்தேன். ஆனால், ஆண் கூறினார்: நான் ஒருபோதும் இவளை என்னுடன் வைப்பதற்கு தயாராக இல்லை. அவள் என்னுடைய சகோதரனை மிகவும் கண்ணியக் குறைவுடன் நடந்து கொண்டாள். மேலும் அந்தப் பெண் கூறினாள்: நான் இவருடைய முகத்தை கூட பார்ப்பதற்கு தயாராக இல்லை. ஏனெனில், அவர் என்னுடைய தந்தையை ஏசிவிட்டார். அவர்களுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்த மிகவும் முயற்சித்தேன். ஆனால், அவர்கள் மீது எந்த தாக்கமும் ஏற்படவில்லை. மேலும் அவர்கள் சமாதானத்திற்கு தயாராகவில்லை. நான் அவர்களை அனுப்பி விட்டேன். ஏனெனில், தொழுகைக்கான நேரமாகிவிட்டது. தொழுகைக்காக சென்றுவிட்டேன். தொழுகையில் அவர்களுடைய பிடிவாதத்தைப் பார்த்து என் மீது மிகவும் உருக்கம் ஏற்பட்டது. மேலும் நான் அல்லாஹ்விடம் துஆ செய்தேன். அதாவது இறைவா! நம்முடைய ஜமாஅத்தினுடைய ஒழுக்கத்திற்கு என்ன ஆகிவிட்டது? அதாவது அவர்கள் சின்ன சின்ன விஷயங்களை இவ்வளவு பெரியதாக ஆக்கிவிட்டார்கள். மறுநாள் அந்தப் பெண் என்னிடம் வந்தார். மேலும் அவள் சிரித்துக் கொண்டிருந்தார். மேலும் அவள் சிரித்தவாறு என்னிடம் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினாள். என்ன விஷயம் ? என்று கேட்டேன். அவள் கூறினாள்: அவர் என்னை அழைத்துச் செல்வதற்காக வந்தார். நான் அவருடன் சென்றுவிட்டேன். அதற்குப் பிறகு கணவன் மனைவிக்கு இடையில் நேசம் ஏற்பட்டது. இப்பொழுது அவர்களுக்கு நிறைய பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

ஆகையால் காஸிமார்களுடைய பணி என்னவென்றால், அவர்கள் தந்தையாக திகழ்ந்து கொண்டு விவகாரங்களை தீர்வுக்கு கொண்டு வருவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். பெண்ணுடைய கணவர் என் மகன் ஆவார். அந்தப் பெண் என் மகள் ஆவார். எனவே இப்பொழுது என்னுடைய மகள் தவறு செய்தால் நான் என்ன செய்வேன்? என்று சிந்தித்து செயல்பட வேண்டும். மேலும், தன்னுடைய சந்ததிகள் தொடர்பாக என்ன வேதனை ஏற்படுமோ அதே வேதனை அவர்களுக்கு மற்றவர்கள் தொடர்பாகவும் உருவாக வேண்டும். ஒருவேளை நீதிபதிகளுடைய உள்ளத்தில் வேதனை உருவாகின்றது என்றால், பின்னர் நிச்சயமாக மற்றவர்களுடைய உள்ளத்திலும் வேதனை உருவாகும். கணவன் மனைவி சண்டை என்பது கொடுக்கல் வாங்கல் சண்டை போன்று அல்ல. அது சமுதாயத்தின் ஒழுக்கம் தொடர்பான கேள்வியாகும். எனவே நீதிபதிகள் இந்த விஷயத்தை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மனித ஒழுக்கத்தை அழிவிற்கு கொண்டு வராமல் தடுக்க ஏதாவது வழியை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் தீர்ப்பு வழங்குகின்றபோது, அவர்களுடைய பார்வையில் என்னுடைய மகள் அல்லது என்னுடைய மகனுடைய வாழ்க்கை வீணாவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. சிலநேரங்களில் அது தலாக் மற்றும் குலாவிற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால், அவ்வாறான சூழலில் ஒழுக்க சீர்கேட்டுக்கான சாத்தியங்கள் குறைவாக இருக்கும். மேலும் இவ்வாறான சூழலில் அல்லாஹ்வுடைய வெறுப்பிற்கான எந்த ஒரு வழியும் அதில் இருக்கக் கூடாது என்ற எதிர்பார்ப்பு இருக்க வேண்டும்.

(அல்ஃபஸ்ல், 25.ஜுலை 1946)

தமிழாக்கம்

மவ்லவி

எம். ஷஹாபுதீன்

* * * * *

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் டெல்லியில் வழங்கிய வழிகாட்டல்கள்**

**(1946- ஜூன் 28)**

செப்டம்பர் 26, 1946 அன்று இஷா தொழுகைக்குப் பிறகு ஆரம்பத்தில் அப்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து பேசப்பட்டது. ஹுஸூர் அன்வர் (ரலி) அவர்கள் அஹ்மதி அல்லாத தோழர்களுக்கு சந்திக்கும் வாய்ப்பு வழங்கினார்கள்.

والذين هم لفروجهم حافظون

الا على ازواجهم او ما ملكت ايمانهم

என்பதன் பொருள் என்ன? இவர்களின் எண்ணிக்கை மனைவிமார்களின் எண்ணிக்கை போன்றதா? என்று ஒரு நண்பர் கேள்வி கேட்டார்.

ما ملكت ايمانهم

என்பதில் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படப்படவில்லை. இஸ்லாம் அடிமைகளுக்கு ஒப்பந்தத்திற்கான உரிமையை அளித்துள்ளது. ஒரு பெண் அவளுக்கு மகன், தாய், தந்தை மற்றும் பிற உறவினர்கள் இருக்கின்றார்கள் என்று கருதினால் அவள் ஏன் இந்த நிலையில் இருக்கப் போகிறாள்? அவளுக்கு வாரிசு என்று எவரும் இல்லாத அந்த சூழ்நிலையில்தான் அவள் இவ்வாறு இருப்பாள்.

அன்னார் (ரலி) கூறினார்கள்: போரில் பிடித்துக் கொண்டு வரப்படுகின்ற கைதிகள் தொடர்பாக இறைவன் கூறுகின்றான்.

اما منا بعد واما فداء

கைதிகளுக்கு இரண்டு வழிகள் உள்ளன. முதலாவது கருணையின் பெயரில் விடுதலை செய்யுங்கள். கருணையின் அடிப்படையில் விடுவிக்க முடியாது என்றால் பின்னர் போர்க் கடன் இருக்கும். அதனைப் பெற்றுக் கொண்டு விடுதலை செய்யுங்கள். மூன்றாவது நிலை கைதி தன்னைத் தானே விடுவித்துக் கொள்ளலாம். இதற்கான ஒப்பந்தம் உள்ளது. அதாவது தான் விடுதலையாக வேண்டும் என்றும், அதற்கு ஈடாக இவ்வளவு பணம் தருகின்றேன் என்றும் கைதி கூறினால் அப்போது அவரை விடுவிக்க வேண்டும். கைதி மனநிலைபாதிக்கப்பட்டவர் என்றோ அல்லது சம்பாதிக்க இயலாதவர் என்றோ நிரூபிக்கப்படாத வரை அவர் நிலையான தொகையை தவணைகளில் செலுத்துவார். மேலும் ஒப்பந்தம் (தொகை) அவரது நிலைக்கு ஏற்ப இருக்கும். ஒப்பந்தம் நடந்த உடனேயே அவருக்கு செயல்முறைச் சுதந்திரம் கிடைத்து விடும். எப்போது அந்தத் தொகையை முழுவதும் செலுத்துகிறாரோ அப்பொழுதுதான் அவருக்கு சட்ட ரீதியான முழு சுதந்திரம் கிடைக்கும். அப்பொழுது அவர் எஜமானின் அனைத்து கட்டுப்பாடுகளிலிருந்தும் சுதந்திரம் அடைகின்றார். (எனவே) இந்த நிலையில் எந்த பெண்ணிற்கு விருப்பம் உள்ளதோ அவள் இருப்பாள்.

**டெல்லி குத்தாம் உடனான உரை**

டெல்லி குத்தாமுல் அஹ்மதிய்யா உடனான உரை செப்டம்பர் 29 அன்று ளுஹர் தொழுகைக்குப் பிறகு மூன்று மணி அளவில் ஹுஸூர் (ரலி) அவர்கள் தமது உரையில் கூறினார்கள்:

நான் சில விஷயங்களை அறிவுரைகளை கூற வேண்டும் என குத்தாம் என்னிடம் விண்ணப்பித்தார்கள். விஷயங்கள் நீண்ட காலமாக பேசப்பட்டு வருகின்றன என்று நான் கருதுகிறேன். பேச்சுகள் ஒன்று உறங்குவதற்காக அல்லது பேச்சுகளுக்குப் பிறகு பணிகள் நடக்கும். இப்பொழுது நாம் தூங்குவதற்கான நேரம் அல்ல. இஸ்லாத்தின் மீது எல்லாவிதமான துன்பங்களும், பிரச்சனைகளும் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் தூங்குவது தூக்கமாக இருக்காது. மாறாக நம்முடைய மரணமாக இருக்கும். அடுத்து மீதமுள்ள ஒன்று பேச்சுகளுக்கு பிறகு பணி செய்வது. இப்பொழுது வரை அதிகமாகப் பேசப்பட்டு விட்டது. 1890 -ம் ஆண்டு தன்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதம் புரிந்தார்கள். தற்போது 56 வருடங்கள் ஆகின்றன. இந்த அளவு நீண்ட விஷயங்களிலிருந்து பலன் பெறவில்லை என்றால் பிறகு எப்பொழுது பலன் பெறுவீர்கள்? அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளங்கள் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து அவன் இறக்கிய உண்மைக்கு பணியக் கூடிய காலம் வரவில்லையா? அவர்களின் உள்ளங்களில் அல்லாஹ்வின் மீதான அச்சம் உருவாகக் கூடிய காலம் வரவில்லையா?

இதைத்தான் நான் இளைஞர்களிடம் கூறுகின்றேன். அவர்களுக்கு இன்னும் விஷயங்கள் தேவைப்படுகின்றவா? அவர்கள் பணி செய்யும் காலம் இன்னும் வரவில்லையா?

ஒவ்வொரு முஸ்லிமும் உணர வேண்டும். அதாவது அவருடைய மூளையில் உணர்ச்சிகளும் உணர்வுகளும் இருக்கின்றன. அவரது இதயத்தில் உணர்வுகளும் விருப்பங்களும் இருக்கின்றன என்றால், மேலும் தான் எங்கிருந்து விழுந்து, எங்கு வந்தடைந்து விட்டேன் என்பதைக் காண அவரது கண்கள் திறந்திருந்தால் இதனை அவர் உணர வேண்டும்.

முஸ்லிம்கள் புவியியலைப் படிக்கின்றார்கள். வரைபடத்தைப் பார்க்கின்றார்கள். ஆனால், வரைபடத்தைப் பார்த்தவுடன், ஒரு காலத்தில் இந்த முழு வரைபடமும் முஸ்லிம்களின் வசம் இருந்தது. ஆனால், இன்று முஸ்லிம்கள் எல்லா இடங்களிலும் அவமானப்படுத்தப்படுகின்றார்கள் என்று ஏன் அவர்களின் உள்ளத்தில் கவலை எழவில்லை? என்று எனக்கு ஆச்சரியம் ஏற்படுகின்றது. ஒரு காலத்தில் இஸ்லாத்தின் வண்ணம் வரைபடத்தில் சீனாவில் இருந்து தொடங்கி கடைசி வரை பரவி இருந்தது. முஸ்லிம்கள் சீனாவை ஆட்சி செய்தார்கள். ஜப்பான் பெண்கள் இன்று வரை தங்கள் குழந்தைகளை, பெரிய முகலாயர்கள் வந்து விடுவார்கள் ; அமைதியாக இரு என்று பயமுறுத்துகின்றார்கள். ஐரோப்பாவின் எல்லைப் பகுதி வரை இஸ்லாமிய ஆட்சி இருந்தது. அமெரிக்காவிலும் பழைய மசூதிகள் கிடைத்துள்ளன. அங்கு முஸ்லிம்களின் ஆட்சி இருந்ததா? இல்லையா? என்பதல்லாமல் முஸ்லிம்கள் அங்கு நிச்சயமாக சென்றடைந்துள்ளார்கள்.

ஆக, இன்று நான் உங்களுக்கு என்ன கூறுவேன்? நான் கற்றுக் கொடுக்க எந்த விஷயம் மீதம் உள்ளது. வானம் மற்றும் பூமி உங்களுக்கு கற்றுக் கொடுக்கவில்லையா? அக்கம் பக்கத்தினர் உங்களுக்கு கற்றுக் கொடுக்கவில்லையா? பிறகு எந்த விஷயம் உங்களை பணியில் இருந்து தடுக்கின்றது? எந்த நாளுக்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கின்றீர்கள்?

இன்று உலகில் வழிகேடு பரவி வருகிறது. வழிகேடு அதிகரித்து வருகிறது. பொய்யும், ஏமாற்றமும் மிகுதியாக உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இஸ்லாத்தை பரப்புவதற்கு உங்கள் உயிரை கொடுக்கவில்லை என்றால் அதை எப்போது கொடுப்பீர்கள்?

ஹுஸூர் (ரலி) அவர்கள் உரையாடலின் போது கூறினார்கள்: ஒவ்வோர் அஹ்மதியும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று வாக்குறுதி கொடுக்கின்றார். முக்கியத்துவம் கொடுப்பேன் என்பதன் பொருள் ஒருவரின் பெரும்பாலான நேரத்தை மார்க்கத்திற்காக ஒதுக்குவது ஆகும். நீங்கள் இவ்வாறு செய்கின்றீர்கள் என்றால், உண்மையிலேயே நீங்கள் குத்தாமுல் அஹ்மதிய்யா (அஹ்மதிய்யத்தின் சேவகர்கள்) ஆவீர்கள். உண்மையிலேயே உங்களால் இஸ்லாம் பரவும். ஆனால் நீங்கள் இவ்வாறு செய்யவில்லை என்றால், பணிகள் அது நடந்து விடும். ஆனால், இறைவன் முன்பு உண்மையான நல்ல தொண்டராக மற்றும் வீரமிக்க நபர்களாக உங்களால் நிற்க முடியாது. ஏனெனில், உங்கள் செயல்கள் உங்கள் வாக்குறுதியை பொய் என நிரூபித்து விடும்.

எனவே உங்களிடம் ஒரு தூய மாற்றத்தை உருவாக்குங்கள். பணி செய்யுங்கள். ஏனெனில், இது உரையாடும் நேரமல்ல. உங்கள் அமைப்புகளை உறுதியாக்குங்கள். மார்க்கத்திற்காக தியாகம் செய்யுங்கள். மனித குலத்திற்கு சேவை செய்யுங்கள்.

இறுதியாக ஹுஸூர் (ரலி) கூறினார்கள்: ஆதம் (அலை) முதல் முஹம்மது (ஸல்) வரை ஆன்மிக ஜமாஅத்துகளுக்கு இறைவன் எந்த வழிமுறையை வகுத்திருந்தானோ நமக்கும் அதேதான். இறைவன் இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு எதிரி அல்ல ; மூஸா நபி (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு எதிரி அல்ல ; ஈஸா (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு எதிரி அல்ல. மேலும் முஹம்மது (ஸல்) அவர்களின் ஜமாஅத்திற்கு எதிரி அல்ல. அவர்கள் விழுந்த உலைகளில் நீங்கள் விழாத வரை அவர்கள் சுமந்த துன்பங்களை நீங்கள் சுமக்காத வரை அவர்கள் அறுபட்ட ரம்பத்தில் நீங்கள் அறுபடாத வரை நீங்கள் ஒருபோதும் வெற்றியடைய முடியாது. இறைவனுக்காக மரணிப்பதிலேயே வாழ்வு உள்ளது.

ஹுஸூர் (ரலி) அவர்களின் இந்த உரை ஒரு மணிநேரம் இருந்தது. இதை என்னுடைய வார்த்தைகளில் சுருக்கமாக முன்வைத்துள்ளேன்.

(எளியவன் பஷீர் அஹ்மது முபல்லிஃக், டெல்லி)

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான்,

அக்டோபர் 2, 1946)

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் செப்டம்பர் 22, டெல்லி வருகை தந்தார்கள்**

தினமும் மக்ரிப் இஷா தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் சபையில் அமர்ந்து நல்ல விஷயங்களை கூறுவார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் செப்டம்பர் 27 அன்று ஜுமுஆ தொழுகையை தரியா கன்ஞ் எனும் இடத்தில் ஜமாஅத் பள்ளிவாசலில் தொழ வைத்தார்கள்.

குத்பாவில் நபிமார்களின் ஜமாஅத்தைப் போன்று தற்காலத்தில் ஜமாஅத்திற்கு தியாகம் செய்வதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹுஸூர் (ரலி) அவர்கள் என்னவெல்லாம் கூறினார்களோ அவற்றை என்னுடைய வார்த்தைகளில் சுருக்கமாக முன்வைக்கின்றேன்.

ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

நமது உதாரணம் மற்ற முஸ்லிம்களுடன் பொருந்துவதில்லை. தமது அடிப்படை நோக்கத்தை விட்டு விலகி விட்ட ஜமாஅத்துகளை சேர்ந்தவர்கள் அல்ல இறைவன் நம்மிடத்தில் தூதரை அனுப்பியிருக்கின்றான் என்பது நமது வாதமாகும். அதாவது, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை அனுப்பியது போன்றும், ஹஸ்ரத் ஈஸா(அலை) அவர்களை அனுப்பியது போன்றும்,, ஹஸ்ரத் ராமர்(அலை) அவர்களை அனுப்பியது போன்றும், ஹஸ்ரத் புத்தர் (அலை) அவர்களை அனுப்பியது போன்றும்,ஹஸ்ரத் ஜோராஸ்டர் (அலை) அவர்களை அனுப்பியது போன்றும் இறைவன் நம்மிடத்தில் தூதரை அனுப்பியுள்ளான் என்பது நமது வாதமாகும். எனவே நமக்கு மற்றவர்களுடன் என்ன ஒப்பீடு இருக்க முடியும்? தூதருடன் தொடர்பு கொண்டிருக்கும் ஜமாஅத்திற்கும், தூதரை விட்டு விலகி விட்ட ஜமாஅத்துகளுக்கும் இடையில் ஒப்புமையே இருக்க முடியாது.

நம்முடைய உதாரணம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஜமாஅத்துடன் இருக்கின்றது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஜமாஅத்துடன். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஜமாஅத்துடனானது. மற்ற சமுதாயங்களுடன் நம்மை ஒப்பீடு செய்வது நமக்கு இழிவாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இழிவாகும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு.

இதன் தொடர்ச்சியாக கூறுகின்றார்கள்:

ஸஹாபா பெருமக்கள் தங்களுடைய வாழ்வை எவ்வாறு தியாகம் செய்தார்கள்?தங்களுடைய (சொந்த) பணி முக்கியத்துவம் வாய்ந்தது என்று எண்ணம் கூட கொள்ளவில்லை. நாங்கள் மனைவி,மக்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று நாம் கூறிவிடுகின்றோம். ஸஹாபிகளுக்க மனைவி மக்கள் இருக்கவில்லையா? அவர்களுக்கு வயிறு இருக்கவில்லையா? இருந்தது என்றால் பிறகு இறைவனிடம் நாம் எங்களுக்கு மனைவி குழந்தை இருந்ததால் தியாகத்தில் குறைவு ஏற்பட்டு விட்டது என்று கூறமுடியாது. இறைவன் ஆயிரக்கணக்கான மக்களின் முன்னுதாரணத்தை நமக்கு காண்பித்து இவர்களுக்கு மனைவி குழந்தைகள் இல்லையா? என்று கூறிவிடுவான். அவர்களுக்கு இது தடையாக இருக்காதபோது நமக்கு எவ்வாறு தடையாக இருந்து விட்டது. ஸஹாபிகளுக்கு ஏற்படாத எந்த துயரம் இன்று பணியாளர்களுக்கு ஏற்பட்டு விட்டது. சில ஸஹாபிகள் அடிமைகளாக இருந்தனர். 24 மணி நேரம் வேலை செய்து வந்தார்கள். இந்த அடிமை ஸஹாபிகளின் எஜமானன் அவர்களை தொழுவதில் இருந்து தடுத்தார்கள். தப்லீஃக் செய்வதிலிருந்து தடுத்தார்கள். அவர்கள் தடுக்க மட்டும் படவில்லை. இந்த பணி செய்ததால் அடிக்கவும்பட்டார்கள். முன்னவர்களுக்கு ஏற்படாத எந்த விஷயம் நமக்கு மட்டும் ஏற்பட்டு விட்டது.

நபிமார்களின் ஜமாஅத்தில் இணைவதன் பொருள் தியாகங்கள் செய்ய வேண்டும். நம்முடைய ஒரு நபரின் நேரம் கூட வீணாகக் கூடாது. நம்முடைய அதிகப்படியான நேரம் மார்க்கத்தை பரப்புவது போதனைகளில் செலவிடப்பட வேண்டும். நம்முடைய சபைகளில் மார்க்கப் பேச்சுகள் அதிகமாகப் பேசப்பட வேண்டும். நம்முடைய தொழுகைகள் மற்றவர்களின் தொழுகைகளில் வித்தியாசம் இருக்க வேண்டும். நான் அதிகமான மக்களைப் பார்த்து இருக்க வேண்டும். வேகம் வேகமாக தொழுகின்றார்கள். அதேபோன்று பொருள் தியாகம் நமது பொருள் தியாகம் இந்த வகையில் உள்ளதா? சந்தாவில் சோம்பேறித்தனம், சிலர் கொடுப்பதே இல்லை. சிலர் குறைவாக கொடுக்கின்றார்கள். சிலர் தன்னுடைய வருமானத்தை குறைவாக எழுதுகின்றார்கள்.

ஹுஸூர் (ரலி) அவர்கள் குறிப்பாக டெல்லி ஜமாஅத்திற்கு கூறினார்கள்:

இந்தியாவின் தலைநகரம் என்பதால் இங்குள்ள மக்கள் மீது பொறுப்பு உள்ளது. தலைநகரம் என்பதால் இங்கு சென்னை மும்பை உத்தரப்பிரதேசம் பஞ்சாப் எல்லைப்பகுதிகளிலிருந்து மக்கள் வருகின்றார்கள். வரக் கூடிய மக்கள் உலகத் தாக்கங்களை எடுத்துச் செல்வதுடன் ஜமாஅத்தின் மார்க்கத் தாக்கங்களையும் எடுத்துச் செல்லட்டும். எனவே இங்குள்ள மக்கள் பித்தாக தப்லீஃக் செய்யட்டும். டெல்லி ஜமாஅத் தங்களுடைய அந்தஸ்தை புரிய வேண்டும் என்று அவர்களுக்க அறிவுரை வழங்குகின்றேன். இங்கு மகத்தான வலிமார்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். பிறகு இது இந்தியாவின் தலைநகரமும் ஆகும். மற்றவர்கள் அறியாமையில் இருக்கும் இந்தக் காலத்தில் தொண்டாற்றுவதற்கு நமக்கு வாய்ப்பளித்தது இறைவனின் அருளாகும். மற்றவர்கள் வந்து நன்மையின் மதிப்பு குறைவதற்கு முன்பு இறைவனின் நற்கூலியை சேகரிக்க வேண்டும். எனவே தன்னுள் தூய மாற்றத்தை உருவாக்குங்கள். இறைவனிடம் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். மேலும் முழு முயற்சி செய்யுங்கள். இதனால் இறைவனின் உயிர்த் தியாக வீரர்களில் உங்கள் பெயர் எழுதப்படட்டும்.

மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை கோதி 8 பார்க் ரோட்டில் ஹுஸூர் (ரலி) அவர்கள் தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு வருகை தந்திருந்த அஹ்மதி அல்லாத சில நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பை அளித்தார்கள். பின்னர், ஹுஸூர் (ரலி) அவர்கள் ஒரு திருமணத்தை நடத்தினார்கள்.

நிக்காஹ்வில் ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உலகின் அனைத்து அமைதியும், ஒழுக்கமும் திருமணத்தை சார்ந்துள்ளது. வெளிப்படையாக இந்த அறிவிப்பு சாதாரணமானதாகத் தோன்றினாலும் உண்மையில் முழு உலகத்தின் அரசியல், அரசு, பொருளாதார நிலை ஆகியவை திருமணத்தைச் சார்ந்தது. திருமண சடங்கு என்பது அனைத்து நாடுகளிலும் உள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சி கொண்டாடப்படுகிறது. சில இடங்களில் பாடல்கள் ஒலிக்கப்படுகின்றன. இந்துக்கள் மத்தியில் இனிப்பு பொம்மைகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இது ஒரு மகிழ்ச்சியான சந்தர்ப்பம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இஸ்லாம் இந்த நிகழ்வை மகிழ்ச்சிக்கான சந்தர்ப்பமாக மட்டும் அறிவிக்காமல் ஆண்களும், பெண்களும் இதை உன்னிப்பாக கவனிக்குமாறு கூறியுள்ளது.

இத்திருமணத்தால் ஆயிரம் வகையான சிறப்புகள் அல்லது குறைபாடுகள் ஏற்படக் கூடும் என்று கூறியுள்ளது.

ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நபிமார்களை பெண்கள் பெற்றெடுக்கின்றார்கள். நபிமார்களின் எதிரிகளையும் பெண்களே பெற்றெடுக்கின்றார்கள்.ஃபிர்அவ்னின் தாய், தந்தையுடைய திருமணம் எவ்வளவு ஆரவாரமாக நடந்து இருக்கும்! லட்சக்கணக்கான ரூபாய்கள் வரதட்சணையாக கொடுக்கப்பட்டிருக்கும்! இளவரசரின் திருமணம் நடக்கின்றது என்று நாடு முழுவதும் விளக்கேற்றப்பட்டிருக்கும்! ஆனால், அந்த ஆடம்பரமான திருமணத்தால் என்றென்றும் சபிக்கப்பட்டிருக்கக் கூடிய மனிதன் பிறப்பான என்று எவரும் யூகம் கூட செய்திருக்க மாட்டார்கள்.

மறுபுறம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் பெற்றோருடைய திருமணத்தில் ஐந்து ஏழு மனிதர்களுக்கு உணவு அளித்திருப்பது தான் அவர்களுடைய அதிகபட்ச மகிழ்ச்சியாக இருந்திருக்கும். நாடு முழுவதும் விளக்கேற்றுவது என்ன? எந்த நகரத்திலும் விளக்கேற்றபட்டு இருக்காது. மாறாக, எந்த ஊரிலும் விளக்கேற்றப்பட்டு இருக்காது. மாறாக, அவர்கள் சுயம் தங்களுடைய வீட்டிலும் கூட விளக்கேற்றியிருக்க மாட்டார்கள். ஆனால், எந்த மனிதருக்காக உலகின் அனைத்து மூலைகளில் இருந்தும் அருட்கள் வேண்டப்படுமோ அத்தகைய மனிதர் இந்த அமைதியான திருமணத்தின் விளைவாக பிறப்பார் என்று எவரால் கூறியிருக்க முடியும்.?

ஆகையால் தான் இஸ்லாம் நிக்காஹ் சந்தர்ப்பத்தின் போது இந்த அறிவுரையை வழங்கியுள்ளது. அதாவது இந்த செயல் வருங்காலத்தில் மிகப் பெரிய விளைவை ஏற்படுத்தக் கூடியது; ஆகையால் துஆக்கள் செய்தவாறு இதை நிறைவேற்றுங்கள் என்று அறிவுரை கூறுகின்றது.

சுருக்கமாக கூறினால் இது மிகவும் முக்கியமான சந்தர்ப்பமாகும். இறைவன் பாதுகாவலானாகவும், உதவியாளனாகவும் ஆகுவதற்கு துஆ செய்தவாறு இந்த விஷயத்தில் செயல்படுங்கள்.

இறுதியில் துஆ செய்தார்கள். பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனக்கு தலைவலி இருக்கின்றது. எனவே அதிக நேரம் அமர இயலாது.

(எளியவன், பஷீர் அஹ்மது இயக்கத்தின் முபல்லிஃக், டெல்லி - அல்ஃபஸ்ல் தினசரி நாளிதழ், 02 அக்டோபர்- 1946)

தமிழாக்கம்

மவ்லவி ஸாஹிர் ஹுஸைன்

* * * * *

# ஜுமுஆ பேருரை

**பனூ ஃபஸாரா படையெடுப்பு & அப்துல்லாஹ் பின் அதீக் படையெடுப்பு மற்றும் மதீனாவில் குழப்பத்தை பரவச் செய்த யூதரான அபூ ராஃபி கொலை செய்யப்பட்ட சூழல்கள் மற்றும் சம்பவங்களைக் குறித்த விளக்கம்**

நான் ஏற்கனவே கூறியது போன்று உம்மு கிர்ஃபா கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் குறித்து சில வரலாற்று நூல்களில் விநோதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய போதனையின் ஒளியிலும் இஸ்லாமிய அமலின் ஒளியிலும் ஏற்றுக் கொள்ள சாத்தியமற்றதாக அது உள்ளது

ஒரு சமுதாயத்தின் அநீதி, அக்கிரமத்துக்கான சான்று கிடைக்கிறது என்று ஒரு வரலாற்றாசிரியர் ஒரு சம்பவத்தை விட இன்னொரு சம்பவத்திற்கு முன்னுரிமை அளித்து அதை தம் நூலுக்கு அழகூட்டுவதாக ஆக்குகிறார் என்றால் உண்மையில் அந்த வரலாற்றாசிரியர் நடுநிலையான ஆராய்ச்சியாளர் என்று கருதப்படுவதற்கு உரிமையற்றவராக இருக்கின்றார்

இஸ்லாமோ போர்க் களத்திலும் கூட பெண்ணை கொலை செய்வதை விட்டு கடுமையாக தடுக்கின்றது. இதைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். பெண்களை கொலை செய்யக் கூடாது என்று கூறியிருக்கின்றார்கள். ஹதீஸில் வருகின்றது: ஒரு சந்தர்ப்பத்தில் போர்க் களத்தில் ஓர் எதிரி சமுதாயத்தின் பெண் கொலை செய்யப்பட்டு கிடந்தாள். அந்த பெண் எந்த சூழ்நிலையில் யாரால் கொலை செய்யப்பட்டாள் என்று தெரியவில்லை. அவ்வாறிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் அதைக் கண்டு கடும் கோபமுற்றார்கள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 ஜனவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **10ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவுக்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த போர்கள் மற்றும் படையெடுப்புகள் பற்றிய குறிப்பு கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அதில் பனூ ஃபஸாராவுக்கு எதிராக நிகழ்ந்த ஒரு படையெடுப்பை பற்றிய குறிப்பும் இருந்தது. பனூ ஃபஸாராவுக்கு எதிரான போர் நடவடிக்கையில் உம்மு கிர்ஃபா என்பவள் கொல்லப்பட்ட சம்பவமும் வரலாற்றில் காணக் கிடைக்கின்றது. சில வரலாற்று ஆசிரியர்கள் இதை எவ்வாறு எழுதியுள்ளனர் என்றால் அது உண்மைக்கு எதிரான சம்பவம் என்று தெளிவாக வெளிப்படுகின்றது. தபக்காத்துல் குப்ராவில் எழுதப்பட்டுள்ளதாவது, ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு வியாபாரத்திற்காக சிரியாவை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் வியாபார பொருட்களும் இருந்தன. அவர்கள் வாதியல் குராவுக்கு அருகில் சென்றடைந்தபோது, பனூ ஃபஸாராவுடைய கிளைக்கோத்திரமான பனூ பத்ர்-ஐ சார்ந்த சில மக்கள் ஸைது பின் ஹாரிஸா அவர்களையும், அவர்களின் தோழர்களையும் அடித்துதைத்தனர்; அவர்களிடமிருந்த பொருட்களை பறித்துக் கொண்டனர். ஸைது (ரலி) அவர்கள் உடல்நலம் தேறிய பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி அந்த சம்பவத்தைப் பற்றி கூறினார்கள். எவர்கள் தாக்குதல் நடத்தினார்களோ அவர்களை நோக்கி பெருமானார் (ஸல்) அவர்கள் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். (புறப்பட்டுச் சென்ற) இந்த முஸ்லிம்கள் பகலில் மறைந்து கொள்வார்கள். இரவில் பயணிப்பார்கள். ஆனால், பனூ பத்ர்-க்கு இவர்களைப் பற்றிய செய்தி கிடைத்துவிட்டிருந்தது. பிறகு ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களும் அவர்களின் தோழர்களும் காலை நேரத்தில் அம்மக்களிடம் சென்றடைந்தார்கள். அல்லாஹு அக்பர் என்று முழக்கமிட்டு அங்கிருந்த மக்களை சூழ்ந்து கொண்டனர். உம்மு கிர்ஃபா என்றழைக்கப்பட்ட அப்பெண்ணின் அசல் பெயர் ஃபாத்திமா பின்த் ருஃயா பின் பத்ர் ஆகும். அவளுடைய மகள் ஜாரியா பின்த் மாலிக் பின் ஹுஸைஃபா பின் பத்ர் ஆகும். இவ்விருவரும் கைது செய்யப்பட்டார்கள். பிறகு அந்தப் பெண்ணை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நன்கொடையாக கொடுத்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பெண்ணை ஹஸம் பின் அபீ வஹப் என்பவருக்கு அன்பளிப்பாக கொடுத்து விட்டார்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று உம்மு கிர்ஃபா கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் குறித்து சில வரலாற்று நூல்களில் விநோதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய போதனையின் ஒளியிலும் இஸ்லாமிய அமலின் ஒளியிலும் ஏற்றுக் கொள்ள சாத்தியமற்றதாக அது உள்ளது. எவ்வாறு இருப்பினும், சில நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

கைஸ் பின் மஹ்ஸர் என்பவர் உம்மு கிர்ஃபா எனும் ஒரு மூதாட்டியை கொல்ல வேண்டும் என்று உறுதி கொண்டார். கைஸ் அவர்கள் மிகவும் கொடூரமாக அவளை கொலை செய்தார். அவளுடைய இரு கால்களையும் கயிறுகளால் பிணைத்து இரண்டு ஒட்டகங்களில் கட்டினார். பிறகு ஒட்டகங்களை விரட்டினார். அவை ஓடிய போது அந்தப் பெண்ணை துண்டாக கிழித்து விட்டன. கைஸ் அவர்கள் இன்னும் இரண்டு நபர்களையும் கொலை செய்தார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் தமது போர் நடவடிக்கை முடிந்து திரும்பி வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டுக் கதவை தட்டினார்கள். அன்னார் தமது உடையை இழுத்தவாறு ஸைதின் பக்கம் வந்தார்கள்; அவர்களை முத்தமிட்டார்கள்; நலம் விசாரித்தார்கள். அல்லாஹ் தமக்கு வழங்கிய வெற்றியைக் குறித்து ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கூறினார்கள்.

இந்த சம்பவத்தில் அந்தப் பெண் கிழிக்கப்பட்டு இரண்டு துண்டுகளாக ஆக்கப்பட்டாள் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை மிகவும் ஆதாரத்துடன் அழகிய முறையில் எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் (ரலி) இவ்வாறு எழுதுகிறார்கள்:

தற்போது நாம் கூறியது போன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் படையெடுப்புக்கு பதிலாக இப்னு ஸஅது (ரலி) அவர்கள் எப்படிப்பட்ட ஒரு படையெடுப்பை குறித்து எடுத்துரைத்துள்ளார்கள் என்றால் அதில் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் அமீராக இருந்தார்கள். அதாவது இப்னு ஸஅது (ரலி) அவர்கள் இந்த படையெடுப்பில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பதிலாக ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அமீராக எடுத்துரைக்கின்றார்கள். அது பற்றிய விபரத்திலும் ஓரளவுக்கு கருத்து வேறுபாடு கொண்டவாறு பின்வருமாறு எழுதுகிறார்கள்: இந்தப் போர் நடவடிக்கை வடபகுதியில் வாதியல் குராவுக்கு அருகில் குடியிருந்த பனூ ஃபஸாராவுக்கு எதிராக இருந்தது. அவர்கள் முஸ்லிம்களுடைய ஒரு வியாபாரக் குழுவின் மீது தாக்குதல் நடத்தி அதன் அனைத்து செல்வங்களையும் பொருட்களையும் பறித்துக் கொண்டனர்.குழப்பம் விளைவிக்கும் இக் கூட்டத்தின் உயிர்நாடியாக ஒரு கிழவி இருந்தாள். அவளுடைய பெயர் உம்மு கிர்ஃபா என்பதாகும். அவள் இஸ்லாத்தின் கடும் எதிரியாக இருந்தாள். அந்த பெண் போரில் பிடிக்கப்பட்டபோது, ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் குழுவில்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 13- 20 FEB 2025 Issue No. 7 & 8

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இருந்த கைஸ் எனும் பெயருடைய ஒருவர் அந்தப் பெண்ணை கொன்று விட்டார். இப்னு ஸஅது அவர்கள் இந்த கொலை கதையை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

அதாவது, இந்த வரலாற்றை எழுதக் கூடியவர் கூறுகிறார்: அந்த பெண்மணியுடைய இரு கால்களையும் இரு வேறு ஒட்டகங்களில் கட்டினார்கள். பிறகு அந்த ஒட்டகங்களை வெவ்வேறு திசைகளில் விரட்டினார்கள். அதன் விளைவாக அந்த பெண்மணி நடுப்பக்கமாக இரண்டாகக் கிழிந்து இரண்டு துண்டுகளாக ஆகிவிட்டாள். அதற்குப் பிறகு அந்த பெண்ணினுடைய மகள் ஸல்மா பின் அக்வஃ அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டன. இதே கதையை ஓரளவுக்கு சுருக்கமாகவும் வேறுபாட்டுடனும் இப்னு இஸ்ஹாக் அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள்.

இந்த அறிவிப்பின் அடிப்படையில் கிழக்கத்திய வரலாற்றாசிரியரான சர் வில்லியம் முயர் என்பவர் - இவர் மற்ற ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களை காட்டிலும் அதிகமாக விளக்கம் எழுதும் பழக்கம் உடையவராக இருக்கிறார். அவர் இந்த சம்பவத்தை முஸ்லிம்களின் கொடூரமான ஆன்மாவுக்கு உதாரணமாக மிக ஆர்வத்தோடு தம் நூலுக்கு அழகூட்டி எழுதியிருக்கிறார். இன்னும் கூறுவதென்றால் சர் வில்லியம் முயர் இதை தனது நூலில் எழுதியிருப்பதற்கு காரணம் இந்த போர் திட்டத்தில் முஸ்லிம்கள் ஓர் அநீதியான செயலுக்கு உள்ளானார்கள் என்று எழுதி இருக்கிறார். முயர் எழுதுகிறார்:

அவ்வருடம் முஸ்லிம்கள் பல படையெடுப்புகளுக்காக மதீனாவில் இருந்து புறப்பட நேர்ந்தது. ஆனால், அவை அனைத்தும் குறிப்பிடத் தகுந்தது கிடையாது. ஆயினும் அவற்றில் ஒரு படையெடுப்பை எடுத்துரைப்பதிலிருந்து என்னை நான் தடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், அதனுடைய முடிவில் முஸ்லிம்கள் சார்பாக மிகவும் அநீதியான ஒரு செயல் நிகழ்ந்தது.

இது முயர் ஸாஹிப் -ன் கூற்று ஆகும். இதன் உண்மை நிலை பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

ஒரு சமுதாயத்தின் அநீதி, அக்கிரமத்துக்கான சான்று கிடைக்கிறது என்று ஒரு வரலாற்றாசிரியர் ஒரு சம்பவத்தை விட இன்னொரு சம்பவத்திற்கு முன்னுரிமை அளித்து அதை தம் நூலுக்கு அழகூட்டுவதாக ஆக்குகிறார் என்றால் உண்மையில் அந்த வரலாற்றாசிரியர் நடுநிலையான ஆராய்ச்சியாளர் என்று கருதப்படுவதற்கு உரிமையற்றவராக இருக்கின்றார். மற்ற சம்பவங்களை நான் விட்டு விடுகின்றேன். இதை மட்டும் எடுத்துக் கொள்கிறேன் என்று இதை அவரே எழுதி இருக்கின்றார். இதற்கான பொருள் என்னவென்றால், அவர் நடுநிலையற்றவர் என்பதும், நடுநிலையாக ஆய்வு செய்யக் கூடியவர் கிடையாது என்பதும் ஆகும். ஏனெனில், எவர் நடுநிலையற்ற முறையில் நடந்து கொள்வாரோ அவர் அந்த அநீதியின் சம்பவத்தில் ஏதாவது உண்மை இருக்கிறதா? இல்லையா? என்பதை பற்றி ஆய்வு மேற்கொள்வார் என்று அவரைப் பற்றி நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், அவ்வாறு செய்தால் அவருடைய கையில் இருந்து ஒரு சான்று சென்று விடுகிறது. எவ்வாறிருப்பினும், முயர் ஸாஹிப் அவர்கள் இந்த சம்பவத்தை குறிப்பான ஆர்வத்துடன் நூலில் எடுத்துரைத்துள்ளார். ஆனால், அந்த சம்பவம் முற்றிலும் தவறானது என்றும், அடிப்படையற்றது என்றும் ஆதாரப்பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் இரு வகையிலும் போலியானது என்பதையும் தற்போது நான் நிரூபிப்பேன். அதன் மூலமாக இவ்விஷயங்கள் வெளிப்பட்டு விடும்.


அறிவுப்பூர்வமாக புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ஒரு பெண் மீது கொலை குற்றம் எதுவும் கிடையாது. அவள் கைது செய்யப்படுகிறாள். பொறுமையாக அவள் கொல்லப்படுகிறாள். அதுவும் எந்த வழிமுறையில் அவர் கொல்லப்படுகிறாள் என்றால் அது பற்றி அறிவிப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது இஸ்லாமிய போதனையை விட்டு விலகிய ஒரு விஷயமாகும். இஸ்லாமோ போர்க் களத்திலும் கூட பெண்ணை கொலை செய்வதை விட்டு கடுமையாக தடுக்கின்றது. இதைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். பெண்களை கொலை செய்யக் கூடாது என்று கூறியிருக்கின்றார்கள். ஹதீஸில் வருகின்றது: ஒரு சந்தர்ப்பத்தில் போர்க் களத்தில் ஓர் எதிரி சமுதாயத்தின் பெண் கொலை செய்யப்பட்டு கிடந்தாள். அந்த பெண் எந்த சூழ்நிலையில் யாரால் கொலை செய்யப்பட்டாள் என்று தெரியவில்லை. அவ்வாறிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் அதைக் கண்டு கடும் கோபமுற்றார்கள். இது போன்ற செயல் இனிமேல் நிகழக் கூடாது என்று ஸஹாபிகளிடம் வலியுறுத்திக் கூறினார்கள். எந்தவொரு பெண்ணையும் கொலை செய்யக் கூடாது என்று கூறினார்கள். அவ்வாறே, பெருமானார் (ஸல்) அவர்கள் ஏதேனும் ஒரு படைப் பிரிவை வழி அனுப்பி வைக்கும்போதெல்லாம் பொதுவாக ஸஹாபிகளுக்கு அறிவுரை கூறும்போது எந்த பெண்ணையும்,குழந்தையையும் கொலை செய்யக் கூடாது என்று அறிவுரை செய்வார்கள்.

இந்த அடிப்படையான வழிகாட்டல்கள் இருக்கும்போது, ஸஹாபிகளை குறித்து, அதுவும் ஸஹாபிகளில் பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டு நபராகிய ஸைது பின் ஹாரிஸா (ரலி) என்ற ஸஹாபியை குறித்து அவர்கள் ஒரு பெண்ணை இந்த வழிமுறைப்படி கொலை செய்தார்கள் என்றோ கொலை செய்ய வைத்தார்கள் என்றோ இப்னு ஸஅது அவர்கள் எடுத்துக் கூறியிருப்பது ஒருபோதும் ஏற்க தகுந்தது கிடையாது. அறிவிப்பில் அந்த கொலைச் செயல் ஸைது அவர்களை நோக்கி சுட்டிக் காட்டப்படவில்லை. மாறாக, மற்றொரு முஸ்லிமின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும், இந்த சம்பவம் ஸைது (ரலி) அவரகள் படைத்தளபதியாக இருந்த போது, நிகழ்ந்ததாகும். ஆகவே எவ்வாறு இருப்பினும், அதன் கடைசி பொறுப்பாளியாக ஸைது (ரலி) அவர்கள்தான் கருதப்படுவார்கள். ஸைது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையை அறிந்தும் கூட இதுபோன்ற ஒரு விஷயத்திற்கு அவர்கள் அனுமதி கொடுத்தார்கள் என்று ஸைது (ரலி) அவர்களைக் குறித்து கருதுவது ஒருபோதும் ஏற்கத் தகுந்தது கிடையாது. ஒரு பெண் ஏதேனும் குற்றம் செய்திருந்தால் அந்தக் குற்றத்திற்கான தண்டனையை பெறுவாள். எந்த ஒரு மார்க்கச் சட்டமும், எந்தவொரு நாட்டின் சட்டமும் பெண் குற்றம் செய்திருக்கும்போது தண்டனையை விட்டு அவளை விதிவிலக்காக ஆக்கியிருக்கவில்லை. நாள்தோறும் பெண்களுக்கு வழங்கப்படும் தண்டனைக் குறித்தும், இன்னும் கூறுவதென்றால், கொலை குற்றத்திற்காக தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட சம்பவத்தைக் குறித்தும் (செய்திகள்) வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால், மார்க்கப் பகைமையின் காரணமாகவோ அல்லது போரில் கலந்து கொண்டதன் காரணமாகவோ ஒரு பெண்ணை கொலை செய்வது என்பது, அதுவும் அறிவிப்பில் எடுத்துரைக்கப்பட்டிருப்பது போன்று இந்த வழிமுறைப்படி கொலை செய்வது என்பது

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம்......

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad